32 D

# NINTH READER

TAMIL

ஒன்பதாம் பாட புத்தகம்

10 JUN 1916
MADRAS.

BY

C. R. NAMASIVAYA MUDALIAR,

*Lecturer in Tamil, Madras College for Women*

*With an Introduction by*

REVEREND M. PHILLIPS, PH. D.

MADRAS:

C. COOMARASAWMY NAIDU & SONS

1915 [Price, 8 As.

TB
031,6 9
N15
177533

# ஒன்பதாம் பாட புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
19 JUN 1916
MADRAS.

சென்னை - துரைத்தன
மாதர் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும்
'நல்லாசிரியன்' பத்திராதிபரும் ஆகிய
கா. நமச்சிவாய முதலியார்
எழுதியது

ரெவரெண்ட் டாக்ட்டர் பிலிப்ஸ் துரையவர்கள்
எழுதிய முகவுரையைக் கொண்டது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை :
வி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
ரெஜிஸ்தர் செய்தது] 1915 [விலை 8 அணா

PRINTED AT

THE 'CAXTON PRESS'

MADRAS, E.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JUN 1916
MADRAS.

# INTRODUCTION

I have looked over the 8th and 9th Tamil Readers by Mr. C. R. Namasivaya Mudaliar. They are made up chiefly of selections from the Prose and Poetry of well known ancient and modern authors. There are selections from the Kural, Avvai's Sayings, Naladiyar, Thayumanar, Panchatantram, Proverbs and Moral treatises. There is a good sketch of the life of Avvai and of Harischandra. There are interesting stories of travels and tit-bits by various authors. The selections of both Poetry and Prose are free from any immoral allusions. The style of the prose is simple. It is free from long compounds and archaic words. It is such a prose as should be cultivated in schools and colleges. Mr. Namasivaya deserves all possible encouragement.

MADRAS,
*3rd September* 1906.

*M. PHILLIPS, PH. D.*

# NOTE

The Eighth and Ninth Readers of this series are intended for the use of the pupils of the IV and V Forms of Secondary Schools. They include a large number of selections in Prose and Poetry from various authors. These have been arranged on a graduated scale, both in matter and in style.

The readers will be found too big to be completed in the course of a year They have been specially so designed, so as to afford a free scope to teachers for selecting portions in accordance with the varying standards of efficiency of the classes in different schools. It would besides, enable teachers to vary the selection of lessons alternately every year, for the benefit of boys who are detained in the same class for two consecutive years.

In the selection of poetical pieces care has been taken to introduce the more important metres, by way of indroducing the pupils to the elements of Tamil scansion.

In accordance with the present views of the Educational authorities, more pages have been devoted to Prose than to Poetry. Prose extracts from various authors, both ancient and modern, are given, so that pupils may have a variety of models before them in their early attempts to form a style of their own. But the selections themselves have been made with particular regard to si mplicity of style and directness of expression.

At the end of the book a Dramatic Interlude is given, being a scene from the story of King Kumana, that great patron and lover of Tamil Literature. This may be enacted as a more serious sort of action song on occasions of public entertainment.

Opportunity is taken to acknowledge indebtedness to the following gentlemen who have kindly permitted extracts to be taken from their valuable writings and included in the Readers.

1. SRIMAN PANDITHURAI THEVAR, AVL., *Zemindar of Palavanattam, and Chairman, Tamil Sangham, Madura.* Avoiding slander — Pannûl Thirattu (புறங்கூறாமை — பன்னூற்றிரட்டு).
2. MAHAMAHOPADHYAYA SWAMINATHA IYER AVL., *Tamil Pandit, Presidency College, Madras.* — Buddhistic Principles — a part (புத்த தருமம் — ஒரு பாகம்.)
3. M. R. Ry. T. CHELVAKESAVARAYA MUDALIAR AVL., M. A., *Tamil Lecturer, Pachaiyappa's College, Madras.* — Hygiene, (சுகாதார தருப்பணம்.)
4. M. R. Ry. K. S. GOPALACHARIAR AVL., *Head Tamil Pandit, Christian College, Madras.*—The Dignity of Learning — (புலவர் சேர்மை) Bhartruhari.

MADRAS,
*6th September*, 1906.

C. R. N.

600 008.

# பொருளடக்கம்

## செய்யுட் பாடங்கள்


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| I | குசேலன் (துவாரகைக்குச் செல்லுதல்)... (வல்லூர் தேவராஜப்பிள்ளை) | 1—12 |
| II | சீட்டுக் கவிகள். ... ... (அஷ்டாவதானம்-சரவணப் பெருமாள் கவிராயர்) | 12—15 |
| III | திருப்புகழ். .... ... (அருணகிரி நாதர்) | 16—17 |
| IV | தனிப் பாடல்கள். ... ... | 18—23 |
| | காளமேகப் புலவர். ... | 18 |
| | கம்பர். ... ... | 18 |
| | பலவித்துவான்கள். ... | 20 |
| | வேதநாயகம் பிள்ளை. ... | 22 |
| V | பழமொழிவிளக்கம்.... ... | 23—26 |
| VI | குறள். ... ... ... (திருவள்ளுவர்) | 26—28 |
| VII | இரங்கேச வெண்பா.... ... (சாந்தக் கவிராயர்) | 28—29 |
| VIII | குசேலன் (கண்ணனைக்கண்டமை)... (வல்லூர் தேவராஜப் பிள்ளை) | 29—34 |
| IX | நாலடியார். ... ... (ஜைன முனிவர்) | 35—36 |
| X | நளவெண்பா (நளன் மீண்டும் தன் நகர் அடைந்தமை) (புகழேந்திப் புலவர்)... | 37—41 |
| XI | சிவசிவ வெண்பா. ... ... (சென்ன மல்லையர்) | 42 |

| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| XII | புறங்கூறாமை (பன்னூற்றிரட்டு) ... (ஸ்ரீமாந் பாண்டித் துரைத் தேவர்) | 43—44 |
| XIII | புலவர் வறுமை. ... ... (சிறிய-இரத்தினக் கவிராயர்) | 45—48 |
| XIV | பழமொழி. ... ... (முன்றுறையரையர்) | 49—50 |
| XV | கண்ணப்பன் (சீகாளத்திப் புராணம்) (சிவப்பிரகாச சுவாமிகள்) | 51—61 |
| XVI | ஔவையார். ... ... | 62—64 |

வசன பாடங்கள்

| | | |
|---|---|---|
| I | சத்தியம் தலைகாக்கும். ... (கா. நமச்சிவாய முதலியார்) | 65—99 |
| II | இறையனாரகப்பொருள் வரலாறு. (நக்கீரர்) | 100—103 |
| III | நல்லொழுக்கம். ... ... (நல்லூர் ஆறுமுக நாவலர்) | 103—112 |
| IV | சுகிர்லலாபம் ... ... (தாண்டவராய முதலியார்) | 113—136 |
| V | எரியும் மெழுக்குவர்த்தியில் அறியும் விஷயங்கள் .... ... | 136—141 |
| VI | பௌத்த தருமம் (ஒருபகுதி) ... (மஹாமஹோபாத்தியாயர்-வே. சாமிநாத ஐயர்) | 141—149 |
| VII | சுகாதார தருப்பணம் ... (திருமணம்-செல்வகேசவராய முதலியார், எம்.ஏ.) | 149—158 |
| VIII | புலவர் நேர்மை ... ... (கா. ஸ்ரீ. கோபாலா சாரியார்) | 158—168 |
| IX | குமணன் (ஒருபாகம்) ... (கா. நமச்சிவாய முதலியார்) | 171—176 |

# ஒன்பதாம் பாட புத்தகம்

## 1. குசேலன்

### (துவாரகைக்குச் செல்லுதல்)

முத்தி நகரங்கள் எழில் முன்னுற விளங்குஞ் சிறப்பினையுடையது உத்தரமதுரை. அது நிலமாமகட்கு முகமென விளங்குவது.

அந்நெடு நகரின் பாங்கர் அந்நலா ரூடி நீத்த
தந்நெடு மணிக்க லங்கள் தடமறு குற்று முற்றத்
துன்னிய விருளை மேயத் துறக்கமென் றமரர் நாளும்
மன்னியவிமைக்குஞ்சீர்த்தி மாநகர் அவந்தியுண்டால்()

மெத்திய பற்பல் கிழிதுணி யிணைத்து
மெல்லிழைச் சரட்டினாற் பொல்லம்
பொத்திய சிதரே நல்லுடை யாகப்
புனைந்தகா ரணத்தினாற் கடல்சூழ்
எத்திசை யவருங் குசேலனென் றொருபேர்
இட்டழைப் பர்கள்மதக் கலுழி
தத்திய கரடத் தறுகண்மால் யானைத்
தரியலர் கூற்றெனப் பொலிவோய். (2)

திறலியை தவத்திவ் வாறு திகழ்ந்திடுங் குசேல
னென்பான், உறலியை யத்த வத்திற் குதவிசெய்
பாக்கு நாளும், அறலியை கதுப்பி னாளோர் அணங்-
கினை வதுவை செய்தான், மறலிய மன்னர் சென்னி
மணிமுடி யிடறுந் தாளோய். (3)

மாசிலாக் குலத்து வந்தாள் வருவிருந் துவப்ப வூட்டும், நேசமிக் குடையாள் கொண்கன் நினைப் பறிந்தொழுகு நீராள், தேசுறு வாய்மை யுள்ளாள் சினந்திடலென் றுமில்லாள், பேசுதிண் கற்பு வாய்த்-தாள் பெற்றதே கொண்டு வப்பாள் (4)

அருண்மகப் பெறுகி லாருக் கணைகதி நாத்தி யென்று, தெருண்மறை செப்ப லானும் சிறந்ததன் குலநீ டித்துப், பொருண்முயங் கிடுமா றெண்ணும் புந்தியனுத லானும், இருண்மருள் குழலன்னாளோ டிருந்தவக் குசேலன் சேர்ந்தான். (5)

பின்புசின் னாள்கள் செல்லப் பெய்வளை மக்கட் பேற்றின், அன்புறு மார்வ மீட்டும் அடாரத்தன் முயற்சி யாலே, கொன்பெறு கணவற் கூடிக் கூடி நன்குயிர்த்து யிர்த்திட், டின்புறப் பெற்று நின்-றாள் இருபத்தேழ் மைந்தர்ச் சேர. (6)

மலையிட்ட செல்வத் தார்கண் மகிழவோர் மகவுந்தாராள், அலையிட்ட முட்டாட்செய்ய வம்பு-யத் துறைவோ ளோரேழ், தலையிட்ட விருபான் மைந்தர்த் தந்தனன் பெருமையன்றே, சிலையிட்ட தழும்பு வாய்ந்த தெரியலந் தடந்தோள் வேந்தே. (7)

பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரன் முகத்திற் கூட்டிச், சொல்லெலாஞ் சொல்லி நாட்-டித் துணைக்கரம் விரித்து நீட்டி, மல்லெலா மகல வோட்டி மானமென்பதனை வீட்டி, இல்லெலா மிரத்த லந்தோ இழிவிழி வெந்த ஞான்றும். (8)

இருநிலத் தியாவர் கண்ணும் ஏற்பதை யிகழ்-ச்சி யென்ன, ஒருவிய வுளத்தான் காட்டில் உதிர்-ந்து கொள்வாரு மின்றி, அருகிய நீவா ரப்புற்

ருனிய மாராய்ந்தாராய்ந், திருவவொண் ணகத்தாற்
கிள்ளி யெடுத்துடன் சேரக்கொண்டு. (9)

வந்துதன் மனைகைந் நீட்ட வாங்கிமற் றவற்-
றைக் குற்றி, அந்தமெல் லியல்பா கஞ்செய் ததிதிக்-
கோர் பாகம் வைத்துத், தந்ததன் பங்க யின்று
தவலரு முவகை பூத்து, மந்திர மறைகட் கெட்டா
மாலடி நினைந்திருப்பான். (10)

இற்றிவன் வாழ்க்கைத் தன்மை யிருபத்
தேழ்மைந் தருக்கும், மற்றவப் பாகக் கஞ்சி மட்குழி
சியைப்பால் வைத்துப், பற்றுகோ ரிகையான்
மொண்டு வாக்கிப்பற்றுமை கண்டு, வெற் றுடம்பாகி
நிற்பள் மெலிவள்பின் னென்செய் வாளால். (11)

ஒருமகவுக் களித்திடும்போ தொருமகவு
 கைந்நீட்டும் முந்தி மேல்வீழ்ந்
திருமகவுங் கைந்நீட்டும் மும்மகவுங்
 கைந்நீட்டும் என்செய் வாளால்
பொருமியொரு மகவழுங்கண் பிசைந்தழுமற்
 றொருமகவு புரண்டு வீழாப்
பெருநிலத்திற் கிடந்தழுமற் றொருமகவெந்
 நனஞ்சகிப்பாள் பெரிதும் பாவம். (12)

அந்தோவென் வயிற்றெழுந்த பசியடங்கிற்
 றில்லையென அழுமா லோர்சேய்
சிந்தாத கஞ்சிவார்க் கிலையெனக்கன்
 னுயெனப்பொய் செப்பு மோர்சேய்
முந்தார்வத் தொருசேய்மி சையப்புகும்போ
 தினிலொருசேய் முடுகி யீர்ப்ப
நந்தாமற் றச்சேயு மெதிரீர்ப்பச்
 சிந்துதற்கு நயக்கு மோர்சேய். (13)

இவ்வண்ணங் கலாம்விளைக்கும் மைந்தர்களை
நனிநோக்கி யிரங்கி யேங்கிச்
செவ்வண்ணக் கரதலத்தா லணைத்துமடித்
தலத்திருத்திச் சிறப்புச்செய்து
மைவண்ணக் கண்ணீரைத் துடைத்துமுகம்
வெரிந்புறந்தை வந்து மாம்பல்
அவ்வண்ண வாய்முத்தங் கொண்டுநயந்
தோர்விதத்தி லாற்றல் செய்வாள். (14)

அடுத்தமனைச் சிறுனொருவ னின்றுநம
தகங்கறியென் அட்டா ரென்று
தொடுத்துவினு யினனுலைச் சொற்பொருள்யா
த்துதானெச் சுவைத்தன் னுய்நீ
எடுத்துரையென் றிடுமகவுக் குமைக்கிலது
செய்யெனிலென் செய்வா மென்று
மடுத்தவஃ தறிந்திலே னெனமற்றோன்
றுரைத்ததனை மறக்கச் செய்வாள். (15)

வேறுமனைச் சிறுனயின்ற பக்கணங்கண்
டோடிவந்து விழிநீர் வாரச்
சீறுதலி லாதவனை முகம்பார்த்தின்
னுனின்ன தின்று னென்வாய்
ஊறுதலா லிப்பொழுதே செய்தளித்தி
யெனவுடுத்த வுடைதொட் டீர்க்கும்
தேறுதலில் சிறுமகவை யெடுத்துமார்
பிடையணைத்துச் சிந்தை நோவாள். (16)

குண்டலம்மோ திரங்கடகஞ் சுட்டியயல்
மனையார்தங் குழவிக் கிட்டார்
புண்டரிகக் கண்ணன்னு யெனக்குநீ
யிடாதிருக்கும் பொறுமை யென்னே

கண்டெடுத்திப் போதிடெனக் கரைமதலைக்
  கில்லாதான் கடன்றந் தானுக்
கெண்டபச்சொல் வார்த்தையென நாளைக்கு
  நாளைக்கென் றியம்பிச் சோர்வாள். (17)

சிறியசித மணிப்பூணே யன்றிவே
  ரொருபூணச் சேய்கட் கில்லை
வறியமர நாருரியே உடையன்றி
  மற்றுடைகள் மருவ லில்லை.
வெறியபொழிற் றழைத்தஇலை யுண்கலமல்
  லாதுகலம் வேறொன் றில்லை
குறியமனை வயிற்புகுமோ ரெறும்பினுக்கும்
  ஆங்குணவு கொடுத்தற் கில்லை. (18)

இவ்வாறு மிடியென்னும் பெருங்கடலு
  ளழுந்தியுந்தற் கினிமை சான்ற
செவ்வாய்மை யந்தணனை வெறுத்துரையாள்
  அலர்மொழிகள் சிறிதுஞ் செப்பாள்
துவ்வாமை மைந்தர்கள்பால் மறந்துமியற்
  றுளவடன் சுகுண மென்னே
எவ்வாறித் துயர்க்கடனீந் துவமெனுமோ
  ரெண்ணமுளத் தென்று முண்டால் (19)

தரித்திர மிக்க வன்ப்பினை யொடுக்கிச்
  சரீரத்தை யுலர்தர வாட்டும்
தரித்திர மளவாச் சோம்பலை யெழுப்பும்
  சாற்றரு முலோபத்தை மிகுக்கும்
தரித்திரந் தலைவன் தலைவியர்க் கிடையே
  தடுப்பருங் கலாம்பல விளைக்கும்
தரித்திர மவமா னம்பொய்பே ராசை
  தருமிதிற் கொடியதொன் றிலையே (20)

யாதவர் குலத்தில் தோன்றிய வரசர்
யாவர்க்கு மதிபனு மிணையில்
மாதவ னுடன் நீ பலகலைக் கடலை
வாய்மடுத் தனையென வகுப்பார்
ஆதலி னப்பீ தாம்பரன் மருங்கில்
அணைந்தவன் பாற்பெருஞ் செல்வம்
தீதறக் கொண்டு கொடுத்தநஞ் சிறுவர்
செல்லலேனைய் தவிர்க்குதல் வேண்டும். (21)

மக்களுக் கிரங்கி வாடும் மடத்தகை யணங்கு கேட்டி, தக்கமுற் பவத்தி லான்ற தருமநன் கியற்றி னோர்கள், ஒக்கவிப் பவத்தி லின்ப மொருங்கனு பவிப்பரின்றேல், மிக்கவெர் துயரத் தாழ்வ ரிதற்குளம் மெலித லென்னே. (22)

துப்பிதழ் மடந்தை நல்லாய் தோன்றிய சீவரெல்லாம், இப்புவி யிடத்துச் சால எண்ணுவ ரெண்ணி யாங்கே, எப்படி முற்றும் முற்று தெம்பிரானொருவற்கன்றி, அப்படி முற்றிற் கீழ்மே லாம்பகுப் பிரண்டுண் டாமோ. (23)

மைந்தர்க டம்மைப் போற்ற வளநிதி வேண்டு மென்றாய், நந்திய பறவை கான நயந்துறை விலங்கு முன்னு, வந்தபல் லுயிர்க்குச் சேம வைப்புண்டோ வருவா யுண்டோ, எந்திடத் தேனும் போயொன் றிரப்பது தானு முண்டோ. (24)

அல்லது நாளைக் கென்செய் வாமெனுங்
கவலை யுண்டோ
எல்லையி லொன்றி னொலொன் றிடிப்புண்டு
வாழ்த லுண்டோ

ஒல்லுமவ் வுயிர்க டம்முள் உணவிலா
திறந்த துண்டோ
சொல்லரி பரந்த வுண்கண் துடியிடைப்
பேதை மாதே. (25)

கல்லினுட் சிறுதே ரைக்குங் கருப்பையண்
டத்து யிர்க்கும்
புல்லுண வளித்துக் காக்கும் புனத்துழாய்க்
கண்ணி யண்ணல்
ஒல்லுநின் மைந்தர்க் காவா தொழிவனோ
வொழியா னுண்மை
மெல்லியால் கொண்ட துன்பம் விடுவிடு
மறந்து மெண்ணல். (26)

ஆதலின் நினது மைந்தர்க் காயுளுள்
ளளவை காறும
ஓதிரு வினைக்குத் தக்க வுணவுண்டு
புந்தி மாழ்கேல்
ஏதுவந் தாலுமூழா லெனநினைந்
திருத்தல் வேண்டும்
மாதர்வாண் முத்த மூரன் மயில்மருள்
நடைப்பூங் கொம்பே. (27)

வளநிதி படைத்தோ மென்றும் வடிவஇல்
லுடையோ மென்றும்
அளவில்சே யீன்றோ மென்றும் அனுபவத்
தமைந்தோ மென்றும்
இளமையிற் சிறந்தோ மென்றும் எழில்நல
முடையோ மென்றும்
உளமகிழ் கூர்வர் சற்றும் உண்மைநூ
லுணர்ச்சி யில்லார். (28)

ஒருசிறு தரும மேனும் உஞற்றிடா
  ரிரப்போர் வந்து
தருமிகர் கரத்தா யென்று சாற்றினுங்
  கொள்ளா ராகிக்
கருணைசற் றின்றி யெல்லை கடந்திடத்
  துரந்து மீள்வர்
மருவுபல் கிளையு மோம்பார் வளம்படைத்
  தென்பெற் றூரால். (29)

கோடிபொன் னளிப்ப னின்றே கோடிரோர்
  மாத்தி ரைக்குள்
ஊடிய கிளைக்கோர் வார்த்தை யுரைத்தடை
  குவனென் றூலும்
தேடிய கால தூதர் சிமிழ்த்தல்விட்
  டொழிவ ரேகொல்
வாடிய மருங்குல் நங்காய் மாண்பொருட்
  பயன்கண் டாயோ. (31)

கைப்பொருள் பெற்ற ஞான்றே கடவுளா
  லயத்திற் கீந்தும்
மெய்ப்படு புராண நூல்கள் விருப்பொடு
  கேட்டு வந்தும்
வைப்பென இரப்போர்க் கீந்தும் வருபவ
  ருளரேற் கூற்ற
மொய்ப்புயத் தண்டந் தப்பி முன்னவ
  னின்பத் தாழ்வார். (30)

மதலையைப் பெறுநாள் துன்பம் வளர்த்திடு
  நாளுந் துன்பம்
விதலைநோ யடையிற் றுன்பம் வியன்பரு
  வத்துந் துன்பம்

கதமுறு காலர் வந்து கைப்பற்றிற்
    கணக்கில் துன்பம்
இதமுற லெந்நாள் சேயால் எற்றைக்குந்
    துன்ப மானால். (32)

அத்தகு மைந்த ரார்நீ யாரிஃ
    துரைக்கும் நானார்
இத்தரை யிடைக்காப் பாற்றற் கியான்றிரு
    நெடுமா லல்லன்
கொத்துறு மைந்த ராசைக் கோட்பட்டு
    வருந்து கின்றாய்
பித்துளார் செய்கை யீது பெரியரிம்
    மயக்கம் பூணார். (33)

தரித்திர மென்று பல்கால் சாற்றினை
    யெதிர் மறுத்தல்
பரித்திடு மச்சொல் தன்மைப் பன்மை
    முற்றாக வல்லோர்
விரித்துரை பொருள்நீ சற்றும் விளங்கிட
    வுணர்ந்தா யல்லை
அரித்தடங் கருங்கண் மாதே யாதலின்
    நிலைத்த தன்றால். (34)

கலைமுழு தோர்ந்து கரிசெலா மறுத்த
    காந்தனே பருமணி யரவத்
தலைகிடங் திமைக்குந் தாத்திரி யதனிற்
    சாற்றருந் தக்கநன் முயற்சி
உலைவறப் புரியா வொருவனுச் கெங்ஙன்
    உற்றிடுஞ் செல்வம்நன் னிலத்தை
நிலைபெற வுழுது வித்திலான் றனக்கு
    நீள்பய னுற்றிடுங் கொல்லோ. (35)

கடவுளீ குவனென் றெண்ணிநித் தியமுங்
கருதுறு முயற்சிசெய் யானேல்
அடலுறு செல்வ மடைகுவ னேகொல்
அருங்கலத் திட்டபா லடிசில்
மிடலுடைக் கரத்தா லெடுத்துண் டெங்ஙன்
வீங்குவெம் பசிப்பிணி யொழிப்பன்
உடல்பவந் தனக்கோ ராகர மாகும்
உடல்நனி வாட்டுமெய்த் தவத்தோய் (36)

மடமையேன் றனக்குக் கடவுளும் நீயே
வருக்கரு மிறைவனும் நீயே
அடலுறு தானந் தவமுதல் யாவும்
ஆற்றுநின் பணிவிடை யன்றோ
மடலவிழ் துளப மாலிகை புனைந்த
வாசுதே வன்பத மலரைத்
திடமுற நெஞ்சத் துன்னிவல் வினையைச்
சிதர் தரச் செகுத்தமா மறையோய். (37)

தெறுநி ரப்புளோர் வாழ்ந்திடு செல்வர்பாற்
செல்வரேல் மதியார்கள்
மறுவு றுத்தவ மானமு மியற்றுவர்
மானமுள் ளவராயிற்
குறுகு மவ்வவ மானத்தா னுயிர்விடுங்
கொள்கையிற் றலைநிற்பர்
நறும லர்க்குழா லாதலா லவரிடை
நண்ணல்நன் றெனவெண்ணல். (38)

ஒன்றும் வேண்டல ராயினுஞ் செல்வர்பால்
உறுமிடி யவர்சார்ந்தால்
இன்று வந்தமை யாதினைக் கருதிமற்
றிவரென வுளத்தெண்ணிக்

கன்று மாறுபல் குறிப்புரை நவிற்றுவர்
காதலின் அவர்பாற்போய்
மன்ற வந்தது சிறுமையே யிவர்க்கன்றி
மற்றிலை யறிபாவாய். (39)

இந்த வாறிவ னுரைத்தலென் னெனவுளத்
தெண்ணிடே லெக்காலும்
பந்த மானிடர் தன்மையிற் றெனப்பகர்ந்
தேன்பரம் பொருளாய
சந்த மாமறைத் தலைவன்பா லுறுவது
தகாதென்றே னலன்கண்டாய்
எந்த வாறுகை யுறையிலா தையன்முன்
யான்படர் குவன்மாதே. (40)

என்றுரைத்த கொழுநனுரை கேட்டுமகிழ்ந்
திதற்கென்னோ செயலென றெண்ணி
அன்றுமுத லுபவாசந் தானிருந்து
மாமுனிவன் அரிதிற் றேடி
நன்றளிக்கு நெல்லினிற்றன் னொருபாகம்
வேறெடுத்து நலககச் சேர்த்துத்
துன்றியவந் நெல்லையொரு தினத்தறலில்
நனைத்துவறுத் தெடுத்துத் தூய்தா. (41)

கறையிட்டு நனிகாண வுலக்கைகொடு
மிக்கிடித்துக் கரிசு போக்கி
நிறையிட்ட அவலாக்கிக் குசேலமுனி
கந்தையினில் நேடி யோர்பால்
மறையிட்ட வொழுங்குடையாள் முடிந்து கொ
தினிதுபோய் வருக வென்றாள் [டுத்
சிறையிட்ட பவநீங்கும் வழிகண்டோன்
வழிதேடிச் செல்ல லுற்றான். (42)

கானவேல் முட்டைத்துக் காலூன்ற முடியாமல், ஈனமார் முள்வாங்குங் கருவியுமங் கில்லாமல், மானமார் பெருந்தவத்தோன் மனமெலிந்து முகம் புலர்ந்தோர், தானமே வுறவிருந் திட் டதையவிவை யெண்ணுவான். (43)

செறிதருதன் மனப்படியே செய்தலொரு வற்கினிதாம், அறிவுறுக்குங் குருமொழிகேட் டாக்கலஃதி னுஞ்சிறப்பாம், உறிதருமே திலர்சொற்கேட் டுஞற்றன்முனி தயர்மனையாள், வறியவுரை கேட்டுஞற்றன் மண்ணிறனேர் கெடுதியுறும். (44)

என்னதுய ரினியுறினும் இதுகாறும் வந்தமையான், முன்னமனைக் குரைத்தபடி முற்றும்போய் வருவலெனத், தன்னுளத்தி லெண்ணியெழீஇத் தனிநடந்து சின்னளில், மின்னுமிழ்கார் முகில்பயிலும் மேல்கடலின் கரையிறுத்தான். (45)

## II. சீட்டுக் கவிகள்

அவ்டாவதானம்

### சரவணப் பெருமாள் கவிராயர் பாடியன

அவ்வொன்று மவதானி தமிழொன்று வெகுஞானி
அறிவொன்று சேதுபதிபால்
அணியொன்று வெகுமானி சோமசுந் தரகுருவின்
அருளொன்று மடிமைவெள்ளைக்
கவ்வொன்று மலைநாவ னதியொன்று கோத்திரன்
கணியொன்று குவளைமார்பன்
கதியொன்று சரவணப் பெருமாள் கவீச்சுரன்
கையொன்று மெழுதுமோலை

தெவ்வென்று சமர்வென்ற திகழ்மகம் மதுதம்பி
    தீரனெதிர் கொண்டுகொண்க
  செழுஞ்சென்ன பட்டணமதிற்கேகு வோம்வழிச்
    செலவுக்கு வேண்டுமதனால்
உவ்வொன்று யவ்வொன்று லவ்வொன்று டவ்வொன்று
    சவ்வொன்று மவ்வொன்றுவவ்
  ஒன்றுரவ்வொன்றுரவ் வொன்றுகவ் வொன்றனவ்
    வொன்றுவரல் விடல்வேண்டுமே. (1)

மாருமல் வாய்வேலு மயிலுமென வேசொல்ல
    வாசகங் கைகளெழுத
  வருகணக் கொருபுறம் தீரமற் றொருபுறம்
    வரைந்திடு மிலக்கமாற
வளைதிரைக் குட்சிறிது கல்லணி வகுக்கின்ற
    வன்கணக் கினிதுபகர
  மருவுசொக் கட்டானும் விளையாட மறைவாக
    வைத்தசது ரங்கமாடக்
கூறுக எட்டெழுத் தாணியெழு தும்படிக்
    குங்கவிதை பகரவதிலோர்
  கூரெழுத் தாணிசது ரங்கமுது குப்புறங்
    குதிரையடி வெண்பாவரக்
கூறுபுல வோர்சபையி லட்டாவ தானமுல
    கோர் புகழ வேநடத்தக்
  கோடிலாச் சதுரங்க மாடவய லூடிருக்
    குஞ்சூது மாடவொருபால்
எருதி வண்ணப்ர பந்தமெட் டுப்பேர்க்
    கெழுத்தெழுத் தாயுரைக்க
  இவ்வாறு நாற்புரக் கவிதா ப்ரசங்கம
    திசைக்கும்ப்ர சண்டவாக்கி

இலக்கண விலக்கியக் கடலேமு ழுதுங்குடித்
தேப்பமிடு காளமேகம்
இனியகவி யவதானி சரவணப் பெருமாள்கை
யெழுதுமொப் பத்திஞலே
சேருடு பங்கயச் செங்கையார் மடலெழுது
திவ்யரம ணீயமோகன்
சேதுபதி வாசற்ப்ர தானிமுத் திருளப்ப
சிங்கே றெதிர்ந்துகாண்க
சித்தபரி பூரண கடாட்சவீட் சணகுணத்
தியாகபரன் சீயாகையாற்
செந்தமிழ்க் காதற்ப்ர பந்தமொன் றுன்மீது
செய்துவந் தனமகிழ்ந்தே. (2)

---

அருணசல கவிராயர் பாடியது.

சக்ரவா ளத்தகடு முகடுபட படெனப்ர
சங்கத் தெழுந்தசிங்கம்
தத்வலட் சணவித்வ லட்சண விசட்சண
சுலட்சண சபாரஞ்சிதம்
சத்தியலோ கத்துமத லத்தும்வித லத்துமித
லத்தும்ப்ர சித்த துல்யம்
சற்குண லயமினிமை பெறுசுவைக் கல்வியமு
தத்தலங் காரகும்பம்
உக்ரகா டிந்யதிட கடவிகட கடன்மடை
யுடைத்தெழு தமிழ்க்குஞ்சரம்
உசிதத் துகந்தசித் தாந்த வேதாந்தவுர
ராமவயி ராக்கியசித்தம்

உபயபர் வதவட வரைக்கப் புறத்து மூல
வப்புகழ் நடாத்துவீரம்
உரககண பணமகுட புவனசக் ரேசுர
வுதாரநதி குலசிரேஷ்டம்
கைக்கடா சலகோடி தருசேது பதிராஜ
கர்த்தன்வா சற்ப்ரசங்கம்
கற்றறி யிலக்கணச் சோமசுந் தரகுரு
கடாட்சகன காபிஷேகம்
கருதுவிரு தவதானி சரவணப் பெருமாள்
கவீச்சுரன் பெற்றரத்நம்
கமலைநா மகள்வளர் நிதானியரு ணாசலக்
கவிசரப மெழுதுமோலை
திக்கெலாந் திறைகொண்ட கவுரிவல் லவராஜ
சிங்கமெதிர் கொண்டு காண்க
சீறுத நாகமறு காலிலாத் தும்பிவெந்
திடமுடை படாவாரணம்
தீக்குணவ லாதகரி பங்கப்ப டாக்கயஞ்
செலத்திலோ டாதகளிறு
திருகாத தந்திமுனை வளையாத வேழஞ்
சிறப்பொடு கொடுத்தருள்வையே. (3)

# III. திருப்புகழ்

தனனதன தனனதன தனனதன தனனதன
தானதானன தானதானன
தனனதன தனனதன தனனதன தனனதன
தானதானன தானதானன
தனனதன தனனதன தனனதன தனனதன
தானதானன தானதானன — தனதனதனதான

* அறவளிய அனையின்வட மனையவக டணுகியோரு
ஆகமாகியோர் பாலரூபமாய்
அருமதலை குதலைமொழி தனிலுருகி யவருடைய
ஆயிதாதையார் மாயமோகமாய்
அருமையினி லருமையிட மொளுமொளென வுடல்வளர
ஆளுமேளமாய் வாலரூபமா—யவரொரு பெரியோராய்
அழகுபெற நடையடைய கிறிதுபடு மொழிபழகி
ஆவியாயவோர் தேவிமாருமாய்
விழுசுவரை அரிவையர்கள் படுவழியை நிலைமையென
வீடுவாசலாய் மாடகூடமாய்
அணுவளவு தவிடுமிகள் பிதிரவிட மனமிறுகி
ஆசையாளரா யூசிவாசியா—யவியுறசுடர்போலே (வ)

வெறுமிடிய னொருதவசி யமுதுபடை யெனுமளவில்
மேலைவீடுகேள் கீழைவீடுகேள்
திடுதிடென நுழைவதன்மு னெதிர்முடுகி யவர்களொடு
சீறிஞாளிபோ லேறிவீழ்வதாய்
விரகினொடு வருபொருள்கள் சுவறியிட மொழியுமொரு
வீணியார்சொலே மேலதாயிட—விதிதனை நினையாதே
மினுகுமினு கெனுமுடல மறமுறுகி நெகிழ்வறவும்
வீணர்சேவையே பூணுபாவியாய்
மறுமையுள தெனுமவரை விடும்விழலை யதனில்வரு
வார்கள்போவெனு காணுமோவெனு
விடுதுறவு பெரியவரை மறையவரை வெடுவெடென
மேளமேசொலீ ஞாளிவாயராய்—மிடையுறவருநாளில்

* இவ்வரி அருணகிரிநாதர் வாக்கன்று

THE REGISTRAR OF ... 19 JUN 1916 ... MADRAS

வறுமைகளு முடுகிவர வுறுபொருளு நழுவசில
வாதமூதுகா மாலை சோகைநோய்
பெருவயிறு வயிறுவலி படுவன்வர இருவிழிகள்
பீளைசாரிட ஈளைமேலிட
வழவழென வுமிழுமது கொழகொழென வொழுகிவிழ
வாடியூனெலாம்நாடிபேதமாய்-மனையவள்மனம்வேறாய்
மறுகமனை யுறுமவர்கள் நணுகுநணு கெனுமளவில்
மாதர்சீயென வாலர்சீயென
கனவுதனி விரதமொடு குதிரைவர நெடியசுடு
காடுவாவென வீடுபோவென
வலதழிய விரகழிய வுரைகுழறி விழிசெருகி
வாயுமேலிட ஆவிபோகுநாள்-மனிதர்கள் பலபேச

இறுதியிதொ டறுதியென வுறவின்முறை கதறியழ
ஏழைமாதராள் மோதிமேல்விழ
எனதுடைமை யெனதடிமை யெனுமறிவு சிறிதுமற
ஈமொலோவென வாயைஆவென
இடுகுபறை சிறுபறைகள் திமிலையொடு துவிலறைய
ஈமதேசமே பேய்கள்சூழ்வதாய்-எரிதணலிடும்வாழ்வே
இணையடிகள் பரவுமுன தடியவர்கள் மிகவுமெனை
ஏசிடார்களோ பாசநாசனே
இருவினையு மலமுமற விறவியொடு பிறவியற
ஏகபோகமாய் நீயுநானுமாய்
இறுகும்வகை பரமசுக மதனையரு ளிடைமருதில்
ஏகநாயகா லோகநாயகா-இமையவர் பெருமாளே (௧)

# IV. தனிப் பாடல்கள்.

## காளமேகப் புலவர்.

(ஆமணக்கிற்கும் - ஆனைக்கும் சிலேடை.)

முத்திருக்குங் கொம்பசைக்கு மூரித்தண் டேந்திவரும்
கொத்திருக்கு நேராய்க் குலைசாய்க்கும் - எத்திசைக்கும்
தேமணக்குஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
ஆமணக்கு மால்யானை யாம். (1)

(பாம்பிற்கும் - எள்ளிற்குஞ் சிலேடை )

ஆடிக் குடத்தடையும் ஆடும்போ தேயிரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும் — ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே யோது. (2)

(மலைக்கும் - சந்திரனுக்குஞ் சிலேடை.)

நிலவாய் விளங்குதலான் நீள்வான் படிந்து
சிலபோ துலாவுதலாற் சென்று — தலைமேல்
உதித்து வரலா லுயர்மா மலையை
மதிக்கு நிகரா வழுத்து. (3)

---

## கம்பர்.

(சோழநாட்டு எல்லை.)

கடல்கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையிற்கோட்டைக்கரையாம்—வடதிசையில்
ஏணாட்டுப் பண்ணை யிருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல். (4)

(பாண்டிநாட்டு எல்லை)

வெள்ளா றதுவடக்காம் மேற்குப் பெருவழியாம்
தெள்ளார் புனற்கன்னி தெற்காகும் — உள்ளார
ஆண்ட கடல்கிழக்காம் ஐம்பத் தறுகாதம்
பாண்டிநாட் டெல்லைப் பதி. (5)

(சேரநாட்டு எல்லை)

வடக்குத் திசைபழனி வான்கீழ்தென் காசி
குடக்குத் திசைகோழிக் கோடாம்—கடற்கரையின்
ஓரமோ தெற்காகும் உள்ளெண் பதின்காதம்
சேரநாட் டெல்லையெனச் செப்பு. (6)

(தொண்டைநாட்டு எல்லை.)

மேற்குப் பவளமலை வேங்கட நேர்வடக்காம்
ஆர்க்கு மூவரி யணிகிழக்கு — பார்க்குளுயர்
தெற்குப் பிணகி திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு. (7)

(வண்ணான் உடைவெளுத்தபோது பாடியது.)

சிரம்பார்த்தா னீசனயன் தேவிதனைப் பார்த்தான்
கரம்பார்த்தான் செங்கமலக் கண்ணான்—உரஞ்சேர்
மலைவெளுத்த திண்புயத்து வண்ணான்சீ ராமன்
கலைவெளுத்த நேர்த்திதனைக் கண்டு (8)

(தன்புத்திரன் அம்பிகாபதி இறந்தபோது பாடியது.)

பரப்போத ஞால மொருதம்பி யாளப் பனி-மதியம், துரப்போ னொருதம்பி பின்வரத் தானுந் துணைவியுடன், வரப்போன மைந்தற்குத் தாதை பொருதுயிர் மாய்ந்தனனெஞ், சுரப்போ எனக்கிங் கினியா ருவமை யுரைப்பதற்கே. (9)

வில்லம்பு சொல்லம்பு மேதினியில் ரெண்டுண்டு வில்லம்பிற் சொல்லம்பே மேலதிகம் — வில்லம்பு பட்டதடா என்மார்பிற் பார்வேந்தா நின்குலத்-தைச், சுட்டதடா என்வாயிற் சொல். (10)

---

(பல வித்துவான்கள் பாடியவை.)

மேலாடை யின்றிச் சவைபுகுந்தா லிந்த மேதினியோர், நூலா யிரம்படித் தாலுமெண்ணுர் நுவல் பாற்கடலோ, மாலா னவனணி பொன்னுடை கண்டு மகளைத்தந்தே, ஆலால மீந்தது தோலாடை சுற்றும் அரன்றனக்கே. (11)

பக்குவ மாகக் கவிநூறு செய்து பரிசுபெற, முக்கர ணம்மெதிர் பல்காலும் போட்டு முயன்றிடி னும், அக்கட போவெனும் லோபரைப் பாடி யலுத்துவந்த, குக்கனை யாண்டருள் வில்வ வனத்-துக் குயிலம் மையே. (12)

பாட்டுக்குப் பாத்திர நல்லோரைப் பாடிப் பதம் பெறலாம், மோட்டுக் குலாமரைப் பாடி-லென்னும் முழத் துண்டமுண்டோ, வீட்டுக்குச் சோற்றுக்குண்டோ வெள்ளை வாய்க்கொரு வெற்-றிலையோ, ஏட்டுக்குச் சேதங்கண்டாய் வெள்ளை நாவ லிருப்பவனே. (13)

ஆயத் துறையிற் பிறந்துவந் தந்தணர் பால் குடித்து, மாயக்கண் வேசை யிடத்தே வளர்ந்து வண்ணுனொருநாள், ஏயப் புலவ ரிடத்தெட்டு நாள் செட்டியே னென்றுபின், போயக்க சாலை புகுந்த-னள் காணந்தப் பொய்ம்மகளே. (14)

குணமிருந்தாலுங் குலமிருந் தாலுங்கொழுந்த மிழின், மணமிருந் தாலும் மதியிருந் தாலும் வழுத் திடவங், கணமிருந் தாலுமோர் காசும் பெறுதுசிங் காரவரைப், பணமிருந் தாலவர்க் கெல்லோரு மஞ்சலி பண்ணுவரே. (15)

எண்ணான்கு முப்பத்திரண்டுபெற் காட்டி யிசை யுடனே, பண்ணாகச் செந்தமிழ் பாடிவந் தாலுமிப் பாரிலுள்ளோர், அண்ணாந்து கேட்ப ரழகழ கென்ப ரதன் பிறகு, சுண்ணாம்பு பட்ட இலையுங்கொ டார் கவி சொன்னவர்க்கே (16)

கெட்டசாறு தவிடுகஞ்சி கிருமியுண்ட மாவறைக்
கீரைவேர் தெளிந்தமோர் முறிந்தபாகு கிண்டிமா
இட்டசோறு கொழியலுப்பி டாதபுற்கை யாயினும்
எங்குமன்ப தாகநங்க இன்பமா யிருக்குமே
பட்டபாகு பசுவினெய் பருப்புமுக் கனிக்குழாம்
பாளிதங்கள் தாளிதங்கள் பண்ணியாரவகையுடன்
அட்டபாற் குழம்பு கன்ன லமுதமோடு மூதவினும்
அன்பிளோ டளித்திடாத அசநமென்ன அசநமே.

சந்தப்பா விருத்தப்பா கலிப்பா வெண்பா
தாழிசைப்பாக் கொச்சகப்பாத் தனிப்பாவுக்கும்
விந்தைப்பா வாகிய கிரந்தப் பாவும்
வெல்லப்பா வதுபோல விகடப்பாவும்
எந்தப்பா வுரைத்திடினு மொருபே றில்லா
ஏதப்பா விக்குகின திணைப்பா தத்தைக்
கந்தப்பா முருகப்பா போரி வாழ்வே
கையப்பா மெய்யப்பா காட்டப் பாவே. (18)

## வேதநாயகம் பிள்ளை பாடியன

### கலித்துறை.

வானென் றுதவ வருஞ்சுப்ர மண்ய வரோதயனே, தானென்று வெண்ணரன் பாடையிந் நாட்டிற் றலையெடுக்க, ஏனென்று கேட்பவ ரில்லாத் தமிழை யினிதளிக்க, நானென்று கங்கணங் கட்டிக் கொண்டா யிந்த நானிலத்தே. (19)

சுருதியோ ருருக்கொண் டன்ன சுப்பிரமணிய தேவே, கருதியின் னொருகால் நின்னைக் காணலா மெனுமவாவால், பொருதியென் மனம்பின் னீர்க்கப் பொறைபுறு பாண்டில் பூட்டும், எருதுகள் முன்னே யீர்க்க வென்பதி யடைந்தேன் மன்னே. (20)

சூர்வந்து வணங்கு மேன்மைச் சுப்பிர மணிய தேவே, நேர்வந்து நின்னைக் கண்டு நேற்றிராத் திரியே மீண்டென், ஊர்வந்து சேர்ந்தேனென்ற னுளம்வந்து சேரக்காணேன், ஆர்வந்து சொலினுங் கேளேன் அதனையிங் கனுப்பு வாயே. (21)

முருகார்பூந் தடஞ்சுலவு மாவடுதண்
டுறைத்தலத்து முதல்வ தெய்வத்
திருநாவுக் கரசர்முதல் மூவர் தமிழ்த்
தேனுண்டு தெவிட்டு நிற்கும்
தருநாவுக் கினிமையிஃ தெனக்கொடிமுந்
திரிக்கனியான் தந்தேனன்பின்
ஒருவேட னுதவுதசை யமிழ்தினிறை
யினிதுண்ட வுறுதிகொண்டே. (22)

நின்சமுகத் தினைப்பார்க்க நின்னமுத
மொழிகேட்க நின்பாற் பேச
என்னிருகண் இருசெவிவாய்க் கெப்பொழுதுங்
கிடைக்கவிலை யிவைகண் மூன்றும்
மன்னுபெரும் பாதகங்கள் புரிந்திருக்க
லாமெனது மனமெப் போதும்
உன்னையக லாதிருத்திக் கொள்ளவென்ன
தவம்புரிந்த திரைப்பாய் மன்னே. (23)

## V. பழமொழி விளக்கம்

தன்மமது செயல்வேண்டுந் தண்டலைநீள்
நெறியாரே தயவு செய்வார்
வன்மவினை செயல்வேண்டாம் பொய்வேண்டாம்
பிறரையொன்றும் வருத்தல் வேண்டாம்
கன்மநெறி வரல்வேண்டாம் வேண்டுவது
பலர்க்குமுப கார மாகும்
நன்மைசெய்தார் நலம்பெறுவர் தீமைசெய்தார்
தீமைபெற்று நலிவர் தாமே. (1)

நன்றிதரும் பிள்ளையொன்று பெற்றாலுங்
குலமுழுதும் நன்மை யுண்டாம்
அன்றியறி வில்லாத பிள்ளையொரு
நூறுபெற்று மாவ துண்டோ
மன்றில்நடம் புரிவாரே தண்டலையாரே
சொன்னேன் வருடந் தோறும்
பன்றிபல ஈன்றுமென்ன குஞ்சரமொன்
றீன்றதனாற் பலனுண்டாமே. (2)

சங்கையறப் படித்தாலுங் கேட்டாலும்
பிறர்க்குறுதி தனைச்சொன் னாலும்
அங்கணுல கிற்சிறியோர் தாமடங்கி
நடந்துகதி யடைய மாட்டார்
திங்களணி சடையாரே தண்டலையாரே
சொன்னேன் சிறிது காலம்
கங்கையிலே படர்ந்தாலும் பேய்ச்சுரைக்காய்
நல்லசுரைக் காயா காதே. (3)

மானென்று வடிவெடுத்து மாரீசன்
போய்மடிந்தான் மானே யென்று
தேனென்று மொழிபேசிச் சீதைதனைச்
சிறையிருக்கத் திருடிச் சென்றோன்
வானென்று மரசிழந்தான் தண்டலையார்
திருவுளத்தின் மகிமை காணீர்
தானென்று நினைக்கையிலே தெய்வமொன்று
நினைக்குமிது சகசந் தானே (4)

துன்மார்க்கர்க் காயிரந்தான் சொன்னாலும்
மறந்துவிட்டுத் துடுக்கே செய்வார்
சன்மார்க்கர்க் கொருவார்த்தை சொலுமளவே
மெய்யதனிற் றழும்பாக் கொள்வார்
பன்மார்க்க மறைபுகழுந் தண்டலையாரே
சொன்னேன் பண்பு வாய்ந்த
நன்மாடு தனக்கொரடி நற்பெண்டிர்க்
கொருவார்த்தை நடத்தை யாமே. (5)

விற்பனர்க்கு வாழ்வுவந்தால் மிகவணங்கிக்
கண்ணோட்ட மிகவுஞ் செய்வார்
சொற்பருக்கு வாழ்வுவந்தாற் கண்தெரியா
திறுமாந்து துன்பஞ் செய்வார்

பற்பலர்க்கு வாழ்வுதருந் தண்டலையாரே
சொன்னேன் பண்பில் லாத
அற்பருக்கு வாழ்வுவந்தா லர்த்தராத்
திரிகுடைமே லாகுந் தானே (6)

பணந்தானே யறிவாகும் பணந்தானே
வித்தையுமாம் பரிந்து தேடும்
பணந்தானே குணமாகும் பணமில்லா
தவர்பிணமாம் பான்மை சேர்வர்
பணந்தானே பேசுவிக்குந் தண்டலைநீள்
நெறியாரே பாரின் மீது
பணந்தானே பந்தியுறுங் குலங்கீழாங்
குப்பையிலே படுக்குந் தானே. (7)

செழுங்கள்ளி நிறைசோலைத் தண்டலைநீள்
நெறியாரே திருடிக் கொண்டே
எழுங்கள்ளர் நல்லகள்ளர் பொல்லாத
கள்ளரினி யாரோ வென்றாற்
கொழுங்கள்ளர் தம்முடன்கும் பிடுங்கள்ளர்
திருநீறு குழைக்குங் கள்ளர்
அழுங்கள்ளர் தொழுங்கள்ள ராசாரக்
கள்ளரிவ ரைவர்தாமே. (8)

காலமறி தண்டலையார் வளநாட்டிற்
கொலைகளவு கள்ளே காமம்
சாலவருங் குருநிந்தை செய்பவர்பால்
மேவியவஞ் சனைசெய் தற்குஞ்
சீலமுடை யோர்கிளையார் பனையடியி
லேயிருந்து தெளிந்த ஆவின்
பாலினையே குடித்தாலுங் கள்ளென்பார்
தள்ளென்பார் பள்ளென் பாரே. (9)

கானமருங் கவரியொரு மயிர்படினு
　　மிறக்குமது கழுதைக் குண்டோ
மானமுடன் வாழ்பவனே மாபுருடன்
　　சுயோ தனனை மறந்தா ருண்டோ
ஆனகஞ்சே ரொலிமுழங்குந் தண்டலையாரே
　　சொன்னே னரைக்கா சுக்குப்
போனதொரு மானம்பின் னுயிரம்பொன்
　　கொடுத்தாலும் பொருந்தி டாதே. (10)

## VI. குறள்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின். (1)

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை. (2)

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி. (3)

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை. (4)

இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை. (5)

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். (6)

தந்தை மகற்காற்றும் நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல். (7)

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம். (8)

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. (9)

அல்லவை தேய அறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின். (10)

எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. (11)

நன்றே தரினும் நடுவிகந்தா மாக்கத்தை
அன்றே யொழிய விடல். (12)

ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தின்
எய்துவ ரெய்தாப் பழி. (13)

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை (14)

அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது. (15)

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறு மாக்கந் தரும் (16)

யாகாவா ராயினு நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு (17)

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரு மெள்ளப் படும். (18)

அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல். (19)

ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு. (20)

அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. (21)

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று. (22)
பொருளற்றார் பூப்ப ரொருகா லருளற்றார்
அற்றார்மற் றாத லரிது. (23)
அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. (24)
களவினா லாகிய ஆக்க மளவிறந்
தாவது போலக் கெடும். (25)
புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். (26)
உள்ளிய வெல்லா முடனெய்து முள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின். (27)
அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய்போற் போற்றாக் கடை. (28)

## VII. இரங்கேச வெண்பா.

மாண்டவியர் சாபத்தை வல்லிருளான் மாற்றினான்
ஈண்டோர் மடந்தை யிரங்கேசா—நீண்டபுகழ்ப்
பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின். (1)
வேடவான் மீகர்பின்பு வேதியரின் மேலானார்
ஏடவிழ்தார் சூடு மிரங்கேசா — நாடில்
ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். (2)
வஞ்சப் புறவினுடன் வான்றுலையி லேறினான்
இன்சொற் சிவிமுன் னிரங்கேசா — எஞ்சாமல்
மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை. (3)

பீடுபெறு பட்டணத்துப் பிள்ளையைப்போ லேதுற
கேடு தருமோ விரங்கேசா—நீடுலகில் [வார்க்
யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும். (4)

கையரிந்தான் மாறன் கதவிடித்த குற்றத்தால்
ஏய்யுஞ் சிலைக்கை யிரங்கேசா—பையத்
தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநா ணுவார். (5)

ஆன்ற சபையி லடங்காச் சிசுபாலன்
என்றிறந்தா னன்றோ இரங்கேசா—சான்றோர்கள்
காக்க பொருளா வடக்கத்தை யாக்கம்
அதனினூங் கில்லை யுயிர்க்கு. (6)

## VIII. குசேலன்.

### கண்ணனைக் கண்டமை.

நெருக்கினுட் படலா வுடலரை பட்டு
நீளிடைக் கால்சிலத் திருமல்
வெருக்கொளச் சென்றுங் கரங்கள்மே லெடுத்தும்
விடாதுகை யிடிப்புண்டும் வளைந்தும்
பெருக்குறு வெயரின் மூழ்கியும் இரண்டாம்
பிறப்பிது நமக்கென வுணர்ந்து
திருக்கிளர் துவார பாலர்சிற் கின்ற
செவ்விய இடத்தினை யடைந்தான். (1)

எளியனேன் மறையோர் தங்குலத் துதித்தேன்
என்பெயர் குசேலன் மிக் கொலிக்கும்
நளிகொள்வெண் டரங்கப் பாற்கடல் நாப்பண்
நாகணைத் துயிலொழிந் தடியார்க்

களிசெய்தல் லார்க்கீ றுறுத்திட வவதா
ரஞ்செய்த கண்ணபி ரானே
டிளமையிற் பற்பல் கலைபயின் றுள்ளேன்
இசைக்குமுக் குற்றமு மகல. (2)

வகுத்தபல் லுலகும் போற்ற மாற்றலர் கூற்-
றார் மேவச், செகுத்தர சாளுங் கண்ணச் செம்ம-
லெங் கேகீ யெங்கே, இகுத்தபல் துவாரக் கந்தை
யேழைப்பார்ப் பானே சற்றும், பகுத்தறிந் திடலற்
றுய்கொல் பயனின்மூப் படைந்தாய் போலும். (3)

கனகமால் வரையும் மண்ணுங் கட்டியும் போ-
லுஞ் செங்கேழ்த், தினகர வொளியு மோர்கத்
தியோதத்தினொளியும் போலும், அனகமார் தருவும்
புன்சிழ் கம்புலும் போலுஞ் சேடப், பனகமுஞ் சிறு
நாங் கூழும்போலும் பாழ் மிடிப்பார்ப் பானே. (4)

பொருள் நனியுளனென் றியாரும் புகலுமோர்
வார்த்தை வேண்டும், இரு கையுங் கடகம் வேண்டும்
இலங்குகுண்டலங்கள் வேண்டும், வருவிரலாழிவேண்
டும் மார்பிடை மதாணி வேண்டும், உருவமுத் தாரம்
வேண்டும் உயர்ந்த பட்டாடை வேண்டும். (5)

சிவிகைமுன் னூர்திவேண்டும் செழும்பொருட்
செலவு வேண்டும், குவிகையே வலரும் வேண்டும்
கோலமார்ந் திருக்க வேண்டும், கவிகைதாங் குநரும்
வேண்டும் கையுறை சிறப்ப வேண்டும், அவிகையில்
விளக்கம் வேண்டும் அரசவை குறுகு வார்க்கே. (6)

மின்செய்த மதாணியாமுத் தாரமாம் விளங்கு
பட்டாம், பொன்செய்த வூர்தி யாமிப் போதியாம்
பெறுவ தெங்கே, நன்செயல் நம்மூதாதை நாளினுங்
கேட்ட தின்றால், என்செய்வா மெண்ணு தொன்
றை யியற்றுத லென் றுங் தீதே. (7)

இத்தகைய மறையவரை யெளியரென
    நினைப்பதெவன் இவணிற் கின்ற
வித்தகமா மறைத்தலைவன் தன்னைமுழு
    ஞானியென விளம்பல் வேண்டும்
எத்தகைமை யாலெனின்மெய்ஞ் ஞானியர்தங்
    குணங்குறியும் இகத்தி லாசைச்
சித்தமொரு வாதுழல் பொய்ஞ் ஞானியர்தங்
    குணங்குறியுஞ் செப்பக் கேண்மின் (8)

ஆடுவா ருன்மத்தர் போற்றிரிவார்
    நகைத்திடுவார் அங்கை கொட்டிப்
பாடுவா ரின்றிருந்த இடம்நாளை
    யிருக்கமனம் பற்றார் சுற்றிக்
கூடுவார் தமிற்கூடார் கந்தையன்றி
    வேறுடுக்கை கொள்ளா ரன்னார்
நீடுவார் புகழ்ப்பெருமை யிற்றென்று
    மதிப்பவரார் நிகழ்த்து வாரார். (9)

ஓங்குபெரு ஞானியர்போற் பேசுவா
    ரவருண்மை வேடம் போலப்
பாங்குபெற வுடல்புனைவார் சற்கருமஞ்
    செய்வோர்தம் பக்க மேகி
நீங்குகவென் றொழிப்பாரிங் கிலைமேலாம்
    பிரமத்தி னிலையே யென்பார்
ஈங்கிவர்கள் தாங்கெடுவ தன்றிமற்றோ
    ரையுங்கெடுக்குமெண்ணம்பூண்டோர். ()

ஆதிநாளைய நின்றோடருங்கலை கற்றுளானும், போதவுஞ்சிறந்த நட்புப் பூண்டுகொண்டவனுங் கந்தை, மேதகக் கொண்ட நீரான் மெய்ம்மறையவர்குலத்தான், கோதறுகுணத்தின் மிக்கான் குசேலனென் றியம்பினன்பேர். (11)

தாயது வருகை கேட்ட தனியிளங் குழவி போன்று, நேயமிக்குடைய னாகி நெஞ்சி னுளுவகை பூப்பப், போயழைத் திடுமி னின்னே போயழைத் திடுமினின்னே, போயழைத் திடுமி னின்னே யென விரைபொருளிற் சொற்றான். (12)

இலக்கண மின்மை நோக்கி யிதற்குமேற் சொற்று னல்லன், மலக்குறும் பறுத்து யர்ந்த மாதவத் தலைவ ரேறே, பலப்பல சொல்லி யென்னை பாணித்தல் கரும மன்று, நலக்கநீ விரைவி னெய்தா விடினவன் நண்ணு மிங்ஙன். (13)

எண்ணனைக் கிலங்கு மார்பம் ஈந்தருள் பிரானை நீல, வண்ணனைத் திகிரி சங்கம் வலமிட முறக் கொண்டானை, மண்ணனைத் தும்பு ரக்கும் வாசுதே வனை மனக்குங், கண்ணனைத் துளவத் தாமக் கண் ணனைக் கண்ணிற் கண்டான். (14)

பாக்கிய முற்ற திந்நாள் பாக்கிய முற்ற திந் நாள், ஆக்கிய வறம் பலித்த ஆக்கிய வறம் பலித்த, யோக்கிய மடைந்த திந்த மனையுமென் றுரைத்து ரைத்துத், தேக்கிய புகழினுன் கொண் டாடினுன் சிலைவ லோயே. (15)

வழிநடந் திளைத்த வேயிம் மலரடி யிரண்டு மென்று, கழிமகிழ் சிறப்ப மெல்ல வருடினுன் கம லக்கண்ணன், பழியில்பல் லுபசா ரங்கள் பண்ண வுந் தெரியாகுகி, ஒழிவறு தவக்கு சேலன் ஒன்றும் பேசாதிருந்தான். (16)

பொன்னுள்ளான் பூமியுள்ளான் புந்தியுள்ளா னுயிடினும், என்னுள்ளா னவனவ னிருந்தவர்தம் நட்பிலனேல், பொன்னில்லான் பூமியில்லான் புந்தி

யில்லா ஞயிடினும், என்னில்லா ஞவனவ னிருந்-
தவர்த நட்புளனேல். (17)

பேயோடு பழகுறினும் பிரிவதரி தரிதென்று
தூயோர்கண் மொழிவரால் தூயோரும் புகழ்தூ
யோய், ஆயோர்கள் பெருநட்பை யருந்தவத்தாற்
பெறலன்றி, ஏயோவெண் மையிற்கிடைப்பி னிகழ்
வரோ இகழ்வில்லார். (18)

நின்னுடைய மனைக்கிழத்தி நிரம்புபெரு நீர்
மையளே, மன்னுடைய சொற்காத்துச் சோர்விலா
மாண்பினளே, தன்னுடைய வுயிராகின றனைப்பே
ணுந் தன்மையளே, உன்னுடைய வருவாய்க்குத்
தக்கசெல வுஞற்றுவளே. (19)

பைங்குதலை வாய்மைந்தர் பலர்பிறக்க வேண்
டுமே, எங்குமரும் புகழுடையா யெத்தனைமைந்
தர்கள் பிறந்தார், அங்கவரைப் பேரவையோர்
அணிதரச்செய் செயலனைத்துஞ், சிங்கலறப புரிந்
தனையோ செய்தனையோ வுபநயனம். (20)

இனியசிற் றுணவேதேனும் இன்றிநீ வருவாய்
கொல்லோ, இனியநின் னுள்ள மின்றே எண்ணியா
னறிதல்வேண்டும், இனியநின் மனைவி வாளா ஏகிவா
வென்பளோமற், றினியவெற் கன்றி யார்க்குக்
கொண்டுவந் திருக்கின்றாயே. (21)

நடலைதீர்ந் தவன்மெய்ப் போர்த்த நாள் பல
கண்ட கந்தைப், படர்தலைச் சுருக்கி வாங்கிப் பாங்கு
வைத்தினிதி ஞய்ந்து, விடலருங் கற்பு வாய்த்த
மின்னஞர் வணங்குந் தெய்வம், திடமுற முடிந்து
வைத்த சிறுபொதி கண்டு கொண்டான். (22)

செறிதரு சுவைத்தீ தென்றும் தேவர்க்கு மரிய தாகும், அறிதரு விருப்பி னில்லின் அமைத்ததே பழைதுமன்று, குறிதரு விலைப்பாற் சென்று கோட லிவ் வளத்த தோவென், றறியவே வாரி யுண்டோன் ஒருபிடி யவல்தின் றனே. (23)

அக்காலைக் கண்ணனுந் தன் அணிவாயில் வரை வந்து, மிக்கார்வத் தொடுமடியில் வீழ்ந்து வணங் கிட மகிழ்ந்து, தொக்காசி பலகூறித் துவாரபா லகர்வாயில், எக்காலு மின்பமறுண கடந்தப்பா லேகிடுங்கால். (24)

தாயெதிர் வுற்ற சேயென வுள்ளந் தழைவுற் றுன், போயெதிர் கொண்டான் காலில்வி ழுந்தான் புனைவித்தான், நேயமு ளானென் றாரறி வித்தான் நீங்கென்றான், செய்மைய ஞெத்சான் நன்றிது வென்றார் சிலமாதர். (25)

அருந்தவர்கள் புகழ் சீர்த்தி யமைந்த திருக் கண்ணபிரா னருளினலே, பொருந்துவிர தாதிக ளான் மிக்கிளைத்த தன்னுடம்பு பூரிப்புற்ற, திருந்த பழங்கந்தை செழும் பொன்னுடை யாயிற்று லிலங் குங் கண்டப், பெருந்தளப மணியாரம் பெருவிலை முத்தாரமாப் பிறங்கிற் றலோ. (26)

அரச ரேமுத லாயின ரனைவரு மடுத்துப், பரசியேவலர் போற்றிரி யார்பின்பு படரப், புரசை மால்கரி பரிமுதற் படைகளும் பொலியத், தரை செய்பேறென விளங்குதன் னூர்ப்புறஞ் சார்ந்-தான். (27)

# IX. நாலடியார்

புன்னுனிமேல் நீர்போல் நிலையாமை யென்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை—இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான் தன் கேளலறச்
சென்றான் எனப்படுத லான். (1)

கூர்த்துநாய் கௌவிக்கொளக்கண்டும் தம்வாயாற்
பேர்த்துநாய் கௌவினா ரீங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயான் மீட்டு. (2)

இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோல்
மம்ம ரறுக்கு மருந்து. (3)

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல — தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து. (4)

நல்லா ரெனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லா ரெனினும் அடக்கிக் கொளல்வேண்டும்
நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு. (5)

நாறுத் தகடேபோல் நன்மலர்மேற் பொற்பாவாய்
நீறாய் நிலத்து விளியரோ — வேறாய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலும்
நன்மக்கள் பக்கந் துறந்து. (6)

துய்த்துக் கழியான் துறவோர்க்கொன் றீகலான்
வைத்துக் கழியும் மடவோனை — வைத்த
பொருளு மவனை நகுமே யுலகத்
தருளு மவனை நகும். (7)

எனதென தென்றிருக்கு மேழை பொருளை
எனதென தென்றிருப்பேன் யானும் — தனதாயின்
தானு மதனை வழங்கான் பயன்றுவ்வான்
யானு மதனை யது. (8)

புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள்தெரியார்
உய்த்தக மெல்லா நிறைப்பினு — மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே பொருள்தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு. (9)

உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான் — கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும். (10)

கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப் [டீண்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டு - மணங்கொண்
டுண்டுண்டுண் டென்னும் உணர்வினாற் சாற்றுமே
தொண்டொண்டொ டென்னும் பறை. (11)

யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல்வேண்டும் — யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லு மெறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கு நாய். (12)

# X. நளவெண்பா

## (நளன் மீண்டும் தன் நகரடைந்தமை)

மன்னு வுனக்கபய மென்னு வனத்தீயில்
பன்னக வேந்தன் பதைத்துநகிச் — சொன்ன
மொழிவழியே சென்றான் முரட்கலியின் வஞ்சப்
பழிவழியே செல்கின்றான் பார்த்து. (1)

மண்ணின்மீ தென்றனைநின் வன்றாளா லொன்றுமுதல்
எண்ணித் தசவென் றிடுகென்றான் — நண்ணிப்போர்
மாவலான் செய்த வுதவிக்கு மாறாக
ஏவலாற் றீங்கிழைப்பே னென்று. (2)

வீமன் மடந்தை விழிமுடியக் கண்டறியா
வாம நெடுந்தோள் வறியோருக் — கேமம்
கொடாதா ரகம்போற் குறுகிற்றே மெய்ம்மை
விடாதான் திருமேனி வெந்து. (3)

சாதி மணித்துகில்நீ சாத்தினாற் றண்கழுநீர்ப்
போதின்கீழ் மேயும் புதுவரால் — தாதின்
துளிக்குநா நீட்டுந் துறைநாடர் கோவே
ஒளிக்குநாள் நீங்கும் உரு. (4)

காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ — நாதம்
அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கலவ வோடி
ஒளிக்கின்ற தென்னோ வுரை. (5)

போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய் — தீவாய்
அரவகற்று மென்போல ஆர்கலியே மாதை
இரவகற்றி வந்தாய்கொ லின்று. (6)

மான்றேர்த் தொழிற்கும் மடைத்தொழிற்கு
மிக்கோனென், றூன்றேய்க்கும் வேலா னுயர்நற
வத் — தேன்றோய்க்கும், தார்வேந்தர்க் கென்வரவு
தானுரைமி னென்றுரைத்தான், தேர்வேந்தன்
வாகுகனாய்ச் சென்று. (7)

பொய்யடையாச் சிந்தைப் புரவலனை நோக்கித்தன்
செய்ய முகமலர்ந்து தேர்வேந்தன் — ஐயநீ
எத்தொழிலின் மிக்கான்கொல் யாதுன் பெயரென்றான்
கைத்தொழிலின் மிக்கானைக் கண்டு. (8)

அன்ன மிதிப்ப அலர்வழியுந் தேறல்போய்ச்
செந்நெல் விளைக்குந் திருநாடர்—மன்ன [னென்றான்
மடைத்தொழிலுந் தேர்த்தொழிலும் வல்லன்யா
கொடைத்தொழிலின் மிக்கான் குறித்து. (9)

காரிருளிற் பாழ்மண்ட பத்தேதன் காதலியைச்
சோர்துயிலில் நீத்தல் துணிவன்றோ—தேர்வேந்தற்
கென்றறைந்தால் நேர்நின் றெதிர்மாற்றந் தந்தாரைச்
சென்றறிந்து வாவென்றாள் தேர்ந்து. (10)

கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதூஉம் வேந்தற்குப் போதுமோ—தானென்று
சாற்றினா னந்தவுரை தார்வேந்தன் தன்செவியில்
ஏற்றினான் வந்தா னெதிர். (11)

ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததூஉம்
பண்டை விதியின் பயனேகாண்—தண்டரளப் [தே
பூத்தாம வெண்குடையான் பொன்மகளை வெவ்வனத்
நீத்தானென் றையுறேல் நீ. (12)

வாக்கினான் மன்னவனை யொப்பான் மறித்தொருகால்
ஆக்கையே நோக்கின் அவனல்லன் — பூக்கமழுங்
கூந்தலாய் மற்றக் குலப்பாக னென்றுரைத்தான்
ஏந்துநூன் மார்ப னெடுத்து. (13)

மீண்டோர் சுயம்வரத்தை வீமன் திருமடந்தை
பூண்டாளென் றந்தணநீ போயுரைத்தால் — நீண்ட
கொடைவேந்தற் கித்தூரந் தேர்க்கோலங் கொள்வான்
படைவேந்த னென்றாள் பரிந்து. (14)

எங்கோன் மகளுக் கிரண்டாஞ் சுயம்வரமென்
றங்கோர் முரச மறைவித்தான் — செங்கோலாய்
அந்நாளு நாளை யளவென்றா னந்தணன்போய்த்
தென்னாளுந் தாரானைச் சேர்ந்து. (15)

என்மே லெறிகின்ற மாலை யெழில்நளன்றன்
முன்னே விழுந்ததுகாண் முன்னாளின் — அன்னதற்குக்
காரணந்தா னீதன்றோ வென்றான் கடாஞ்சொரியும்
வாரணந்தா னன்னான் மதித்து. (16)

ஒற்றைத் தனியாழித் தேரென்ன வோடுவதோர்
கொற்ற நெடுந்தேர் கொடுவந்தேன் — மற்றிதற்கே
போந்தேறு கென்றுரைத்தான் பொம்மென் றளிமுர
தீந்தேறல் வாக்குந்தார்ச் சேய். [லத்

மேலாடை வீழ்ந்த தெடுவென்றா னவ்வளவில்
நாலாறு காத நடந்ததே — தோலாமை
மேல்கொண்டா னேறிவர வெம்மைக் கலிச்சூதின்
மால்கொண்டான் கோல்கொண்ட மா. (18)

வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி — கொண்டாடும்
பாவலன்பால் நின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பால் நின்ற கலி. (19)

ஆதி மறைநூ லனைத்துந் தெரிந்துணர்ந்த
நீதி நெறியாளர் நெஞ்சம்போல் — யாதும்
நிரப்பாம லெல்லா நிரம்பிற்றே பொற்றேர்
வரப்பாகன் புக்க மனை. (20)

மக்களைமுன் காணா மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா — மக்காள்நீர்
என்மக்கள் போல்கின்றீர் யார்மக்க ளென்றுரைத்தான்
வன்மக் களியானை மன். (21)

மன்ன னிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னை தனைக் கான்விட் டவனேக — இந்நகர்க்கே
வாழ்கின்றோ மெங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றா னென்றா ரழுது. (22)

உங்க ளரசொருவ னாளநீ ரோடிப்போந்
திங்க ணுறைத லிழுக்கன்றோ — செங்கை
வளவரசே யென்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி யெடுத்து. (23)

எந்தை கழலிணையின் எம்மருங்குங் காணலாம்
கந்து சுளியுங் கடாக்களிற்றின் — வந்து
பணிமுடியிற் பார்காக்கும் பார்வேந்தர் தங்கள்
மணிமுடியிற் றேய்ந்த வடு. (24)

கொற்றக் குமரனையுங் கோதையையுந் தான்கண்டு
மற்றவன்றா னங்குரைத்த வாசகத்தை — முற்றும்
மொழிந்தாரம் மாற்ற மொழியாத முன்னே
அழிந்தாள் விழுந்தா ளழுது. (25)

மற்றித் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவற்குக்
கொற்றத் தனித்தேருங் கொண்டணைந்து — மற்றும்
மடைத்தொழிலே செய்கின்ற மன்னவன்கா ணெங்கள்
கொடைத்தொழிலா னென்றாள் குறித்து. (26)

அரவரசன் றான்கொடுத்த வம்பூந் துகிலின்
ஒருதுகிலை வாங்கி யுடுத்தான் — ஒருதுகிலைப் [குந்
போர்த்தான் பொருகலியின் வஞ்சனையாற் பூண்டளிக்
கோத்தாய முன்னிழந்த கோ. (27)

உத்தமரின் மற்றிவனை யொப்பா ரொருவரிலை,
இத்தலத்தி னென்றிமையோ ரெம்மருங்குங்—கைத்
தலத்தில், தேமாரி பெய்யுந் திருமலர்த்தார் வேந்
தன்மேல், பூமாரி பெய்தார் புகழ்ந்து. (28)

மன்றலிளங் கோதையொடு மக்களுந் தானுமொரு
வென்றி மணிநெடுந்தேர் மேலேறிச்—சென்றடைந்
மாவிந்த மென்னும் வளநகரஞ் சூழ்ந்ததொரு [தான்
பூவிந்தை வாழும் பொழில். (29)

அப்பலகை யொன்றி னருகிருந்தார் தாமதிக்கச்
செப்பரிய செல்வத் திருநகரும் — ஒப்பரிய
வன்றானை யோடு வளநாடும் வஞ்சனையான்
வென்றானை வென்றானவ் வேந்து. (30)

ஏனை முடிவேந்த ரெத்திசையும் போற்றிசைப்பச்
சேனை புடைசூழத் தேரேறி — யானபுகழ்ப்
பொன்னகரமெய்தும் புரந்தரனைப்போற்பொலிந்து
நன்னகரம் புக்கான் நளன். (31)

கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ — பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்
கேதோ வுரைப்பெ னெதிர். (32)

## XI. சிவசிவ வெண்பா

விற்பிரம்பா லுற்றவடு மேவவுல கெங்குநிறை
சிற்பரனே தெய்வஞ் சிவசிவா — சொற்ற
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. (1)

எய்தருமம் பாலுயிர்நீத் தெய்துபொழு துங்கன்னன்
செய்தருமஞ் செய்தான் சிவசிவா — வுய்யுநெறி
அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை. (2)

சத்தியந்தப் பாமலரிச் சந்திரற்குச் சந்த்ரமதி
சித்த மொருமித்தாள் சிவசிவா — புத்தியுடன்
தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் (3)

மறலிசெயன் மாற்றி வயதானாற் பெற்ற
திறன்மகப் பேறுஞ் சிவசிவா — பெறுபே
றெழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். (4)

பொங்குபுகழ் வாய்மைப் புனிதவதி யார்க்கரனார்
செங்கனியை யீந்தார் சிவசிவா — துங்க
மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை. (5)

தன்மகனுன் கன்றினுக்குந் தான்மந்திரிக்கு மென்றான்
சென்மமன்றோ சென்மஞ் சிவசிவா—உன்னுங்கால்
தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்
என்குற்ற மாகு மிறைக்கு. (6)

# XII. புறங்கூறாமை

விநாயக புராணம்.

கேளிர் பிரிவர் நட்பினா ராய்க்கெழுமு வாரு மில
ராவர், சூளும் வடுச்சொன் னேராக மொழிவ
ரெவரு மாதலினால், நாளு மறத்தைக் கொன்றனந்த
நவைகள் செயினு மெதிர் நின்று, மாள வுரைசெய்
யினுஞ் செய்யேன் மைந்தா மறந்தும் புறங்கூறல் ()

காசிகாண்டம்.

வெம்மை யோடுபிறர் தம்பழி விளம்பி யுழலுஞ்
செம்மை யில்லவர்கள் தீயுமிழும் வாயி லயலார்
தம்மில் வாழ்பவரை நோக்கினர் தடங்கண் மிசையும்
அம்மவோவென விருப்புமுளை கொண்ட றைதியால்.

மின்னு நக்ககதிர் வேல்விகட பத்திர மிகப்
புன்மை யில்லவர் தமைப்பழி புகன்ற விதனைத்
துன்னு மூளைதசை சோரிநிறை பாழ்ந ரகின்வாய்ச்
சென்னி கீழுற மடுத்தனல் செறித்திடு தியால். (3)

சோமேசர் முதுமொழி வெண்பா.

கூனியிரா மன்பிரிந்து போமாறே கூறினளே
தூநறும்பூங் கொன்றையணி சோமேசா — தானே
பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர். (4)

நன்னெறி.

உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கைவிரும்புஞ்செழும்பொழில்வாய்வேம்பன்றே
காக்கை விரும்புங் கனி. (5)

நீதிநெறி விளக்கம்.

பகையின்று பல்லார் பழியெடுத் தோதி,
நகையொன்றே நன்பயனாக் கொள்வான் — பய
மின்று, மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்
துக் கொல்வான், கைவிதிர்த் தஞ்சப் படும். (6)

வளையாபதி.

ஆக்கப் படுக்கு மருந்தலைவாய்ப் பெய்விக்கும்
போக்கப் படுக்கும் புலைநரகத துய்ப்பிக்கும்
காக்கப் படுவனவு மிந்திரிய மைந்தினும்
நாக்கல்ல தில்லை நனிவெல்லு மாறே. (7)

அறநெறிச்சாரம்.

முன்னின் றொருவன் முகத்தினும் வாயினுங்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப் — பின்னின்
றிழித்துரைக்குஞ் சான்றோரை யஞ்சியே தேவர்
விழித்திமையார் நின்ற நிலை. (8)

பழமொழி.

பண்டின ரென்று தமரையுந் தம்மையும்
கொண்ட வகையாற் குறைதீர நோக்கியக்கால்
விண்டவரோ டொன்றிப் புறனுரைப்பி னஃதன்றோ
உண்டவிற் றீயிடு மாறு. (9)

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கு—நல்லாய்
மணலின் முழுகி மறைந்து கிடக்கு
நுணலுந்தன் வாயாற் கெடும். (10)

# XIII. புலவர் வறுமை

தொல்காப் பியமுதல் ஒல்காப் பனுவலுள்
கருவி செய்கையென் றிருவகைத் தாய
எழுத்துச் சொற்பொருள் யாப்பணி யெனத்துறை
பழுத்த இலக்கணப் பவ்வங் கடந்தும்
இலக்கிய மெனுங்கடல் எளிதினிற் கடந்தும்
கலக்கும்வெங் கலிக்கடல் கடப்பரி தாகி
ஈகை யென்னும் இரும்புணை யேற்றி
ஓகைசேர் செல்வமென் றோர்பெருந் தீவினில்
சேர்த்தியுயிர் காக்குந் தியாகி யென்றோர்
கீர்த்திபெறு மீகான் கிடைத்தலின் மையினுல்
தொல்லையூழ் வினையாஞ் சுழிசுழித் தலைப்பச்
செல்லல்கூ ரவாவெனுந் திரையெடுத் தெறிய
வன்பசி யென்னு மகரமீன் விழுங்கத்
துன்ப மென்னுஞ் சுறவெதிர் பாயக்
கவலை யென்னுங் கடுங்கராம் ஈர்ப்பத்
துவளுபு மேனி சோர்ந்துநடு நடுங்கியும்
அன்புள சிந்தைய ராகுநட் டோரெனும்
வன்பிலா வோட்டை வங்கத் தேறலும்
அப்புறத் தியங்கா தலைதலை மீதுறக்
குப்புறத் தாழ்ந்து கூட வமிழ்ந்தியும்
எவ்வழி யேனும் இனிமுயன் றுய்துமென்
றவ்வழி யுஞற்று மருந்தொழிற் பாசியைப்
பற்றெனப் பற்றிப் படர்தலு னைந்துநைந்
தற்றிடை சிதைப்ப வலக்கணுற் றிரங்கியும்
ஆக்க மென்னும் அக்கரை சேர்துமென்
றாக்கமி லிரவெனும் ஓர்பசு மட்குடம்
கைக்கொடு நீந்தக் கரைந்துகரைந் தேகலும்
அக்குடம் போல அகங்கை கரைந்து

நல்குர வென்னு நடுக்கான் புகுந்து
மல்குவெந் துயராம் வனத்தீ வளைப்பக்
கிளையெனுந் தூறுகாற் றளையெனச் சுற்று
மாயா விரவெனும் வன்பேய் தொடர
ஈயா வன்கண ரெனுந்தேள் கொட்ட
நெடும்பசி யென்னுங் கொடும்புலிக் கிரையாய்
மானமுங் குலமும் வண்மையும் பொறையும்
ஞானமுந் தருமமும் நன்மையுங் குடிபோய்க்
கருத்துறு பயமுங் கவ்வையும் பழியும்
வருத்தமும் பிணியும் வதியுமா லயமாய்ப்
படல்கொடு சாத்தும் இடனிலா மனையும்
காய்ந்தபுத் தோலை வேய்ந்திடாக் கூரையும்
பொருக்கறத் தெளித்துப் பெருக்கா முன்றிலும்
புரையறத் தீற்றிப் புதுக்காச் சுவருந்
தரையலான் மெத்தை தழுவாச் சேக்கையும்
மெழுகிமென் கோல மெழுதாத் திண்ணையும்
கழுநீர் களைந்து பொழியாத் தொட்டியும்
பொங்கா வடுப்பும் புகையா வட்டிலும்
அங்கார் பதம்வைத் தடுக்காக் குழிசியும்
அயன்மனை புகுதாச் செயன்மனை யாட்டி
மஞ்சள் நீராடி வயங்கா மேனியும்
அஞ்சனந் தீட்டா அயில்விழிக் கடையும்
செம்பஞ் செழுதா அம்புயப் பாதமும்
வரிவளை புனையா இருகைக் காந்தளும்
திலகம் பொறியாத் திங்கள்வா ணுதலும்
இலகுவெண் டுகில்பொரூ திடுகுறூ ளிடையும்
மைம்முகிற் காடென வகிர்ந்துசிக் கறுத்து
மொய்ம்மலர் செருகி முடியாக் கூந்தலும்
நயனிலா நடையும் நகையிலா முகமும்
பயனிலா மொழியும் பரிவிலா வுளமும்

பாலொடு வறந்து பசியொடு வெதும்பிச்
சுவைத்தலு மொருபாற் சுவைத்துளி பெறாது
நெடிதுயிர்த் தயர்ந்து துடிதுடித் தேங்கி
நோய்முக நோக்கிய தாய்முக நோக்கி
ஈரித ழுண்க ணீர்கரைந் தொழுக
மூரல்வெள் ளெயிற்றின் முளைநிலா வொழுக
மழலையந் தொனிவிடுத் தழுமிளங் குரலும்
முற்பட முதிர்ந்த பொற்புடைச் சிறாஅர்
ஒருபொழு தாயினு மூண்சுவை காணா
திருபொழு தேமாந் திணைக்கவு ளசைப்ப
எண்ணெய் காணாது தண்முடி காய
மிளகு காணா தொளிமுக மழுங்க
நரம்பெழுந் தென்பு நிரம்பமெய் தோன்ற
எக்கிய வயிறு விலைபோற் குழைய
நக்கிய கடைவாய் நாவொடு பிசுக்தறக்
கழங்கெனப் பசிய கண்களுட் குழியப்
பழந்துணிக் கந்தை பறந்திடை நால
ஆயே யாயே யீயாய் கூழென
முகிற்றலைப் பருவ முழக்கெழுந் தேரையின்
துகிற்றலை பற்றித் தொடர்ந்தழு தரற்றலும்
காண்டொறுங் காண்டொறுங் கவலுறு சிந்தையன்
ஈண்டினி யென்செய் தூஉம் என்செய் தூஉ மென்னப்
பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருளெனத் துணிந்தும்
திரைகட லோடியுந் திரவியந் தேடென
உரைசெயு மவ்வை யுரைபகுத் துணர்ந்தும்
வாழ்ந்தார்க் குறவு வழியினு முளதாம்
தாழ்ந்தார்க் குறவிலை தமரினு மென்றும்
கல்லா வறிவுடைப் பொல்லா மூர்க்கரைக்

கைப்புறப் பழுத்த காஞ்சிரை போன்றும்
உப்புநீர் போன்று முவர்ப்புறு செல்வரை
நீரினுட் கிடப்பினு நெட்டிபோற் சிறிதுள்
ஈரமு மிரக்கமு மில்லாப் புல்லரை
உயர்குடிப் பிறந்து முளைக்கரும் பதடியின்
பெயர்பெறுந் திறனிலாப் பேதை மாந்தரை
மாங்கனி கொடாது விளைக்குமுள் வேலியின்
தாங்கொடா விடினுந் தடுக்கு நீசரை
முற்புரி தவத்தா லற்பவாழ் வெய்தி
இந்திரப் பட்டம் வந்தது தமக்கென
ஒருவரை யெண்ணா திருசெவி செவிடாய்
விழிகண் குருடாய் மொழியுமூங் கையுமாய்
மெய்யுங் காலுங் கையு மெழாது
முன்பொரு சொல்லும் பின்பொரு மொழியும்
கண்டா லொன்றுங் காணா தொன்றும்
உண்டா லொன்று முணா தொன்றும்
பலபல பிதற்றிக் கலகலென் றொலித்தும்
முன்னிறை யிரட்டி பின்னிறை யேற்றி
அடுங்கோ லென்னக் கொடுங்கோல் செலுத்தி
அடியடி யென்ன அடித்தடித் தெளிய
குடியலைத் தோட்டுங் கொடியபா தகரை
அப்பிறப் பினிலே யளித்தன மதனால்
இப்பிறப் பினிலே இப்பொருள் படைத்தேம்
உற்றவர்க் கின்னா முதவின் மேன்மேலும்
மற்றுள பிறப்பினும் வருநமக் கெனாஅ
சொல்லவந் தவர்மனச் சூழ்ச்சி யறியாது
செல்வநிலை யன்றெனுஞ் செய்கை குறியா
தீதலே யறமெனா நீதி கருதார்.

# XIV. பழமொழி

புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக்க வர்க்கே புலனும் — நலமிக்க
பூம்புன லூர பொதுமக்கட் காகாதே
பாம்பறியும் பாம்பின கால். (1)

உரைத்தாரை மீதூரா மீக்கூற்றம் பல்லி
நெரித்த சினைபோலு நீளிரும் புன்னைப்
பொரிப்பூ விதழுறைக்கும் பொங்குநீர்ச் சேர்ப்ப
நரிக்கூக் கடற்கெய்தா வாறு. (2)

பரந்த திறலாரைப் பாசிமே லிட்டுக்
கரந்து மறைக்கலு மாமோ — நிரந்தெழுந்த
வேயிற் றிரண்டதோள் வேற்கண்ணாய் விண்ணியங்கும்
ஞாயிற்றைக் கைமறைப்பா ரில். (3)

பயனோக்கா தாற்றவும் பார்த்தறிவொன் றின்றி
இசைநோக்கி யீகின்றா ரீகை — வயமாப்போல்
ஆலித்துப் பாயும் அலைகடற்றண் சேர்ப்ப
கூலிக்குச் செய்துண்ணு மாறு. (4)

நிரந்து வழிவந்த நீசரு ளெல்லாம்
பரந்தொருவர் நாடுங்காற் பண்புடையார் தோன்றார்
மரம்பயில் சோலை மலைநாட வென்றும்
குரங்கினுள் நன்முகத்த வில். (5)

உணற்கினிய வின்னீர் பிறிதுழியில் லென்னும்
கிணற்றகத்துத் தேரைபோ லாகார் — கணக்கினை
முற்றப் பகலு முனியா தினிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று. (6)

கோவாத சொல்லுங் குணனிலா மாக்களை
நாவா யடக்க லரிதாகும் — நாவாய்
களிகள்போல் தூங்குங் கடற்சேர்ப்ப வாங்கி
வளிதோட் கெறிவாரோ வில். (7)

நாடி நமரென்று நன்கு புரந்தாரைக்
கேடு பிறரொடு சூழ்தல் கிளர்மணி
நீடுகல் வெற்ப நினைப்பின்றித் தாமிருந்த
கோடு குறைத்து விடல். (8)

தெற்றப் பரிந்தொருவர் தீர்ப்ப ரெனப்பட்டார்க்
குற்ற குறையை யுரைப்பதாம் — தெற்ற
அறையா ரணிவளையாய் தீர்த லுறுவார்
மறையார் மருத்துவர்க்கு நோய் (9)

உள்ளூ ரவரால் உணர்ந்தார் முதலெனினும்
எள்ளாமை வேண்டு மிலங்கிழாய் — தள்ளா
அழுங்கன் முதுபதி அங்காடி மேயும்
பழங்கன்றே றாதலு முண்டு. (10)

தாயானுந் தந்தையா லானு மிகலின்றி
வாயின்மீக் கூறு மவர்களை யேத்துதல்
நோயின் றெனினு மடுப்பின் கடைமுடங்கும்
நாயைப் புலியா மெனல். (11)

உரைசான்ற சான்றோ ரொடுங்கி யுறைய
நிரையுள ரல்லார் நிமிர்ந்து பெருகல்
வரைதா ழிலங்கருவி வெற்ப வதுவே
சுரையாழ வம்மி மிதப்பு. (12)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS JUN 1916 MADRAS

## XV. கண்ணப்பன்

[எடுப்புமிணை யுமற்ற உடுப்பூரின்கண் வேட்டுவச் சாதியில் தலைமைபூண்டு விளங்கிய நாகன் என்பான் தத்தைபோலும் மொழியினையுடைய தத்தையென்பாளைத் தன் மனத்துக்கினிய மனைக்கிழத்தியாகக்கொண்டு நல்வாழ்வடைந்திருந்தனன். அவர்கட்கு மலைபோலச் செல்வஞ் சிறந்தும் செல்வனொருவ னின்மையான், 'தம்பொருள் என்ப தம் மக்கள்' என்பதன் கருத்தையுன்னித் தன் மனையாளோடும் இரங்கிக் கூறுவானானன்.]

கண்ணில் யாக்கையுந் திங்களில் கங்குலுங்
கண்போல், அண்ணன் மந்திரி யில்லர சாட்சியும்
அருளில், திண்ணெ னெஞ்சமும் புலவரி லவையு-
மொண் தீம் பால், வண்ண வாயிள மக்களில் வாழ்-
வுமொப் பாமால். (1)

சேற ளைந்தமென் சீறடித் தளிரொடு தீம்பாற்,
சோற ளைந்தகைத் தாமரை யோடுசெந் துகிர்வாய்,
ஊறு நீர்நனை மார்பினோ டிளமகா ருந்தி, ஏறு மின்-
பமுள் ளதனையே யுடம்பென இசைப்பார். (2)

அரிகொள் பொன்புனை கிங்கிணி தண்டையோ
டணிந்த, தருண மென்றளிர்ச் சீறடித் தளர்நடைச்
சிறுவர், மருவ ருதசெவ் வாம்பல்வாய் மழலையா
ரமுதம், பருகி லாச்செவி பாவையின் செவியெனப்
படுமால். (3)

இம்மை யின்பொடு மறுமையி னின்பமுமன்
றிரண்டும், அம்மென் மைந்தரை யில்லவர்க் கில்லை
மற்றதனால், எம்மை யாளுடை முருகவே ளடிமல
ரிறைஞ்சிச், செம்மை நன்மகற் பெறுகுவ மெனச்-
சிந்தை செய்தான். (4)

[செய்தவன் தன் மனைவியோடுங் குறிஞ்சி நிலத்திற்சென்று அந்நிலக் கடவுளாகிய முருகவேளை முன்னி, விழாப் பல விழைவின் இயற்றி, அப்பெருமான் அருட்பயனால் ஆண்மக வொன்றினை அருளப் பெற்றனன். பெறலும் அம் மகவை]

பூங்குழல்வேல் நெடுங்கண்ணாள் புனலாட்டிப் புனைந்துதர, வாங்குசிலை மறவர்கோன் மணிமகனைத் தடக்கையால், தாங்குபுதிண் ணென்றிருந்த தன்மையால் திண்ணனெனத், தேங்கியபே ருவகையொடுந் திருநாமஞ் சாத்தினான். (5)

தருணமதிநிலத்திடைத்தவழ்வதெனத் தவழ்தந்து, பொருதிரைவார் கடலாடைப் புவிமகள்செய் புண்ணியத்தால், திருவடிமா மலர்சுமப்பச் சேர்த்திளமென் னடைபயின்றான், குருதிவடி யிலங்கிலைவேற் குகனருளாற் பெறுமைந்தன். (6)

குன்றிவட மரைதயங்கக் கொடுவரிவள் ளுகிர்க்கோவை, நன்றுகழுத் தினிலிலங்க நனந்தலைச்சீ றூர்முழுதும், ஒன்றுசிறு ரொடுசிறுதே ருருட்டியும் பேதைய ரிழைத்த, துன்றுமணிச் சிற்றில்லந் துடைத்தும்விளை யாட்டயர்ந்தான். (7)

வாமிளமான் கன்றுகளும் வள்ளுகிர்நோன் றாட் புலியின், கோமளநற் குருளைகளுங் குடாவடியின் குட்டிகளும், தாமிழைத்த முற்றவத்தாற் சவரர்குலா திபன்பயந்த, மாமகனார் கைப்பட்டு வளர்ந்தவற்றிற் களவில்லை. (8)

[பின்னர், நாகனென்பான் தன் மைந்தனை இளவேட்டஞ் செய்விக்கக் கருதி, உறவினரோடுங் காட்ட கத்தடைய, ஆண்டு யாவரும் நீர் விளையாடல் செய்வாராயினர். அவருள்]

மூரிதி ரைப்புனன் மூழ்கி யெழுதரும்
அரிம தர்க்கணாள் அங்கலுழ் வாண்முகம்
இரைதி ரைக்கட லின்கண் ணெழுதல்செய்
விரிக திர்க்கலை வெண்மதி யொத்ததே (9)

சிற்றிடை யொருத்தி தைத்த தேக்கிலைத் தேற லேந்தி, மற்றத னகந்தோன் றுந்தன் மதிமுக நோக்கி யுண்டாள், கற்றையங் கதிர்வெண் டிங்கள் கள்ளொடென் வயிறு புக்கின், றிற்றது நிலவு நம்மூர்க் கினியிலை யுண்மை யென்றாள். (10)

[இன்னணம் நீர்விளையாடியும் பூக்கொய்தும் சிலம்பெதிர் கூவியும் தீர்ந்த பின்னர் வேட்டைமேற் சென்றனன் திண்ணனென்பான்.]

கனைமாமழை யிடிபோலதிர் கடுவாய்மரை யாமா, இளையாவலி யுடைமாகளி றெழுவாய்வனம் வாழ்மா, வனைவார்கழன் மதயானைகண் மலைவார்-விடு வார்கோண், முனைவாளிக ளுடன்மூழ்கலின் முளைவாயின மாதோ. (11)

ஆயகா லையில்வில் வேட ரார்ப்பினா லெழுந்து கான்சூழ், போயவல் வலைப ரிந்து பொருகடுங் காலிற் பொங்கி, மாயிருங் கேழ லொன்று மலை-புகப் போதல் கண்டான், காயழல் வெகுளி யான்-பின் கையில்வில் லொடுது ரந்தான். (12)

துரந்துபின் செல்லச் செல்லத் துனைவிற்போ யெறுழியாற்கீழ், இருந்தரு ளிலிங்கத் தின்பா லெய்தலு மறைந்த தண்ணல், வரம்பில்விம் மிதத்தனாகி மற்றிது மறைந்த தென்னோ, தெரிந்தில மென்று நின்றான் சிவலிங்க மிருத்தல் கண்டான். (13)

நாள்பல பிரிந்திருந்து நண்ணிய சிறுச தங்-
கைத், தாளிள மகனைக் கண்ட தாயெனத் தாழா
தோடி, நீளெழுவனைய தோள்கண் ஞெமுங்குறத்
தழுவி மோந்து, வாளழ லரக்கி னன்ன மனத்தினால்
முத்தங் கொண்டான். (14)

செய்யகண் ணீரரும்பச் செறிமயிர் பொடிப்ப
வாதன், கையகப் பட்ட தெய்வக் கதிர்விடு மணியி
னாயேற், கையன்வந் தகப்பட் டானென் றணியெயி
றிலங்க நக்கு, மெய்யெலா மெய்யன் பாய விடலை-
மற் றின்ன சொல்வான். (15)

யானையும் புலியு மெண்கும் யாளியு முளவுங்
கூர்ங்கோட், டேனமுந் திரியுங் காட்டு ளெந்தைநீ
துணையு மின்றிக், கூனல்விற் றடக்கை வேடர் குல-
மென விருப்ப தென்னே, ஊனுண வுனக்கி யாவ
ருண்கெனத் தருவா ரந்தோ. (16)

தேனொடு தினையின் பிண்டி தீம்பழங் காய்கி
ழங்கு, மானொடு முயலெய் கேழல் வல்லுடும் பழுங்-
கிவற்றின், ஊனுண வென்றிவ் வெல்லா முதவுவல்
யானே நல்ல, கானவர் துணையுண் டெம்மூர் காண்-
டிவா வென்று நின்றான். (17)

சாமிநீ தனியே யீண்டுத் தங்குத றரித்த லாற்-
றேன், எமநல் லுடுப்பூர்க் கின்னே யென்னொடு வரு
தல் வேண்டும், நீமன மிரங்கா யெந்தா யெனப்பல
நிகழ்த்தி னானக், கார்மழை யனையா னற்புக் கட-
லினுக் கெல்லை யுண்டோ. (18)

மறுமொழியிறைவ னொன்றும் வழங்கல னிரு-
ப்ப மீளி, இறைதிரு வுளத்தி னெண்ண மிவ்வயி
னிருத்தல் போலும், சிறியனே னினியித் தெய்வ
சிகாமணி தன்னை நீங்கின், உறுவனோ வுயிரினோடென்
றுரைத்தன னின்றா னங்கே. (19)

பின்புவேட் டுவர்தங் கோமான் பெரும்பகலா
யிற் றன்னோ, என்பெருந் துணையாய் நின்ற விறைவ
னார் மிகப்ப சித்தார், இன்சுவை யூண்கொணர்ந்திங்
கிடல்வேண்டு மென்ன நீங்கின், கொன்சின விலங்கி
னீட்டங் குறுகியென் செயுமோ கெட்டேன். (20)

என்றுசா லவுமி ரங்கி யெரிபசி மிகாத முன்-
னஞ், சென்றொரு கணத்துட் கொண்டு திரும்புவ
மெனத்துணிந்து, குன்றிடை யெனக்கு வாய்த்த
குலமணி விளக்கே யெந்தாய், உன்றழற் பசித
ணிப்ப வுறுசுவை யிறைச்சி கொண்டே. (21)

உழுந்துருள் பொழுதின் மீள்வே னொருகண
மேனுந்தாழேன், வழங்குறு கொடுவி லங்கு வரு
மென வஞ்சேலைய, எழுந்துமேல் வந்த தாயின்
என்னையொய் யெனக் கூவென்று, குழைந்தவிற்
றடக்கை கூப்பிக் குறவர்கோ னரிதி னீங்கி. (22)

கடிக்கடி மனையு ணின்ற கன்றகல் புனிற்றாப் போல
அடிக்கடி திரும்பி நின்றே யையர்தந் தனிமைக்கேங்கி
வடிக்கடி யம்புபட்டு மழைமுகி லெனக்கிடக்கும்
கிடிக்கடி வேட்டைக் கானங் கிளர்கடுங் காலிற் சென்றான்.

[சென்று, ஆண்டெதிர்ப்பட்டதோர் எய்யினை
யெய்து, அதன் உடலங்கீறி, ஆண்டிருந்ததோர்
பாறையின்மீது எரியிட்டு வெதுப்பி]

பல்லினால் மெல்ல மெல்லப் பன்முறை யதுக்-
கிப் பார்த்து, நல்லன விறைச்சி யெல்லாம் நவையில்

தேக்கிலையிற் றைத்த, கல்லையுள் வாங்கி வைத்துக் கழிசுவை யிலாத வெல்லாம், வல்லைவெள் ளிடையு மிழ்ந்தான் வருபவக் கடலமிழ்ந்தான். (24)

பூந்தளி றோடு கொய்த புதுமலர் தலையிற் பெய்து, தாந்திர விதியென் றாட்டுந் தண்புனல் வாய்முகந்து, தீந்தசை யமுது பெய்த தேக்கிலைத் தளிகை யோர்கை, ஏந்தியம் பொடுவில் லோர்கை யெடுத்து வல் விரைவிற் போந்தான். (25)

என்னா ருயிர்க்குத் துணையாவா ரெரிவெம் பசியா லிளைத்தாரோ, அன்னோ கொடிய விலங்கினத்தா லச்சுற்றாரோ வெனப்பதைத்துத், தன்னா தரவிற் பார்ப்பருந்தத் தாழா தோடும் பறவை யென, முன்னா மனமும் பின்னாக முதல்வன் றன்பா லோடினான். (26)

அண்ணலைக்கொடு விலங்கினங் குறுகுத லஞ்சி
வண்ணு திக்கணை தொடுத்தகூன் வில்லொடு மறந்தும்
கண்ணி மைத்தில னாகியே வைகறை காறும்
மண்ணெ ழுப்புரை தோளனின் றானிறை மருங்கு (27)

அன்ப ரன்பினுக் ககப்படு பேரரு ளாழிக்
கின்ப வூன்றிரு வமுதமாக் கியவுளத் தெண்ணி
வன்பெ ருஞ்சிலைத் தடக்கையான் வைகறைப் போது
பொன்ப ரந்தொளிர் மால்வரைச் சாரலிற் போந்தான்.

[இஃது இவ்வாறாக, அவ்வாலயத்துள் சிவலிங்க-பூசனை புரியும் சிவகோசரியார் என்னும் அந்தணர்]

அருளு மானாப் பொறையு மறிவொடு
தெருளு நோன்புஞ் சிவனிடத் தன்பினோ
டிருளிற் றீரவா இன்மையுங் கல்வியும்
அருளின் மெய்ம்மையு மாணுரு வாயினான் (29)

வெறுப்பில் சந்தன மெய்யெலாம் பூசினின்
றிறப்ப வின்ப மியற்றுநர் தங்களும்
கறுத்தெ ழுந்தெதிர் காயமுறப் பெய்துதன்
புறத்து வார்களு மொத்த வுளத்தினுன். (30)

தேன்கு லத்தொடு செவ்வழி வண்டுளர்
கான்க டுக்கையங் கண்ணியன் முன்பெலாம்
ஊன்கி டத்தல்கண் டுள்ள நடுங்கியே
தான்கு தித்தய லோடினன் தாழ்விலான். (31)

மேவார்வந் தடிபணியும் விண்ணோர்கண் முடிமணிகள்
ஒவாது கிடந்தொளிரும் உடையபிரான் திருமுன்னர்
ஆவாவிக் கொடும்பாவ மார்செய்தா ரிதுசெய்யத்
தேவாதி தேவனார் திருவுள்ள மிசைந்தாரோ. (32)

கொல்லாமை யறியாமைக் குணமாகக் கொண்டொழுகும்
பொல்லாத சிலவேடப் புலைஞரே யிதுசெய்வார்
ஒல்லாத செயலிதையன் புடையோர்கள் கண்டக்கால்
நில்லாம லிறந்திடுவர் நிற்கின்றேன் கொடுவினையேன்.

[என்று இவ்வாறு மனமுளைந்து பின் தேறிப் பூசை செய்து போனவர் மறுநாளும் இறைவன் சந்நிதியில் ஊன்கிடத்தலைக் கண்டு வருந்தினர். இப்படித் தினந்தோறும் வருந்துகின்ற அன்பர் துயரை யொழிக்கவேண்டி]

கங்குலைந் தாவ தன்கண் கனவிடைத் திருக்காளத்திச், சங்கரன் வந்து சொல்லுந் தவத்துறை பயின்ற மேலோய், இங்குநீ நம்முன் கண்ட திறைச்சியென் றினையல் வாழி, அங்கது நாம ருந்தும் அரும்பெற லமுதங் கண்டாய். (34)

அதுநமக் கிடுவோன் செய்தி அறைகுது மம்ப தெய்வ, நதிபல படிந்து நோற்று நவையில் தானங்-கள் செய்தும், விதிபுறங் கண்டு பெற்ற மெல்லெ-ழின் மகன்மேற் றாய்க்குப், புதியவன் பெனைத்த னைத்தப் புண்ணியற் கென்மே லன்பு. (35)

மற்றவன் செருப்புக் காலான் மணங்கமழ் நமது சென்னி, உற்றபூ மாற்றுங் காலத் துடம்-பெலா மயிர்பொ டிப்பச், சிற்றிள மகன்பூங் கை-யாற் றிருமுகம் வருடப் பட்ட, பெற்றதா யென்ன நெஞ்சம் பெரிதுரு குதுமா லன்ப. (36)

இந்திரன் முதலோர் செம்பொன் எரிமணிக் கலத்தி லேந்தும், மந்தர வரையி னாழி மதித்தவா ரமுத மெல்லாம், முந்துதன் வாய்ப்பெய் தாழ்ந்த முழுச்சுவைச் சூட்டி றைச்சி, வெந்திறல் தந்த பின்-னர் வேம்பொடு கடுவு மான. (37)

அவன்மன நமக்குக் கோயில் அவனுரை பல-வும் வேதம், அவன்முயல் தொழில்க ளெல்லாம் அறத்தொழி லைய மில்லை, அவனியல் காட்டுகின்-றாம் அன்ப நீ நாளை யேவந், தவனறி யாத வண்ணம் அயலொளித் திருத்தி யென்றான். (38)

[இதுநிற்க, திண்ணன் நடவையில் துர்நிமித்-தங்கண்டு நம்மிறைவர்க்கு என்னுற்றதோ]

எனமனங் கலங்கி யொய்யென் றெறுழ்வலிக் காளை செல்லச், சினவிடை வலனுயர்த்த செக்கரீர்ஞ் சடைநு தற்கண், புனிதன்மற் றவனன் பெல்லாம் புண்ணிய முனிக்குக் காட்ட, நினைபுதன் வலக்கண் செம்புண் ணீருக நின்றான் கண்டான். (39)

காண்டலும் வாய்நீர் சிந்தக் கையிலூன் சிதற வம்பும், கோண்டரு சிலையும் வீழக் குஞ்சிப்பூ விறைய வாட்டும், நாண்டொட ரற்ற கால நாடகப் பாவை போலத், தூண்டரு தடந்தோட் காளை தூண்ணென நிலத்து வீழ்ந்தான். (40)

நெடும்பொழு துள்ளு யிர்ப்பு நின்றுயி ருலந்-தா ரென்னக், கிடந்துபின் கையா றெய்தக் கெடு-நினை வடைந்தெ ழுந்தே, ஒடுங்கலி றுயரா னெஞ்ச முண்ணப்பட் டுருமே றுண்ட, மடங்கலே றென்ன நம்பி வாய்விட்டான் கண்ணீர் வார. (41)

முழுவலித் தடக்கை யாற்றன் முகமெலாங் குருதி பொங்கி, ஒழுகிய வடித்துக் கொண்டா னுறுகண்ணீர் வெள்ளம் போர்த்த, எழில்கனி மார்புவீங்க வெற்றினன் தலைபி ளக்கக், கழி துயர்க் கடலி னாழ்ந்தான் கல்லொடு மோதி னால், (42)

ஓடுவன் மீள்வன் வீழ்வ னுருள்குவ னெழுந்து விம்ம, நீடுவ னந்தோ வென்ப னெட்டுயிர்ப் பெரிவ னெஞ்சம், வாடுவன் பொங்கிப் பொங்கி வாய்விட்டு முகத்தைக் கையால், மூடுவ னழுவன் கைகள் மோதுவன் கற்களோடே. (43)

மலையிடை யெனக்கு வாய்த்த மரகத மணியே செம்பொன், இலகொளிக் குன்றே யெந்தா யெம்-பிரானின்கண் புண்ணீர், கலுழ்தரற் கென்னை கொல்லோ காரணந் திருவாய் சற்று, மலர்கிலை யென் கொ லென்று னவிசோர்ந் தருகு சென்றான். (44)

கையினிற் றுடைத்தான் பல்காற் காலுத றவி-ரா தாக, ஐயனைத் தழுவிக் கொண்டா னலறினா னெடும்போ தெல்லாம், பையென விடுத்துப் பின்பு பச்சிலை மருந்து தந்து, பெய்யினோய் தீரு மென்று பெயர்ந்தனன் மருந்து கொய்ய. (45)

யானினி யிதற்கென் செய்வே னெனவெண்ணி நிற்ப வூனுக், கூனிடல் வேண்டுமென்னு முரைகண்டு தன்கண் வாங்கி, வானவன் றடங்க ணிட்டான் மாறு-மென் றுளம்வ லித்துக், கானவர் பெருமான் றன்-கண் கணையினா லிடந்திட் டானால். (46)

இடந்ததன் கண்ணை யண்ண லிறைகண்ணி லப்-பச் சோரி, மடந்தையோர் பங்க னாங்கே மாற்றினா னதனைக் கண்டான், அடங்கரு மகிழ்ச்சி யென்னு மாழ்கட லதனுட் டாழ்ந்து, முடங்குளை மடங்க லன்னான் முழவுத்தோள் கொட்டி யார்த்தான். (47)

ஓடினான் றிசைகளெல்லா முடம்பெலாங் குலு-ங்க நக்கான், பாடினான் வாயில் வந்த படியெலாங் கைகள் கொட்டி, ஆடினான் றுள்ளித் துள்ளி யாரவா-ரித்தா னின்று, நாடிநான் செய்த செய்கை நன்று-நன் றெனவி யந்தான். (48)

எரிநிர யத்து ணின்று மேறுபு துறக்கம் புக்-கான், ஒருவன்மற் றதனுட் பின்னும் வீழ்ந்தென வுவகை மாறிக், கரையிலாத் துன்ப வெள்ளக் கடலினு ளழுந்தி யேங்கி, வரைபுரை தோளான் பின்னு மருந்துடைமையிற் றெளிந்தான். (49)

இன்னுமோர் கண்ணெ னக்குண் டாதலி னிதற்கஞ் சேனென், றன்னது கழிந்த காலை யையர் கண்ணறிதற் காகத், தன்னெரு செருப்புக் காலைத் தம்பிரான் கண்ணி லூன்றிப், பின்னடு கணைகண் வைத்தான் பிரானது பொறுக்க லாற்முன். (50)

மறைமொழி பிறந்த தம்வாய் மலர்திறந் தருட் பேராழி, யிறைவர் கண்ணப்ப நிற்கவென முக்கான் மொழிந்துகொண்டே, கறையணற் கங்கணத்த கையினுற் பிடித்தார் செங்கை, உறுநறைப் பொல ம்பூ மாரி யும்பர்மண் புதையப் பெய்தார். (51)

நில்லுகண் ணப்ப நில்லுகண் ணப்பவென்
அன்புடைத் தோன்றனில்லுகண் ணப்பவென்
றின்னுரை யதனெடு மெழிற்சிவ லிங்கந்
தன்னிடைப் பிறந்த தடமலர்க் கையால்
அன்னவன் றன்கையம் பொடுமெகப் படப்பிடித்
தருளின னருளலும்
விண்மிசை வானவர்
மலர்மழை பொழிந்தனர் வளையொலி படகந்
துந்துபி கறங்கின தொல்சீர் முனிவரு
மேத்தின ரின்னிசை வல்லே
சிவகதி பெற்றனன் திருக்கண் ணப்பனே. (52)

## XVI. ஒளவையார்

ஒளவையார் தன் தாய்க்கு மனவுறுதி யுண்டாகப் பாடியது.

இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்னாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ. (1)

கம்பர்போலப் பாரகாவியம் பாடுவோர் ஒருவருமில்லை என்று சோழன் சொன்னபோது பாடியது.

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்—யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லார்க்கு மொவ்வொன் றெளிது. (2)

சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் — நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம். (3)

வலியோர்முன் மெலியோர் அஞ்சுவர் எனப் பாடியது.

காணாமல் வேணதெல்லாங் கத்தலாங் கற்றோர்முன்
கோணாமல் வாய்திறக்கக் கூடாதே — நாணாமல்
பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்கால்
கீச்சுக்கீச் சென்னுங் கிளி. (4)

நல்வழியில் செலவழியாத செல்வம் சீரழியுமெனப் பாடியது.

நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்-வம்புக்காம்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காம்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண். (5)

அன்பிலாது அன்னமிட்டவளைக் குறித்துப் பாடியது.

காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணுக்க வாய்திறக்க மாட்டாதே—வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ
அன்பில்லா ளிட்ட வமுது. (6)

நற்குண மில்லாத மனையாளோடு வாழ்தலினும்
துறப்பதே சிறப்பெனப் பாடியது.

பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடி யிருக்கலாம் — சற்றேனும்
ஏறுமா றாக விருப்பாளே யாமாயின்
கூறாமற் சந்நியாசங் கொள். (7)

கம்பன் ஔவையை அடியென்று சொல்லியபோது பாடியது.

எட்டேகா லட்சணமே யேமனே றும்பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே — முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் றூதவனே
ஆரையடா சொன்னா யது. (8)

உத்தமர் மத்திமர் அதமர் என்பாரை உவமித்துப் பாடியது.

சொல்லாம லேபெரியர் சொல்லிச்செய் வார்சிறியர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே — நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடிற்
பலாமாவைப் பாதிரியைப் பார். (9)

இதனினும் இது நன்றெனப் பாடியது.

ஏசி யிடலி னிடாமையே நன்றெதிரிற்
பேசு மனையாளிற் பேய்நன்று — நேசமிலா
வங்கணத்தி னன்று வலியபகை வாழ்வில்லாச்
சங்கடத்திற் சாதலே நன்று. (10)

செருக்குற்ற புலவரை நோக்கிப் பாடியது.

கற்றதுகைம் மண்ணளவு கல்லா வுலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகிறாள் — மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண். (11)

நான்குகோடிக்குப் பாடெனப் பாடியது.

மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடிபெறும்
உண்ணீருண் ணீரென் றுபசரியார் தம்மனையி
லுண்ணாமை கோடிபெறும்
கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்
கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைநாக்
கோடாமை கோடிபெறும். (12)

பொற்கிழி அறம்படி பாடியவை.

ஆர்த்தசபை நூற்றொருவ ராயிரத்தொன்றாம்புலவர்
வார்த்தை பதினா யிரத்தொருவர் — பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே தாதாகோ டிக்கொருவர்
உண்டாயி னுண்டென் றறு. (13)

தண்டாம லீவது தாளாண்மை தண்டி
அடுத்தக்கா லீவது வண்மை — அடுத்தடுத்துப்
பின்சென்றா லீவது காற்கூலி பின்சென்றும்
ஈயானைச் சம்போ லறு. (14)

பயனற்றன இவை யெனப் பாடியது.

மாடில்லான் வாழ்வு மதியில்லான் வாணிபநன்
னாடில்லான் செங்கோ னடாத்துவது — கூடும்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டு
விருந்தில்லா வீடு விழல். (15)

# அரிச்சந்திரன்

## சத்தியம் தலைகாக்கும்

நீர்நில வளங்கள் நிறைந்து, குடிவளந் தழைத்து, கோல்வளை மோங்கி, எந்நாட்டினும் முன்னுட்டிக் கூறுஞ் சிறப்பினை யுடையது கோசலநாடு. அந்நாட்டின்கண் அயோத்தி யென்னும் அணி நகர் ஒன்று உண்டு. அந்நகரினையே அரசிருக்கையாகக் கொண்டு அரிச்சந்திரன் என்னும் அரசன், தன் குடிகளுக்குத் தன்னாலும் தன் பரிசனத்தாலும் வேற்றரசராலும் கள்வராலும் விலங்குகள் முதலியவற்றாலும் நேரும் ஐவகைத் துன்பந் துடைத்து, இன்பங் கொடுத்து நீதிபுரிந்து வந்தான். 'அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்' என்னும் ஆன்ருேர் வாக்கே போல், அக்குடிகளும் அடக்கம், பொறை, உண்மை, பக்தி, கடவுள் வழிபாடு ஆதிய நற்குண நற்செய்கைகளுக்கு உறைவிடமாக இருந்தனர். களவு, கொலை, பொய், பொருமை ஆதிய தூர்க்குண வியல்புகளனைத்தையுஞ் சொன்முகத்தா லன்றிச் செய்கை முகத்தால் தினைத்துணையும் அறியா தொழிந்தனர்.

தன் குடிமக்கள் இவ்வாருமாறு செங்கோல் நடாத்திவரும் அரிச்சந்திரன், ஒருநாள் தன் அரசிருக்கை மண்டபத்தை யடைந்து, வீற்றிருந்த பின்னர், அவண் அமைந்திருந்த பலர்க்கும் விடை கொடுத்து, சிலருடன் சல்லாபித்துக்கொண் டிருந்-

தனன். அக்காலத்தே, தலயாத்திரை புரியுந் தவத்-தினையே மேற்கொண்டொழுகும் அருந்தவத் தந்த-ணாளர் சிலர், அவ்விடத் தடைந்தனர்; அடைத-லும் அரையன், ஆவினைக் கண்ட இளங்கன்றென, இருக்கைவிட்டெழுந்து, எதிர் சென்று வணங்கி, முகமன் கூறி, உயரிய ஆதனங்களில் இனிதிருத்திக் கூறுவான்:

'முக்குறும்பெறிந்த முனிவர்காள்! அடியேன் இயற்றிய அருந்தவப் பயனோ? அன்றி, இவ்-வயோத்திமாநகரம் இயற்றிய தவமோ? யாதோ அறியேன், நீவிர் ஒருங்கே திரண்டு அடியேன் உய்யுமாறு ஈண்டு அடைந்தது' என மற்றுஞ் சொல்வான். 'ஐம்புலனடக்கிய அந்தணீர்! நீவிர் எவ்வெத் தேசங்களைக் கண்டனீர்? எவ்வெத் தீர்த்தங்களி லாடினீர்? அவ்வவ் விடங்களில் யாது புதுமை கண்டீர்? திருவாய் மலர்ந்தருள வேண்டும்' என்று வேண்ட, அந்தணர் கூறுவாராயினர்.

'வெற்றிவேல் வேந்தே! தன்னே ரில்லாக் கன்னோசி என்பதோர் நாடுண்டு. அதனை எண்-டிசையோருங் கொண்டாட வளந்தருவது கண்டகி என்பதோர் நதி. அத் தெய்வத் தீர்த்தத்தில் யாங்-கள் நீராடிய பின்னர், நின்னைக் காணும் விருப்-பினையே யெய்தினோம். அது என்னையெனின், அக் கன்னோசி நாட்டகத்தில் தலைமை பெற்று விளங்-கும் கன்னமாபுரியை அரசு புரியும் சந்திரதயன், சந்திரகுலத்துத் தோன்றல்; சிவநேசம் மிக்குடை-யவன்; அவ்விறைவன் பரமசிவத்தை யுன்னி யியற்-றிய வருந்தவமே யோருருக் கொண்டதென்ன ஒரு பெண்மணியைப் பெற்றான்; அம்மகவுக்குச் சந்திர

மதி எனப் பெயரிட்டு அழைத்தனன். அம் மாது சிரோமணி

மண்மடந்தையர் தம்முளும் வாசவனு றையும்
விண்மடந்தையர் தம்முளும் நிகரிலா விறல்வேற்
கண்மடந்தையர் தண்குழ லருந்ததி கற்பிற்
செண்மடங்குகற் புடையளிந் திரையினு மெழிலாள்'

என, மற்றும் அவளது நற்குண நற்செய்கைகள் அனைத்து விளங்கக் கூறி, 'அக்கற்பரசியே நினக்கு மனைவியாக வாய்ப்பின், பொன்மல ரொன்று நாற்றமும் எய்தியவாறாகும்' என்றனர்.

சந்திரமதி என்னும் தையல், முனிவர் மொழி வழியே அரிச்சந்திரனது செவியினுள் நுழைந்து, மனத்துட் சென்று, அவன் மனமுழுவதையும் தன் வயமே யாக்கிக்கொள்ள, அரசன் ஒன்றுந் தோன்றாகி, அந்தணரை நோக்கிக் கூறுவான்.

'அந்தணீர்! கன்னமா புரிக்குக் காவலன் அருந்தவ முயன்று பெற்ற கன்னியைக்கண்டு, அடியேனை யுள்ளத்திற்கொண்டு, ஈண்டடைந்த கருணைக்கு இலக்காக அம்மாதரசி அடியேற்கு மணமாலை சூட்டவும் அருள்புரிவீரேல் அது என் நல்வினைப் பயனே யாமெனக் கொண்டு மகிழ்வேன்' என்றான். அதுகேட்ட அந்தணர் அரசன் டு கோளுக்கிரங்கி—'மன்னர் மன்ன! நீ விழைந்தவாறே, தெய்வத் திருவருளை முன்னிட்டு முடிப்போம்; கவலை யொழிக' எனத் தேற்றி, மலைகளையும் யாறுகளையுங் கடந்து, திருமா மகளுக்கு ஒரு தனிப் பூங்கோயிலெனப் பொலியுங் கன்னமாபுரியில் மதிதயன் அவைக்களத்தை யடைந்தனர். அடைந்த அந்தணரை, மடையுடைந்த வெள்ளம்

போல், எதிர்சென்று வணங்கி, ஆதனத்தில் இருத்தி, 'ஐயன்மீர்! நீவிர் கண்டகி நதியில் நீராடிச் சென்று, அதிவிரைவின் மற்றுமிரண்டாம் முறை போந்த காரணம் யாதோ?' என வினவினன்.

முனிவர் கூறுவர்: 'செங்கோல்வேந்தே! யாங்கள் இக் கன்னமாபுரியை நீங்கி அயோத்தி நகரையடைந்தோம். ஆண்டு செங்கோல் நடாத்தும் அரிச்சந்திரனிடம், நின் நகரவளத்தினையும், நேர்மையையும், நின் அருந்தவப் புதல்வியின் நிறை குணங்களையும் வெளியிட்டோம். பின்னர் நின்பால் எய்த நேர்ந்த மகிழ்ச்சியால் ஈண்டு உற்றேம்' என்றனர்.

மன்னன் அம் மங்கல மொழியைக் கேட்டுக் களிப்புடன் கூறுவான்: 'அந்தணீர்! அடியேன் சிவ பெருமானை வேண்டித் தவம் புரிந்து, இப் புதல்வியைப் பெற்ற காலத்து அம் மகாதேவன் திருவாய் மலர்ந்தருளிய இரகசியம் ஒன்றுண்டு; அதனை அறியவல்லார் யாவரே யாயினும் யான் அரிதின் ஈன்ற பூங்கொடியை மணப்பர். ஆதலின், அதனையறிவோம், அம் மன்னனையும் அழைமின்' என்றுரைப்பக்கேட்டு, அந்தணர் அகன்றனர்.

பின்னர், மதிதயன் மற்றைய வேந்தர்க்கும் சுயம்வரம் குறித்து, திருமுகம் போக்கினன். கன்னோசி நாட்டுக் காவலன் அனுப்பிய திருமுகத்தைக் கண்ட வேந்தர் பலரும், பெரு மகிழ்வுடன் தத்தம் சதுரங்க சேனையும் புடைசூழப் புறப்பட்டுக் கன்னமாபுரியை யணுகி, அந்நகரத்துற்ற சோலைகள் முதலிய பல்வேறிடங்களில் சூழ்ந்து நிறைந்தனர்.

இஃது இங்ஙனமாக, சந்திரதயன் கொலுமண்டபத்தை நீங்கிய தபோதனர் விரைந்து சென்று அயோத்தியில் அரிச்சந்திரன் சமுகத்தை யடைந்தனர். அடைதலும், அன்னார் அகக்குறிப்பை முகத்திற் கண்டு முகமலர்ச்சிகொண்ட அரிச்சந்திரன் வணங்கிக் கேட்க முனிவரர் கூறுவர்:

'அயோத்தியரசே! மதிதயன் தன் புதல்விக்குச் சுயம்வரம் நாட்ட வுறுதி கொண்டான். ஆதலின், நீ விரைவிற் புறப்படுவையாக' எனலும், அரிச்சந்திரன், மகிழ்வுற்று ஆடையாபரண அலங்கிருதனாய், சகல விபவங்களுடனே நால்வகைப் படையும் புடைசூழ, நல்லோரைகொண்டு புறப்பட்டு, இரதத்தில் இவர்ந்து, பல மலைகளையும் யாறுகளையும் சோலைகளையுங் கடந்து, எரியிருந்து நடமிடும் ஒரு பாலைவனத் தெல்லையைச் சார்ந்தான். அங்கு ரத்ன கசிதமாய் விளங்கும் ஓர் ஆலயத்துள் எழுந்தருளிய காளியை வணங்கிய பின்னர், அவ்விடத்திருந்த கற்றேர், கற்குதிரை முதலாயின வெல்லாம் பொற்றேர், பொற்குதிரை முதலாயினவாகத் தோன்றக் கண்டு, அரசன் இதென்ன புதுமையென ஐயங்கொண்டு நிற்குமளவில், காளியருளுருக்கொண்டு வெளிப்போந்து கூறுவாள் — 'வேந்தே! ஒரு காலத்து, வருணன், பொன்னலாகிய இவற்றையெல்லாம் எவருங் கொண்டுபோகா வண்ணம் கல்லேயாக்கி, என்முன் வைத்து, "இவை யுள்ளவாறே பொன்னுருவாகக் கண்டவர்களே இப்பொருட்கு உரியார்" என்று சொல்லிச்சென்றனன். அதேபோல் நீ கண்டனை யாதலின், இவற்றைக் கைப்பற்றிச் செல்க' என்றருளப் பெற்று,

காளியை வணங்கி, அப் பொற்றேரின்கண் இவர்ந்து கன்னமாபுரியை யடைந்தான். அக் காலத்து இரவி-யும் மேற்கடலை யணுகினன். பின்னர், எல்லோரும் திருமண மண்டபத்தை யடையவாரு மென்று அழைப்பதேபோல் சேவல்கள் கூவின. பொழுது விடிதலும், அரசர்கள் திருமணக் கோலங்கொண்டு சுயம்வர மண்டபத்தை யடைந்தனர்.

இது நிற்க, பாங்கியர் சந்திரமதியைப் புண்-ணிய தீர்த்தங்கொண்டு மங்கல ஸ்நாநஞ் செய்-வித்து, அழகுக்கழகு செய்வதேபோல், ஆடை யணிகளால் அலங்கரித்து அழைத்துவர, அம் மங்-கையர்க்கரசியும், ஓர் இளம் பூங்கொடி நடை பெயர்வதேபோல், சுயம்வர மண்டபத்தை யடைந்-தாள். ஆண்டு வீற்றிருந்த அரசிளங்குமரர் சந்திர மதியின் பேரழகைக் கண்டு, பெருமகிழ்வு கொண்டு, இவள் யாருக்கு மாலை சூட்டுமோ வென்று மயங்கி யிருந்தனர். அரிச்சந்திரனும் ஒரு புறத்து இனிது இருந்தனன். அக் காலத்தே பாங்கி அரசிளங் கும-ரரைத் தனித்தனியே சுட்டிக் காட்டி, அவரவர் நாடு, பெயர், குலமுறை முதலியவற்றை விளங்க வுரைத்துக்கொண்டே வந்து, அரிச்சந்திரனை யணு கிக் கூறுவாள்:

'பெண்மணீ! ஈண்டு மன்மதனேபோல் வனப்-புக் கொண்டு வீற்றிருக்கும் மன்னர் மன்னன், கோசலநாட்டுக் கோமான்; சூரியகுலத்துத் தோன்றல்; திரிசங்கு என்னும் வேந்தர் பெருமான் தவப்புதல்வன்; அரிச்சந்திரன் என்னும் பெய-ரினன்' எனக் கேட்ட சந்திரமதி புதியதோர் உவ-கை பூத்துத் தன் பாங்கியின் தோளைத் தாழ்த்தி,

அவ் வரிச்சந்திரன் உள்ளக்குறிப்பை யுள்ளவாறே யறியும் வண்ணம் ஊடுருவப் பார்த்தாள். அம் மன்னனும், சூரியனாகிய தன்னைக் கண்டு மலர்ந்த அவள் முகபங்கயத்தை உற்று நோக்க, அவள் திருக் கழுத்தில் தாலியொன்று விளங்கக் கண்டான். கண்டு உள்ளங் கொதிப்புக்கொண்டு, ஆசை முற்றும் விண்டு, இனி நமக்கியாதுண்டு என்றெண்ணி, மதி-தயனைப் பார்த்து, முகம் வேர்த்து—'ஐய! உமது புதல்வியை இதுகாறுங் கன்னியே யென்று எண்-ணினேம். அவள் முன்னரே ஒருவற்கு மணமாலை சூட்டிக கழுத்தில் மங்கல நாணும் விளங்க நிற்-கின்றாள்; இவள் இன்னமொருவற்கு உரியவளாவ-தெங்ஙனம்?' எனக் கடிந்துரைத்தான்.

அது கேட்ட மதிதயன், 'மாசற்ற நெஞ்சுடை-யார் வன்சொல் இனிது' எனக் கொண்டு, தன் மகிழ்வைப் புறத்தே காட்டாது, மற்றுஞ் சூழ இருந்த அரசரை நோக்கி—'வேந்தர்காள்! இம் மன்னன் கூறிய மாற்றம் மெய்ம்மையோ? பொ-ய்ம்மையோ? சொல்லுமின்' என, அம் மன்னர், 'இதென்ன புதுமை! அம் மங்கை தன் கழுத்தில் மங்கலநாண் வழங்குவது உண்மையாயின், அதனைக் கையிற் கொண்டு காட்டுவிக்க' என்றனர்.

அது கேட்ட மதிதயன் அரசிளங் குமரரைப் பார்த்து—'குலமன்னர்காள்! இக் கொற்றவேல் அரிச்சந்திரன் கூறியது உண்மையே. என்னை-யெனின்—யான் சிவபெருமானை நோக்கி அருந்-தவம் புரிந்து இப் புதல்வியைப் பெற்றகாலத்தே அப் பெருமான் அருளிய இரகசியமொன்றுண்டு; அதுதான் யாதோவெனின், இப் பெண்மணி கழுத்-

தில் வயங்குந் தாலி யாவன் கண்ணுக்குப் புலனுமோ அவனே இம் மங்கை தன் மணாளனாகும் என்பதாம். பின்னர், இவள் கழுத்தில் விளங்கு மங்கலநாண் கண்ணாடி நீழலிலன்றி ஒருவர்க்குங் கட்புலனாவதில்லை; கைக்கும் படுவதில்லை' என்று சொல்லக்கேட்ட அரசர் அனைவரும் பகல் விளக்கென்னப் பொலிவழிந்து இருந்தனர்.

பின்னர், சந்திரமதி மணமாலையை ஆகாயத்தி லெறிய, அது அரிச்சந்திரன் அடலுறுந் தோள்களுக்கு அழகு செய்தது. அது கண்டு, மதிதயன் பெருமகிழ்வு கொண்டு, நல்ல நாளில் தோற்கருவி, தொளைக்கருவி, நரப்புக்கருவி முதலிய பல்வகைய வாத்தியங்களும் ஆரவாரிக்க, சகல ஆடம்பரங்களுடனே அரிச்சந்திரனுக்கும் சந்திரமதிக்கும் திருமணம் முடித்தான். அதன்பின் பல்வேறு தேசத்தரசர்களுந் தத்தம் நாட்டிற்குத் திரும்பினர். அயோத்திமன்னன் சந்திரமதியோடு தன் மாதுலன் அரண்மனையில் சில பகல் வசித்திருந்த பின்னர், தன் மனைவியோடும் அயோத்திநகரை யடையச் சென்றான். செல்லுகையில், வழியில் நேர்ந்த பற்பல சிறப்புகளையும் அரசன் தனது மனைவிக்குக் காட்டிக்கொண்டே வந்து, தன் நாட்டின் எல்லையை யணுகினான். அங்கு மங்கள வாத்தியங்கள் ஒலிக்க, கவிஞர்கள் வாழ்த்த, பெருவிழாக் கொண்டு மணக்கோலத்தோடே அரண்மனையை யடைந்தான். அவ்விடத்தில் இருவரும் மலரும் மணமும்போல் ஒருமனப்பட்டு இனிது வாழ்ந்திருந்து, தாமியற்றிய நன்மைப் பயனெல்லாந் திரண்டு ஒருருக்கொண்டதென்ன ஓர் ஆண்மகவை யீன்றனர். அவனைத்

தேவதாசன் என்றழைத்தனர். அம் மைந்தன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்க வளர்ந்து, தன் பெற்றோர் மகிழ மழலை யாடி மடநடை பெயர்ந்து ஆடல் புரிவானானான்.

இஃதிங்ஙனமாக, பொன்னாட்டிற்கு இறைமை பூண்டு விளங்குந் தேவேந்திரன் ஒருநாள் பஞ்ச தருக்கள் நிழல் செய்யக் கொலுவமர்ந் திருந்தான். அங்கு ஜனகர், ஜமதக்கினி, அத்திரி, அகத்தியர், கௌதமர், வசிட்டர், விசுவாமித்திரர் முதலிய அருந்தவ முனிவரர் வந்து கூடினர். அப்பெரியார் வரவைக் கண்ட தேவராஜன் அவர்கட்கு வந்தனை புரிந்து, தனித்தனி ஆதனத்தி லிருத்தி, — 'மக்களின் மிக்க மாதவ முனிவர்காள்! அடியேன் விண்ணப்பம் ஒன்று. அதுதான் யாதோவெனின்,

பாய்மைக் கலோலக் கடல்சூழ்புவி பார்த்தி வர்க்குள்
தீமைக்கும் வேகச் சிலுருக்கு மிடங்கொ டாது
வாய்மைக்கும் நன்னூல் வளனுக்கும் மனத்தி லுற்ற
தூய்மைக்கும் மிக்கார் தமையாய்ந்துளிர் சொன்மின்'
[என்றான்.

வேதவித்துக்களாகிய முனிவரர், இந்திரன் வாய்மொழிகேட்டு ஆராயுமளவில், தெய்வத்தன்மை விளங்கிய வசிட்டமுனிவரர், மகபதியை நோக்கி,

'பாருக் கொருவன் பரதார சகோத ரன்வெம்
போருக் கொருவன் புகழுக்கும் மறைப்பொ ருட்கும்
நேருக்கும் வீடா மனுநூல் நெறிக்கும் பொறைக்கும்
ஆருக்கும் மிக்கான் அரிச்சந்திர னாகும்' என்றார்.

அதுகேட்ட கௌசிகர் மனங்கொதித்து, புருவம் நெற்றியிலேறச் சினந்து, வசிட்டமுனிவர் வார்த்தையை அறவும் மறுத்து, 'நீவிர் ஈண்டு பெருமிதத்தோடும் எடுத்துக் கூறிய அவ்வரிச்சந்திரன்,

'வெய்யன் பதகன் பரதார விருப்பன் வீணன்
பொய்யன் நிறையும் பொறையுஞ் சிறிதுமில் புல்லன்
கையன் கபடன் கயவன் றனை நல்ல னென்றிவ்
வையன் திருமுன் னுரைத்தாயி தென்னுக' என்றார்.

எனலும், வசிட்ட முனிவர் உளம் பதைத்து—'பழியொடு சிறிதுமின்றி, மாசற்ற மணியேபோல் விளங்கும் அம் மன்னவனை, அடாதிந்தைகள் கூறி இழித்துரைத்த கோசிகமுனிவரே! அவனைப் பழுது சொன்ன உமது வாய் வெந்திலது. சொல்வதற்கு உன்னிய உமது மனமும் வெந்திலது. அங்ஙனம் வம்பு பேசுவதற்கு இடமாயிருந்த நீரும் வெந்தீ-ரில்லை. தெய்வமும் உம்மிடத்துப் பொய்த்தது போலும்' என்று உரைத்தனர்.

கோசிகர் இவைகட்கு எதிர்மொழியாக, 'மெய் பேசிய எனக்கு அத் தீங்குகள் நேர்வன-வல்ல; ஆயின், பொய்ம்மொழி புகன்ற வுமக்கே அவை நேரக்கடவன' என்று ஒருவர்க்கொருவர் சீற்றங்கொண்டு வாதாடுவது கண்ட இந்திரன், அவ் விருவரையுந் தணித்து, — 'முனிவர்காள்! நீவிர் இன்னணம் முனிவு கொள்வது முறையன்று. வேலியே பயிரை யழித்தால் பயிரெங்ஙனம் விளை-யும்? இப்போது, அவ்வரிச்சந்திர மன்னனது குணங்களை ஆராயின், உங்களிருவோரது கக்ஷிக-ளில் ஒன்று மெய்யுறும். அவ்வாறு அம் மன்னனைப் பரீக்ஷிப்பதில் நேரும் வெற்றி தோல்விகளுக்கு நீங்கள் செய்துகொள்ளும் ஆணையாது?' என, வசிட்ட முனிவர் வாசவனை நோக்கி, 'மகவானே! அரிச்சந்திரன் நன்னிலையினின்றுஞ் சிறிதேனும் விலகுவானாயின், அக்கணமே யான் அரிதின் இயற்-

றிய தவமனைத்தையும் ஒருங்கே இழப்பேன்; இம்மட்டோ, புலையர் தஞ்சேரியில் புகுந்து, தலையோட்டிற் பலி வாங்கி யுண்டு அலைவேன்' என்றார்.

இக் கொடிய சூளுரையை உரைப்பக் கேட்ட நாரதமுனிவர், 'அரிச்சந்திரன் நன்னிலையினின்று நீங்க வல்லவனாயின் வசிட்டர் இங்ஙனம் வாது கூறுவரோ?' என்னுமளவில், விசுவாமித்திரர் திடுக்கென எழுந்து, 'வசிட்டரேபோல் யான் ஒன்றும் உரையேன். எனது கக்ஷி பின்னிடுவதாயின் என் அருந் தவத்திற் பாதி அரிச்சந்திரனுக்குத் தத்தஞ் செய்து விடுவேன்' என்றார்.

பின்னர், இந்திரன் இச்செய்தி யொன்றும் வெளியாகாவண்ணம் அடக்க எண்ணி, நாரதர், வசிட்டர் இருவோரையும் தன்னிடத்து இருத்திக் கொண்டான். விசுவாமித்திர முனிவர் தம் நிலையை நாட்டுமாறு விண்ணுலகினின்றும் மண்ணுலகை யடைந்தார். அடைதலும், அம் முனிவரை மற்றைய முனிவர் பலரும் வந்து கண்டு, 'பொன்னுலகில் நடந்த புதுமைகள் யாவை?' என, விசுவாமித்திரர், 'ஓர் அரிய மகம் முடித்தல் வேண்டுமெனத் தீர்மானித்தோம்' என்று வஞ்சகமாகக் கூறினார்.

பின்பு, விசுவாமித்திரர் அரிச்சந்திரன் சமுகத்தை யடைந்து, 'அயோத்தியரசே! யாம் உலகில் எவரும் இயற்றுதற்கரிய வேள்வி யொன்று முடிக்க எண்ணினேம்; அது மன்னவர்க்கு வளந்தரவல்லது; ஆதலின், அதற்கு நேரும் பொருளைப்பெற நின்னிடம் வந்தோம்' என, அரசன் பெருமகிழ் வடைந்து, ஆநந்த பரவசனாய்க் கேட்டதைக் கேட்டவாறே கொடுக்க விரைந்தான். அதுகண்ட கௌசிகர்

அரசனைத் தடுத்து, 'நீ கொடுத்தற்கு இசைந்த பொருளை யாம் வேண்டும்போது பெறுவோம்' எனச் சொல்லித் தம் சூழலை யடைந்தனர்.

பின்னர் முனிவர், காட்டகத்திலுள்ள மிருகங்களும் பறவைகளும் ஒருங்கெய்தி, அயோத்தி நகரை யடைந்து, அவ்விடத்துள்ள பயிர் பச்சைகளனைத்தையும் அழித்து நாசப்படுத்திவர ஏவினர். அவைகள் அயோத்தியை யடைந்து, அக்குடிகள் தம் மக்களேபோல் ஓம்பிவந்த பயிர்களை யழிக்கத் தலைப்பட்டன.

அது கண்ட குடிகள் வயிறலைத்தோடி, அரசனை யண்மி, 'எம் ஆண்டவனே! இதுகாறும் யாங்கள் இத்தகைய இன்னல் அடைந்தோமில்லை; இப்போது பற்பல விலங்குகளும் பறவைகளும் வந்து எமது பயிர்களை யழிக்கின்றன' என்று குறை கூறி முறையிடக் கேட்ட அரசன், மனந்திடுக்கிட்டுக் குடிகளை யொருவாறு தேற்றி யனுப்பிய பின்னர், படைகளும் வேடுவருஞ் சூழக் காட்டகத்தை யடைந்து, எதிரில் நேர்ந்த விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடிக் கொன்று, ஒருபுறத் திருந்தனன்.

தம் முயற்சி வீணானது கண்ட கோசிகமுனிவர் காட்டுப் பன்றியொன்றை ஏவ, அப்பன்றி விரைந்து சென்று நாசஞ் செய்யக் கண்ட வேடுவர், அதனை யொழிக்கத் தம்மாலியன்றமட்டும் முயன்றும் பயன் படாமைகண்டு, அரசன் சமுகத்தில் விண்ணப்பம் செய்து முறையிட, அரசனும் அப் பன்றியைப் பின்பற்றிச் சென்று, எய்து கொன்றான்.

அது கண்ட முனிவர் இரண்டு பெண்களை யழைத்து—'பெண்மணிகாள்! நீங்கள் அரிச்சந்திரன்

சமுகத்திற் சென்று பாடியும் அபிநயங் காட்டியும் நடநம்புரிந்தும் அவன் மகிழுமாறு செய்து, அவனது சந்திரவட்டக் குடையைப் பரிசாகப்பெற்று வருதல் வேண்டும்; அல்லது அவனை மணம் புரிந்து வருதல் வேண்டும்' என்று கற்பித்தனுப்பினர். அம்மாதரும், 'அங்ஙனமே யாகுக' என்று விடை பெற்றுச் சென்றனர்.

இது இங்ஙனமாக, நெடுநேரம் வேட்டையாடிக் களைப்புற்ற அரசன், விசுவாமித்திர முனிவர் பன்னசாலையமைந்துள்ள சோலையையணுகி, ஒருபால் தங்கி இருந்தனன். அப்போது, கோசிகமுனிவர் ஆணையின்படியே அம் மாதர் அரிச்சந்திரன் சமுகத்தை யடைந்து, கல்லுமுருகப்பாடி நடித்துச் செவிக்குங் கண்ணுக்கும் இன்பமூட்டினர். அதனால் மகிழ்வெய்திய அரசன் அப் பெண்களை நோக்கி, 'பெண்மணிகாள்! நீவிர் விரும்பியது யாது?' என, பெண்கள், 'மன்னர் மன்ன! இவ்வுலகில் யாங்கள் விரும்பத்தக்கது நினது சந்திரவட்டக்குடை ஒன்றே' என்றனர். அரசன் மறுத்து, 'அது தொன்றுதொட்டு முறை முறையே என்பால் வந்ததாதலின் அதனை யொழித்து, தரத்தகுவ தொன்றைக் கேட்பின் தரலாம்' என்றான்.

அதன்மேல் அம்மாதர், 'கொற்றவேல் வேந்தே! யாங்கள் முதலிற் கேட்டதைக் கொடாதொழியினும் எம்மை மணமாவது புரிந்தருளவேண்டும்' எனக் கேட்ப, அருகிலிருந்த சத்தியகீர்த்தி யென்னும் அமைச்சன் சினந்து அதட்டி அவர்களை அகற்றிவிட்டான். மாதர்கள் அதனால் மனங்கொதித்து, அழுகுரலோடு முனிவரையடைந்து, விளங்-

தனயாவும் விளம்பினர். முனிவர் கண்களில் தீப்பொறிபறக்கச் சீற்றங் கொண்டு அரிச்சந்திரனை யணுகினர். அரிச்சந்திரன் அதுகண்டு நடுங்கித் தலை வணங்கி வாய்புதைத்து, 'முனிவர் நாயக! தேவரீருக்கு அடியனேன் ஒரு பொருளோ? தேவரீரது கோபத்திற்குப் பாத்திரனே?' என்றிரந்து நிற்குமளவில், முனிவர் கோபக் குறியோடே, 'அரிச்சந்திர! நீ மிக்க வஞ்சகன் பிறர் தன் வயப்படப் பேசி மயக்க வல்லவரில் நின்னைப்போலுஞ் சமர்த்தனை இதுகாறுங் கண்டிலேன், யான் அரிதின் ஈன்ற அரிவையர் பாடிய இன்னிசையை வெறுத்தனை; அன்றி, அவர்கள் மனம் நோவ ஒறுத்தனை; இதுவும் செங்கோல் முறையோ?' எனக் கடிந்து பேசுமளவில், அரசன் நடுநடுங்கி, 'முனிவர் பெரும! அப் பெண்மணிகள் தம் மக்கள் என்பதறியேன்' எனப் புகல, 'அறிந்த பின்னராயினும் அவர்களை மணமுடித்துக் கொள்ளத் தடை என்னே?' என்றார் கோசிகர்.

அரிச்சந்திரன் அது கேட்டு உடல் நடுங்கி, முனிவர் நாயக!

> கண்ணை வேண்டினும் ஈகுவன் ஈாக்கின்ற
> மண்ணை வேண்டினும் வாழ்வுட னீகுவன்
> பண்ணை வேண்டிய செஞ்சொற் பறைக்குலப்
> பெண்ணை வேண்டிலன யான் என்று பேசினன்.

பேசக்கேட்ட கோசிகர், 'அரிச்சந்திரா! நின் தந்தையின் புலைத்தன்மையை நீக்கிய எமது திறத்தை நீ யறிந்தும் என் ஆணையை மறுத்தனை இருக்கட்டும், நீ இப்பொழுது "மண்ணை வேண்டினும் வாழ்வுடன் ஈகுவன்" என்று கூறியவாறே நினது நாட்டை எனக்குத் தத்தஞ் செய்யலாமே' என-

னும், அரசன் மனமகிழ்ந்து தன் நாட்டை அம் முனிவருக்கே தாரைவார்த்துத் தத்தஞ் செய்ததுமன்றி, காட்டகத்திருந்த முனிவரை நாட்டகத்திற்கு அழைத்துச் சென்று, தனக்குற்ற பொருள்கள் அனைத்தையும் முனிவருக்கே உரிமையாக்கினான்.

அதுகண்ட குடிமக்கள் ஆறாத்துயரங்கொண்டு, அரிச்சந்திரன் அடிகளில் தம் முடிபட வணங்கிப் பிரிவுக்கு ஆற்றாது வருந்தினர். அரசன் அவரவர்க்கு ஏற்றவாறு இதஞ்சொல்லி யனுப்பினான்.

பின்னர், விசுவாமித்திர முனிவர், அரிச்சந்திரன் எவ்வாற்றானும் மனஞ் சோர்வுறாமைகண்டு, ஒரு சூழ்ச்சி எண்ணி, 'மன்ன! நீ எமக்கு நின் நாட்டை யளித்தனை மெய்யே; ஆயினும், நீ முன்பு வேள்வியின் பொருட்டு எமக்குக் கொடுத்த அப் பொருளை யுன்னிடமே வைத்தகன்றோம் அன்றோ? அதனை இப்போது தருக' என்று கேட்டலும், 'அது பொருட் சாலையிலேயே யிருக்கின்றது' என்றான் அரசன். முனிவர், 'நாட்டை எமக்களித்த பொழுதே அதில் பொருட்சாலையும் அடங்கிவிட்டதன்றோ, அப்போது நீ இதைக் குறித்தாயில்லையே' என, அரிச்சந்திரன், 'அப்படியாயின் அப்பொருள் முற்றும் நாற்பதுநாள் தவணைக்குள் சேர்த்து விடுகின்றேன்' என்று கூறி, அம் முனிவர் அருளிய காவியுடையைத் தானும் மனைவியுந் தனயனும் உடுத்துக்கொண்டு, நகரை யகன்று, அணித்தான ஒரு சோலையின்கண் தங்கியிருந்தனன். அரசனை விட்டு அகன்றறியாத சத்தியகீர்த்தி அவனைத் தொடர்ந்து செல்ல, அரிச்சந்திரன் அவற்குப் பற்பல நியாயங் கூறித் தடுத்துங்கேளானாகி, உடன்செல்லத் துணிந்-

தமைகண்டு, அரசனும் அவனைத் தன்னுட னழைத்தேக வுடன்பட்டனன்.

இது இவ்வாறாக, விசுவாமித்திரர் அரிச்சந்திரனது மனநிலையைச் சோதிக்க எண்ணி, அவன் தங்கியிருந்த பொழிலின் ஒருபுறத்து மறைந்திருந்தனர். அப்போது அமைச்சருங் குடிகளும் அரிச்சந்திரனிடம் வந்து, விசுவாமித்திரனை வெறுத்துரைத்து, 'அம் முனிவனை யாமே போர்முகத்துப் பொருது, வெல்வோம்; நீர் நகருக் கெழுந்தருளும்' என்று வேண்டுதலும் அரசன் அதற்கு உடன்படாது, அவர்களுக்கு அநந்த நீதிகள் கூறி அனுப்பிவிட்டான்.

இவற்றையெல்லாங் கேட்டுநின்ற முனிவர் அரசன் எதிரில் வந்து, 'அரிச்சந்திர! நீயும் உன் அமைச்சர் முதலாயினோரும் எம்மை இப்போது இகழ்ந்தீர்கள்; ஆதலின், நீ தந்த நாட்டை நீயே யடைதி; இனி அது எமக்கு வேண்டா' என, அரசன், 'என் உயிர் துறப்பினுந் துறப்பேனே யல்லது, கொடுத்ததைத் திரும்பப் பெறேன்' எனத் தடுத்துரைத்து, முனிவரிடம் விடைபெற்றுச் சென்றான். செல்லுங்கால் முனிவர் அரிச்சந்திரனை விளித்து, 'என் பொருளுக்கு வழியாது?' என, அரிச்சந்திரன் முன்போலவே நாற்பது தினங்களில் தருவேனென்று உறுதிமொழி யுரைத்தான்.

முனிவர் நக்ஷத்திரேசன் என்னும் சீஷன் ஒருவனை யழைத்து, 'நீ சென்று நமக்குச் சேரவேண்டிய பொன்னை இவ் வரிச்சந்திரனிடம் பெற்று வருக; செல்லும் வழியில் எவ்விதத்திலாயினும் அரிச்சந்திரன் புல்லொழுக்க முடையவனென்று புலப்படுத்த வேண்டும். அவன், 'நான் இப்பொருள் முனிவர்க்குக் கொடுக்க வேண்டியதில்லை' எனினுஞ்

சாலும். அம்மொழியவனிடம் உண்டாயின் மற்றொன்றும் பேசாது உடனே வந்துவிடுக. "கொடிது கொடிது வறுமை கொடிது," என்பவாகலின் அரிச்சந்திரன் பொய்யுரை புகல்வானென்பதிற் சற்றும் ஐயமில்லை. ஒருகால் மனவுறுதி கொண்டிருப்பானேல், நீ செல்லும் வழியில் ஆகாராதிகளுக்கு அவனைப் பலவிதத்திலும் துன்புறுத்த வேண்டும்' என மற்றும் பல துர்ப்போதனைகள் செய்தனுப்பினர்.

பின்னர், அரிச்சந்திரனும் அவன் மனைவியும் மைந்தனும் மந்திரியும் நக்ஷத்திரேசனும் காசியம்பதியை நோக்கிச் செல்வாராயினர். செல்லுகையில் பாலைவனமொன்று குறுக்கிட்டது. அதில் நடந்து செல்லச் சந்திரமதியும் தேவதாசனும் மிக வருந்துவது கண்டு, பெருங் கவலைகொண்டு, அரசன் வாடி நிற்க, மந்திரியும் மனஞ் சகியாதாகிச் சிறுவனை எடுத்துக் கொண்டு சென்றான். அரசன்,

> பைந்தொடி படும்பரிசு கண்டுயிர் பதைத்தே
> வந்தெனது தோளின் இவர்வாய் என வுரைத்தான்.

அதுகேட்ட சந்திரமதி உள்ளம் நடுங்கி,

> 'பூமாளும் மண்மகளும் ஏறுதல் பொறாமல்
> மாமுனிவ னுக்குற அளித்தநின் மணித்தோள்
> நாமநெடு வேலிறைவ நாயினிகழ் பெண்பால்
> ஆமெளிய ளேறின்நர காழ்ந்தழிவன்' என்றாள்.

எனக்கேட்ட மன்னன் கண்களில் நீர்வார, 'அன்னம்போலும் மென்னடைப் பாவாய்! இந் நன்மதி நினக்கு இன்றேயன்று, என்று முளது' என்று சொல்லி நடந்தான். இந்தக் கொடுமையைப் பார்த்தற்கு அஞ்சியவன் போல இரவியும் மேற்கடலிற்

குளிக்க, பேரிருள் கவிந்துகொண்டது. அப்போது மேகங்கள் திரண்டுவந்து யுகாந்தகால மழையே போல் பொழிந்தன. இவை யனைத்திற்கும் அரசன் முதலியோர் அஞ்சிப் பொறுமையோடுஞ் சகித்துக் கொண்டு ஒருவாறு வழிகண்டு சென்றனர். அவர்கள் படும்பாடு ஒருவாறாக நக்ஷத்திரேசன் தான் படுவதாகக் காட்டும் அச்சத்தையும் வருத்தத்தையும் நீக்க முயலுவதே அவர்களுக்குப் பெருங் கஷ்டமாக இருந்தது. மற்றும் பசித்தழலை யவிப்பதற்கு ஆண்டுக் கிடைக்கும் கனிவர்க்கங்களைக் கொணர்ந்து நக்ஷத்திரேசனுக்குக் கொடுக்கு மளவில், அவன் மிகச் சினந்து அவற்றை வேண்டாதொழிதலும், அரசன் முதலியோர் வணங்கி இன் சொல் பலகூறி அவனை உண்பிப்பாராயினர்.

அப்போது, நக்ஷத்திரேசன் வஞ்ச நெஞ்சமுடையனாய், 'அரிச்சந்திர! நீங்கள் இவ்வாறு துன்புறக் கண்டு என் மனம் கவல்கின்றது. அதனால் ஒன்று சொல்லுகிறேன். அது யாதெனின், நீ விசுவாமித்திர முனிவருக்குக் கொடுத்த நாட்டைக் கொடுத்ததில்லையென்று மறுத்துவிட்டால் முன்பே போற் சுகமடைந்து இருக்கலாமே. அது ஒன்றே நேரிய வழி' என, மன்னவன், 'ஐயரே! துன்பத்தை யஞ்சி யுண்மையை யிழக்கலாமோ! ஒருவாறு அடியேன் மனஞ் சோர்வுற்றுப் பிழைத்து நடக்க எண்ணினும், தேவரீர் அதனைத் தடுத்து அடியேற்கு நல்லறிவுச் சுடர் கொளுத்துவதை விட்டு, இங்ஙனம் அடாமொழி கூறுதல் நன்றோ? பசித்தவனுக்கு அன்னமிடுதலேயன்றி மண்ணை யுண்ணுக வென்று கொடுத்தலும் அறமாமோ?' எனத் தடுத்துரைத்-

தான். பின்னர், ஐவரும் சோணமா நதியை யடைந்து, அன்றிரவு முழுவதும் ஆண்டு வதிந்திருந்து, மறுநாள் வைகறையில் புறப்பட்டு யமுனை நதிக்கரையை யடைந்தனர்.

அவ்விடத்து விசுவாமித்திர முனிவர் மிகவும் விரைந்துவரக்கண்ட அரசன், அம்முனிவரடியில் தன் முடிபட வணங்கி, 'முனிவர் பெரும! தேவரீர் இன்னணம் வருதற்கு நேர்ந்தது யாதோ? அடியேன்; மந்திரி முதலாயினர் தம்முரையை மறுத்துரைத்தனரோ?' எனப் பற்பல வினவினன்.

அதுகேட்ட முனிவர், 'அரிச்சந்திர! நீ நின் மனைவி மைந்தருடன் இவ்வாறு அலைந்து வருந்துவது எமது மனத்துள் பெரு வருத்தத்தை விளைக்கின்றது; ஆதலின், நீ முன்பு எனக்குத் தந்த நாடு நகரங்களை முன்போலவே யடைந்து இன்புற்று வாழலாமே' என, அரிச்சந்திரன், 'யாங்கள் நரகிடைச் சென்று வருந்தினும் ஈந்ததை ஏற்பதில்லை' என்று உரைத்தான்.

முனிவர் நக்ஷத்திரேசனை நோக்கி, 'அரிச்சந்திரன் ஒரு பொய்யேனும் புகலும் வண்ணம் பல்வகையினுந் துன்புறுத்துக' எனக் கற்பித்துத் தம் சூழலை யடைந்தார். நக்ஷத்திரேசனும் அரிச்சந்திரனிடம் வந்து சேர்ந்தான். பின்னர், அரசன் முதலாயினர் யமுனை நதியில் நீர் வற்றும் சமயநோக்கி அதனைக் கடந்தனர்.

அப்பால் ஐவரும் மனமகிழ்வு கொண்டு, மாசற்ற மனத்தினர் வதியும் காசியம் பதியை யடைந்தனர். அந்நகரில்,

எங்கணுஞ் சிவநகர் எங்குந் தீர்த்தங்கள்
எங்கணும் மறையொலி எங்கும் வேள்விகள்
எங்கணும் தருமமீ தெங்கும் மல்கலால்
எங்கணும் அதற்கிணை நாடொன் றில்லையே.

இத் தகைய மாண்புடைய வாரணாசி நகரத்துட் சென்று, ஒரு தருமச் சாவடியின்கண் தங்கி, உணவருந்தி அங்கிருக்குமளவில், நக்ஷத்திரேசன் அரிச்சந்திரனை நோக்கி, 'நீ விசுவாமித்திர முனிவருக்குச் செலுத்தவேண்டிய பொருள் முழுவதையும் இன்னே கொடுத்தா லல்லது இனி யாதொன்றுஞ் செய்ய வொட்டேன்; எங்கும் போகவொட்டேன்' என்று மொழியக் கேட்ட அரசன் செய்வகை ஒன்றும் அறியானாய்த் திகைத்து நின்றான்.

திகைத்து நின்ற கொழுநன் முகத்தை நோக்கிய சந்திரமதி முகம் புலர்ந்து, 'நாயக! கப்பலேறிப் பட்டகடன் கொட்டை நூற்றுத் தீருமா? குளப்படி நீரினால் குளம் நிறையுமா?' என்று சொல்லி வருந்தி, ஒராற்றால் தேற்றி, 'என்னுருயிர்த் தலைவ! வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவார் உண்டோ? அடியேன் இருக்க என்னே மனங் கவல்வது? என்னையுந் தேவரீரது செல்வச் சிறுவனையும் ஒருங்கே ஒருவர்க்கு அடிமையாக்கி முனிவர் கடனைத் தீர்த்தலே நன்று' என்றாள். அரசன் அதுகேட்டு மனம் வருந்தி,

'பெண்மணீ! அது சரியன்று, ஆடவன் அடிமைப்படுதலே அமைவுடையது' என்று சொல்லி மயங்கி நிற்குமளவில், காலகண்டனென்னும் அந்தணனொருவன் வேலைக்காரியொருத்தி வேண்டுமென அவ்வழியே வந்தான். அரிச்சந்திரன் அதன்மேல்

சந்திரமதியை அவற்கு அடிமையாக்க உடன்பட்டான். பின்பு, அப்பிராமணன் அரிச்சந்திரனை நோக்கி, 'இவள் யார்? இவள் பெயர் யாது? அடிமைப்பட வேண்டும் தொகை யாது?' எனலும்,

அரிச்சந்திரன், 'அந்தணர் பெரும! இவள் என் மனைவி; சந்திரமதிப் பெயரினள்; யான் விசுவாமித்திர முனிவருக்கு, வல்லான் ஒருவன் யானை மீதிருந்து எறியச் செல்லுங் கவண்கல் அளவிற்குப் பொன் தரல் வேண்டும்; அவ்வளவு பொன்னே இப்பெண்ணுக்குற்ற விலையாகும்' என்றான். அதற்கு அந்த அந்தணன் — 'இம் மங்கையோடு நின் மைந்தனையும் கூட்டுவையேல் அப்பொருண் முழுவதும் அளிக்கலாம்' என, அரசனும் உடன்பட்டு அவ்விருவோரையும் அவ் வந்தணனுக்கே அடிமை யாக்கி, பொருள் முழுதும் பெற்று, நக்ஷத்திரேசனிடம் கொடுத்து, மனக்கவலை ஒழிந்தான்.

நக்ஷத்திரேசன் அதனோடும் அமையாது, அரசனுக்கு மற்றொரு துக்கமு முண்டாகச் சொல்வான்: 'அரிச்சந்திர மன்ன! முனிவர்க்கு முறைப்படியே சேரவேண்டிய பொருள் முழுதுந் தரப் பெற்றேன். ஆயினும், யான் இத்தனை நாள் திரிந்து வருந்தியதற்குத் தருவது ஏது மில்லையோ?' என, அதுவும் நீதியே யாமென் றெண்ணிய மன்னன் சத்தியகீர்த்தியை நோக்கித் தன்னை எவர்க்காயினும் அடிமை யாக்கி அப்பொருளை நக்ஷத்திரேசனுக்குக் கொடுக்க வேண்டினான். சத்தியகீர்த்தி தன்னை அடிமையாக்குமாறு அரசனை வேண்டியும் உடன்படாமை கண்டு, அரசன் விரும்பியவாறே காசியம்பதியின்

வீதிகடோறும் அழைத்துச் சென்று விலைகூறுவா-னுயினன்.

அதுகண்டு, வீரவாகு என்னும் புலையனொரு-வன் வந்து, 'யாவரே யாயினும் விலை கொடுத்துப் பெறலாமோ ?' என வினவினன். 'விலை கொடுத்-துப் பெறவல்லவர் யாவரே யாயினும் பெறுதற்கு உரியவரே' என விடை பகரக் கேட்ட வீரவாகு, 'விலை என்ன ?' என்றான். சத்தியகீர்த்தி, 'பதி-னுயிரம் பொன்' என்றான் அவ்வாறே பொருள் முழுதுங் கொடுத்து அரிச்சந்திரனை அடிமையாக்-கிக் கொண்டான் வீரவாகு. சத்தியகீர்த்தி அப் பதி-னுயிரம் பொன்னையும் நக்ஷத்திரேசனுக்குக் கொடு-த்து, வந்தனம் புரிந்து அனுப்பிவிட்டு, மன்னனை விட்டுப்பிரிய மனம்வாராது வருத்தமுற்றிருந்தான்.

பின்னர், வீரவாகு அரிச்சந்திரனை அழைத்-துக் கொண்டு சென்று, பிணங்கள் சுடுவதினல் முடை நாற்றம் வீசுவதும், செந்தீக்கொழுந்து விட்டு எரிவதுமாகிய சுடலையை யடைந்து, அதனைக் காட்டி, 'அரிச்சந்திர ! இச்சுடலையிற் சுடும் ஒவ் வொரு சவத்திற்கும் கொள்ளியாடை ஒரு துண்ட-மும், காற்பணமும் நமக்குச் சேரவேண்டும்; அது வன்றி வாய்க்கரிசியும் வரும். இவற்றில், காற்-பணமும் முழுந் துண்டமும் எனக்குத் தந்து,வாய்க் கரிசியை நீ அடைதல் வேண்டும்' என்றான். அரிச்-சந்திரன், 'அவ்வாறே யாகுக' என்று சொல்லி, அச் சுடுகாட்டில் பிணங்களைச் சுட்டெரித்து எஞ்சி யிருந்த கொள்ளிக் கட்டைகளையும், பாடைக் கட்-டைகளையுங் கொண்டு ஒரு கொட்டில் கட்டி, அதில் வசித்திருந்து அச்சுடலைக்கண் சுடும் பிணத்தின்

பொருட்டுக் கொடுக்கப்படும் கொள்ளி யாடையை-யும், காற்பணத்தையும் தன்னை விலைகொண்டாளும் வீரவாகுவுக்குக் கொண்டு கொடுத்து, வாய்க்கரிசி-யைத் தானடைந்து சமைத்துண்டு வருவானானன்.

இஃதிவ்வாறாக, அரிச்சந்திரனை விட்டுப் பிரிந்த சத்தியகீர்த்தி, ஆவைப் பிரிந்த இளங்கன்றென வாடி, இடங்கடோறுந் தேடி, சுடலையிற் கண்டு கூடிக் கண்ணீர் விட்டழுது, 'சக்கரேசுவரரான தேவரீருக்கே இக்கதி வாய்ப்பதாயின் மற்றென்னை யிருக்கிறது!' என்று மனங்கசிந்து நிற்குமளவில், அரிச்சந்திரன் அமைச்சனை நோக்கி, 'சத்திய-கீர்த்தி! நீ ஏன் கவல்கின்றாய்? விதி யாரை விடும்? இதனை நீ யறிந்திலையோ?' என்றான். பின்பு, அரசன் தன் மந்திரியாகிய சத்தியகீர்த்தியோடு ஈமத்தில் இனிது அமர்ந்திருந்தான்.

அரிச்சந்திரன் நேர்மை யிவ்வாறாக, பிராமண-னுக்கு அடிமைப்பட்ட சந்திரமதியும், தேவதாச-னும் அவன் வீட்டை யடைந்தனர். ஆண்டு, தாயுந் தனயனும் விடிய ஒரு ஜாமத்திற்குமுன் எழுந்து, வீட்டு வேலைகளைச் செய்ய ஆரம்பிப்பார்கள். சந்-திரமதி வீடு, தொழுவம் முதலிய இடங்களைச் செவ்வனே சுத்தஞ்செய்த பின்னர், சாணத்தை யெல்லாந் திரட்டி, எரிமுட்டை தட்டி, உலக்கை-யைக் கையிற்கொண்டு அரிசி தீட்டி, மற்றும் நேரும் குற்றேவல்கள் அனைத்தையுஞ் செய்து விரைவின் முடிப்பாள். சிறுவன், அந்தணன் அடிக்கும் அடிக்குப் பயந்து, வைகறையில் எழுந்து காட்டுக்-குச் சென்று, வீட்டுக்கு வேண்டிய விறகு, சமிதை, தருப்பை, மாவிலை முதலியவைகளைத் தேடிக்

கொண்டு வருவான். இவ்வாறு, கண்டோர் அனைவரும் கண்ணீர்விடக் கடுந்தொழில்கள் பலவும் புரிந்துவந்தனர். வருங்காலத்து, ஒருநாள் தேவதாசன் தன்னை யொத்த சிறுவரோடு வனத்திற் சென்று வேண்டும் விறகுகளைக் கட்டிக் கொணரும் வழியின் அருகில் தருப்பை செவ்வனே யோங்கி வளர்ந்திருப்பதைக் கண்டான். கண்டு, இத் தருப்பையுங் கொண்டு போகாது வாளா வீட்டுக்குச் சென்றால், மறையவர் முனிவர் என்று உள்ளத்திற் கொண்டு, அப்புல் படர்ந்திருந்த புதலின்கட் சென்று, அதனைப் பற்றிப் பறித்தான். பறித்தலும், அவ்விடத்திலிருந்த அரவமொன்று சீறிக் கொண்டு வந்து அவன் காலில் தீண்டிற்று. அக் கணமே தேவதாசன் துடிதுடித்து அலறி யோடி வந்து மிக்க நடுக்கத்தோடும் மண்ணில் விழுந்தான்.

இந்த அசம்பவத்தைக் கண்டு பழுமரத்தின் கீழ் நின்ற பாலரனைவரும் பதைபதைத் தோடிச் சிறுவனை யணுகி, 'ஐயகோ! தேவதாசா! நினக்கு என்னுற்றது? எனிப்படிக் கீழே விழுந்தனை?' என, தேவதாசன், 'ஐயன்மீர்! அப் புதலின்கண் இருந்த விடநாகம் என்னைத் தீண்டிவிட்டது, பாரும்' என்று காட்டுமளவில், விஷம் தலைக்கேறி அறிவு சோர்ந்து உயிர் துறந்தான்.

அதுகண்ட தோழரனைவரும் அவனைப் புரட்டிப் பார்த்து, 'என்னே! இச் சிறுவன் திக்கற்ற பிணமே யாயினன்? இப்பிணத்தைவிட்டு ஏகுதல் எங்ஙனம்?' என்று மயங்கி நிற்ப, சூரியனும் தன் குலத்துதித்த அருந்தவப் புதல்வனுக்கு நேர்ந்த

அவதியைக் காண ஆற்றுநாய் மேற்கடலில் ஆழ்ந்-தான். அது கண்ட சிறுவர் இன்னும் ஈண்டுக் காலங் கழித்தல் ஒல்லாதென் றெண்ணி, தத்தம் விறகுகளைக் கொண்டு காசியம்பதியிற் புகுந்தனர்.

இஃதிங்ஙனமாக, சந்திரமதி பொழுது பட்டுந் தன் புத்திரன் வாராமை கண்டு, சோகங்கொண்டு, ஏங்கிக் கண்ணீர் பெருகத் தலைவாயிலின்கண் வந்து பார்த்தாள். பார்க்குமளவில், தன் மகனொழிய மற்-றைய சிறுவர் வரக்கண்டு, அன்னாரை நோக்கிச் சாலவும் வணங்கிக் கூப்பிய கைகளோடு — 'மறையவர் மக்காள்! உம்முடன் வந்த என் மைந்தன் எங்கே?' என, 'அவன் அரவு கடித்து இறந்தான்' என்றனர். அவ்வுரை கேட்ட சந்திரமதி அடியற்ற நெடும் பனை-போலப் படிமீது விழுந்து, 'என்னே, என்னே! என் விதி யிருந்தவாறு' என்று சொல்லிக் கொண்-டே உயிர்ப்பு நீங்கினாள். பின்னொருவாறு தெளிந்து,

மடத்தகை வல்லி பின்னும் மைந்தரை நோக்கி யெந்த
இடத்திலே யிறந்தானென்ன யாம்வரு வழியில் நிற்கும்
வடத்தினுக் கயலே சற்றே வடக்கினிற் குசை படர்ந்த
தடத்தினில் தெற்கே யென்ற சாற்றியேயவர்கள் போனார்.

போனபின் சந்திரமதி, 'இனி நமக்கு வாழ்வு ஏது' என்றெண்ணி, மறையவன் இல்லத்தை யணுகித் தனக்குற்ற குற்றேவல்கள் அனைத்தையும் விரைவில் செய்து முடித்து, வேதியன்பாற் சென்று வணங்கி, 'அந்தணர் பெரும! தருப்பை முதலிய கொண்டுவர வனத்துக்குச் சென்ற என் மைந்தன் அரவு கடித்து இறந்துபட்டானும்; அவனை யெடுத்து அடக்கஞ் செய்துவரத் தேவரீரது திருவுளம் யாதோ, அறி-யேன்' என, அந்தணன் புருவம் நெற்றியிலேறச்

சினந்து, கடுஞ் சொற்கள் பற்பல கூறி அதட்டி, 'வீணி! உன் மகன் இறந்துபட்டால் எனக்கு நஷ்டமும், என் பொருட்கு அழிவுமல்லாமல் நினக்குண்டாகுங் குறையாது? அடிமைப்பட்ட பயலுக்குத் தாயுமுண்டோ? ஆதலின், நீ போவது தவிர்க' என்றான்.

எனலும், சந்திரமதி பிராமணனை நோக்கி, 'ஐய! என் மைந்தன் தேவரீரது அடிமையே யெனினும், கானகத்தில் இறந்து திக்கற்ற பிணமேயாகிக் கிடக்கின்றானென்றால் பெற்ற வயிறு பற்றி யெரியாதோ? கிருபைகூர்ந்து விடை கொடுத்தால், அவனை யெடுத்து அடக்கஞ் செய்து விடியுமுன் வந்து, வீட்டு வேலைகளை யிடையூறின்றிச் செய்து முடித்துவிடுகின்றேன்' என்று கூறி நின்றாள்.

மறையவன், 'அவ்வாறாயிற் செல்லுக' என்று ஒரு முறை கூறிய மாத்திரத்தானே புறப்பட்டுக் காசியம்பதியை நீங்கிக் காட்டகத்தை யடைந்து, அடிதோறுங் கண்ணீர் பெருகச் செடிதோறுந் தேடிச்சென்றாள். அங்கு, ஒரு செடியின் கண் நரிகளும் கழுகுகளும் சூழ்ந்திருக்க, நடுவண் தன் மைந்தனைக் கண்டாள். காண்டலும், கழுகு முதலிய பறவைகளும் பயந்தோடக் கதறி, புத்திர சோகம் ஆவியைக் கொள்ளை கொள்ள, கண்களில் நீர் பெருகத் தன் மகவை யெடுத்து மடிமீதில் வைத்து,

'பனியால் நனைந்து வெயிலா லுலர்ந்து
பசியா லலைந்து முலவா
அனியாய வெங்க ணரவா லிறந்த
அதிபாவ மென்கொ லறியேன்

தனியே கிடந்து விடநோய் செறிந்து
தரைமீ துருண்ட மகனே
இனியாரை நம்பி யுயிர் வாழ்வ மென்றன்
இறையோனும் யானு மவமே

செங்கோ லறத்தின் முறையே செலுத்து
திறலோ னெவர்க்கு முறவோன்
வெங்கோப யானை விறல்மன்ன னம்மை
விடுவிக்க வெண்ணி வருநாள்
பங்கே ருகத்து மலர்போல் விளங்கு
வதனு மகிழ்ந்த பரிவால்
எங்கே யெனுசை மகனென் றுரைக்கில்
எதிரேது சொல்வன் மகனே'

எனச் சொல்லிப் புலம்பி ஒருவாறு தேறி, 'இவனோடு நாமும் இறந்துபட்டோமாகில், இப் பிணத்தைச் சுடலையிற் கொண்டு செய்வினை செய்து முடிப்பார் ஒருவருமிலர். அன்றி, அடிமைகொண்ட அந்தணர்க்கும் விடியுமுன் வருவதாகச் சொல்லி வந்தோம்' என்று கருதி, தன் மகனைத் தோளின் மேற் சுமந்து கொண்டு, பேயுங் கண்ணுறங்கு நள்ளிருளிற் சுடலையைத் தேடிச் சென்றாள். அவ்வாறு செல்லுகையில்,

காடுமே டுஞ்செறிந்த செந்நாய் முன்னே
கௌவியிழுத் திடப் பறந்து கழுகுமோதப்
போடுபோ டெனப்பலபேய் தொடரக் கொண்டு
போகேல் நீ யெனக்கொடிய பூதஞ் சூழ
மாடுதோ றும்பறிக்க நரிகள் தாவ
வார்குழலுஞ் சேர்துகிலும் வனந்தொட் டீர்க்க
ஈடுபா டித்தனையும் பட்டு நீள்முள்
இடுகாடு நீந்திநெடுஞ் சுடுகா டுற்றாள்.

பிணங்கள் வெந்து தலைகள் வெடிக்கும் அரவத்தாலும் பேய்கள் கூத்தாடும் அமலையாலும் இதுவே

ஈமமெனக் கருதி, தோள்மீதிருந்த சவத்தைத் தரையிலிறக்கி, தெய்வத் திருவருளையே துணையாகக் கொண்டு, பல திசையினும் விரைந்தோடி, முன்னரே எரிந்து குறைந்து நின்ற கொள்ளிக் கட்டைகளைத் தேடிக் கொணர்ந்து, சேர்த்து அடுக்கி, அதன்மீது மகவை வைத்துத் தீமூட்டினாள். அது மூண்டெரிய, அச் சுடலையைக் காத்திருந்த அரிச்சந்திரன் கண்டு,

> அரவுகடித் தரசிளங்கோ இறந்தா னென்ப
>     தறியாமல் வெகுண்டிறைவன் ஆரே யிந்த
> இரவுதனிற் பிணஞ்சுடுவா ரறிவோ மென்று
>     எழுந்திருந்து விரைந்தோடி யேடீ மூடி
> தரவுரிய பொருளெனக்குத் தாரா தேநீ
>     தனியேயிப் பளியிருளிற் சவங்கொ ணர்ந்து
> கரவினழற் சுடுவதனைக் கடைவோ என்னைக்
>     கால்வீசிக் கான்முளையை யெடுத்தெ றிந்தான்.

எறிதலும், சந்திரமதி, 'வலையிற் பட்ட மானெனக் கதறிவிழுந்து, மொழிகுழறி, 'ஐய! யான் ஓர் அகதி; அன்றி, இவ்வூரில் வழங்கும் நீதியும் அறியேன். இறந்துபட்ட என் மகனைச் சுடுதற்கு வந்தேன். யான் எவ்வாறு துணியும் பணமும் கொண்டு கொடுப்பேன்? பொருளும் சுற்றமும் உண்டானால், இப் புதல்வனைத் தோளின் மீது கொண்டு இந்த நள்ளிருளிற் சுடலையில் வருவேனோ? எரிந்து மிகுந்த கொள்ளிகளை யடுக்கி அதனால் இம் மகவைச் சுடுவேனோ? இவற்றையெல்லாம் உன்னி, தரும குணமுடைய பெரியாய்! சுடக் கருணை செய்வாய்' என்று வேண்டினாள். இரவில் ஒருவரை யொருவர் அறியா தொழிதலும், இறந்துபட்டவன் தன் புதல்வனென் றுணரானாய் அரிச்சந்திரன் சந்திரமதியை நோக்கி, 'அம்மணீ! யான் புலையற்கு

அடிமைப் பட்டவன் ; ஆதலின், யான் ஒன்றுஞ் செய்வதற்கில்லை; என் எஜமானனுக்கு காற்பணமும் கொள்ளித் துண்டமும் சேரற்பாலன ; வாய்க்கரிசி என்னைச் சேரற்பாலது; ஆதலின், என் தலைவற்குச் சேரவேண்டுவனவற்றை மாத்திரம் அளித்தால், நின் மகவைச் சுட்டெரிக்கலாகும்' எனக் கேட்டு,

துஞ்சியமைந் தனையெடுத்துச் சுமந்து போந்து
சுடுவாரற் றிடுகாட்டில் தோள்மே லேற்றிப்
பஞ்சிபடும் பாடுபடும் பாவி யேற்குப்
பணமேது கொள்ளிமுறிப் பாதியேது
நெஞ்சுதளர்ந் தருவினையேன் வருந்தக் கண்டு
நீயிரங்கா யெனஇரந்து நிற்குங்காலை

சந்திரமதி கழுத்தில் செம்பொற்றாலி விளங்கக் கண்டு, அரிச்சந்திரன்,

நல்லை நல்லை யறச் சமர்த்தி நீயே கண்டேன்
நன்னுதலா ரனைவரினு மிந்த்ர ஜாலம்
வல்லை வல்லை விறகுகளும் களவே செம்பொன்
மங்கலநா ணுன்கழுத்தி லிருக்க எதும்
இல்லை யெனச் சொல்லுவது சற்று மேலா
திதனையெனக் கீவா யென்றியம்ப வேடர்
பல்ல முயிர் நிலைவாயிற் பட்டமான் போல்
பதை பதைத்துப் பைந்தொடியாள் பதறி வீழ்ந்தாள்.

பின்னர், அவள் ஒருவாறு தெளிந்து,

'அலைவிலாவரிச் சந்திரற் கல்லது
தொலைவில் யாவர்க்குந் தோற்றரு மங்கலம்
புலையன் காணவும் போதுவ தோ'என
உலையின் மீது மெழுகொத் துருகினள்.

அம்மொழி கேட்ட அரிச்சந்திரன் மனந் திடுக்-
கிட்டு, இறந்து பட்டவன் தன்னருந்தவப் புதல்வனே

யென்றுணர்ந்து, துயர்க்கடலுள் ளாழ்கி யாற்றி மெய்மறந்து மூர்ச்சை யடைந்தான்.

அதுகண்ட சந்திரமதியும் அன்னான் தன் கணவனே யென்றுணர்ந்து, 'என்னாருயிர்த் தலைவ! "சேயோடு தான்பெற்ற செல்வம் போம்" என்பதை எண்ணி மனந்தளர்வது முறை யன்று, எது எவ்வாறாயினும் அறநெறியைக் கடைபிடித்தொழுகினால், அதுவே இருமைக்குந் தோன்றாத் துணையாகும்' என, அரிச்சந்திரன், 'பெண்மணீ! நீ கூறுவது உண்மையே; அதுவே நம் விரத மன்றோ? இது நிற்க, யான் இச் சுடலை காக்கும் புலையற்கு அடிமை; அவற்குக் கொள்ளி யாடையும், காற்பணமுஞ் செலுத்த வேண்டுவது என் கடமை. ஆதலின், நீ சென்று உன்னை யடிமைகொண்ட அந்தணரிடம் அவற்றைப் பெற்று வருக' என, சந்திரமதியும் அதற்கிசைந்து சென்றாள்.

இது இங்ஙனமாக, கள்வர் சிலர் காசிமன்னன் புதல்வனைக் கொன்று சந்திரமதி செல்லும் மார்க்கத்திலிட்டுச் சென்றனர். சந்திரமதி அந்தணரிடம் செல்லுகையில் அப்பிணம் அவள் காலிற் பட்டது. பட்ட மகனைத் தன் மகனென்று கருதித் துடிதுடித்து அப்பிணத்தைக் கையிலேந்திப் புலம்பிக்கொண்டிருந்தாள். காசிமன்னன் ஏவலினால் பிள்ளையைத் தேடப் புறப்பட்ட ஏவலாளர் அங்குப் புலம்பிக் கொண்டிருந்த சந்திரமதியைக் கண்டு, கொன்றவள் இவளே யென்றெண்ணி, அவளைப் பிடித்துப் பிணைத்து, அரசன் முன் கொண்டு போயினர்.

காசிவேந்தன் சந்திரமதியை நோக்கி, 'நீயார்?' எனலும், அவள், 'இறைவ! யானோர் அரக்கி, பிள்ளை

களையே கொலை புரிந்து தின்று திரிபவள்; ஆதலின், நின் மகவின் நறுந்தசை சுவை யுள்தாம் எனக் கருதி, அவனைக்கொன்று தின்ன ஈண்டடைந்தேன்' என்றாள்.

> பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்கு மெனின்

என்னும் கட்டுரையை ஆதரவாகக் கொண்டு, மனம் வெறுத்துக் கூறிய அம்மொழிகளைக் கேட்ட அரசன், சந்திரமதியின் முகத்தை உற்று நோக்கி, 'மந்திரிகாள்! கொலைபுரிந்தார் குறியை முகங் காட்டுமன்றே? அக்குறி யொன்றும் இம் மாதினிடத்துக் காணேம்; ஆதலின், இவள் கொன்றவளல்லள்' என, அமைச்சரும் மற்றுஞ் சூழ நின்றாரும், 'வேந்தே! கொலைத் தொழிலில் தேர்ந்தவர்க்கு அக் குறிகள் புலப்படா: இவள் ஓர் அரக்கி யென்பதில் சற்றும் சந்தேகமில்லை' என, வேந்தன் மற்றுஞ் சந்திரமதியை நோக்கி, 'அம்மா! நீ உண்மையை யுரை' என, சந்திரமதி, 'மன்னர் மன்ன! கொன்ற பிள்ளையைக் கையிலேந்தி நிற்பது கண்டும் ஐயப்பாடுண்டோ? யானோர் அரக்கியே' என்றாள். அரசன், 'இவள் கொன்றவளல்லள்' எனத் துணிவுற்றுக் கூறவும், அண்டையில் நின்றார் அரசனை நோக்கி, 'எம் ஆண்டவனே! இப் பாதகியே நமது மகவைக் கொன்று பழிபூண்டவள். இவளை வாளா விட்டுவிடின் இவ்வூரில் ஒருவரேனும் உயிர் பிழைப்பரோ?' எனலும், அரசன் கொன்றவள் இவளே எனத் தீர்மானிக்க நேர்ந்தது.

பின்பு, அரசன் அமைச்சரை நோக்கி, 'குற்றவாளியே ஒப்புக்கொள்ளும்போது யாம் செய்யத்-

தக்கது யாது?' எனத் தன் மகவைத் துறந்ததி-னும் பெருந் துன்பமடைந்து, 'வீரவாகுவை யழை-மின்' என்ருன்.

ஈமங்காக்கும் இறைமை பூண்ட வீரவாகுவும் அரசன் சமுகத்தை யடைந்து வணங்கி நிற்க, மன்-னன் அவனுக்குச் சந்திரமதியைச் சுட்டி, 'இவள் இன்றிரவு நம் மகவைக் களவாடிக் கொன்றதாகத் தானே ஒப்புக்கொள்கின்ருள்; ஆதலின், இவளைக் கொண்டுபோய் கொலைபுரிந்து பழிக்குப் பழி வாங்-குக' என்றனன்.

அவ் வீரவாகு, அரசன் ஆணைப்படி, குற்ற மொன்றில்லாக் குலமகளை மணிக்கயிறு கொண்டு இறுகக் கட்டி, நடத்திக்கொண்டுபோய், அரிச்சந்-திரனை விளித்து, 'வீரதாசா! இம் மாது நமது அர-சரது அருந்தவப் புதல்வனைக்கொன்ற பாதகியாத-லின், இவளை இக்கட்டோடே கொண்டுபோய் வாள் கொண்டு கழுத்தை வெட்டுக' எனத் தன் வாளையும் நீட்டினன். அவனும் அதனை வலதுகையிற் கொண்டு, சந்திரமதியை இறுகக்கட்டிய மணிக்கயிற்றை இடது கையிற் பற்றி, தோரண வீதிவழியே நடத்திக்கொ-ண்டு சுடலையை யடையச் செல்லுகையில், நகரமாந்-தர் பலரும் கொலைக் காரியைப் பார்க்கவேண்டு மென்று வந்து சூழ்ந்து நின்றனர். அவர்களிற் சிலர் சந்திரமதியைப் பார்த்து, அந்தோ!

தவளத் திருத்தரள நகையுஞ் சிறந்த இரு
தனுவைப் பழித்த நுதலும்
பவளத்தை யொத்தகனி யிதழும் படைத்தவிதி
பதறிப் படைத்த தளதோ

கவளக் களிற்றரச னுலகத் துயிர்க்குதவு
கபடற் றிரக்க முடையோன்
இவளைக் கொலக்கருதி யிவர்கைக் கொடுத்ததிறம்
எதென் றிரங்கி யழுவார்.

மற்றுஞ் சிலர், 'இப் பாதகி எத்தனை யுயிர்க-ளைக் கொன்று தின்றவளோ? இன்னும் இரண்-டொரு பகல் இவ்விடம் விட்டுவைப்பின் இந் நகர-முழுதும் இரையாகக் கொள்வாளே' எனப் பற்-பலவாறு பழித்து உரைத்தனர். இவை யனைத்துங் கேட்ட அரிச்சந்திரன் மனங்கசிந்து, 'தெய்வச் செயல் இதுவாயின் நாம் செய்வது யாது!

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்'

என்றெண்ணிச் சுடலையை நண்ணினன். இது நிற்க,

இந்திர லோகத்திருந்த வசிட்டமுனிவர் வாச-வனை நோக்கி, 'மகவானே! இதுகாறும் அரிச்சந்தி-ரனுக்குக் கோசிகமுனிவர் இன்னல் பல இயற்றியும் அவன் அரைப்பருஞ் சந்தனக் கட்டையேபோல் குணத்திற் குறைபட்டானில்லை. முடிவில் தன் மனை-வியின் முடியையும் வெட்டத் துணிகின்றான்; அதனைச் சென்று காண்போம் எனப் பரிந்துவந்து அவ்விடத்-திருந்தனர். அப்போது, கோசிகமுனிவர் அரிச்சந்-திரனை யணுகி, 'மன்ன! நீ இவ்வாறு துன்புறுவா-னேன்? நீ முன்பு எனக்கு அளித்த நாட்டை அளித்-ததில்லையென உரைப்பையேல், அதனைத்திரும்பவும் பெற்று இன்புறலாமே' என, அரசன் அது கேட்டு,

'புலையனும் விரும்பாத இப்புன்புலால் யாக்கை
நிலையெ னாமருண் டுயிரினும் நெடிதுறச்சிறந்தே
தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது தரியேம்
கலையு ணர்ந்தநீ யெமக்கிது கழறுவ தழகோ

பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதி யிழந்தன மினிநமக் குளதென நினைக்கும்
கதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலே மென்றான்'
மதியிழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்.

பின்னர் அரிச்சந்திரன் சந்திரமதியை நோக்கி, 'என் கண்மணி போல்வாய்! நீ நாளும் வழிபடுந் தெய்வத்தை மனத்துட்கொண்டு ஈண்டுக் கிழக்கு நோக்கி யிருக்க' என, அக் கற்பரசியும் தான் கணந்தோறும் வழிபட்டொழுகும் தன் கணவனடி-களையே கருத்துட் கொண்டு, கிழக்குநோக்கி யிரு-ந்து, 'என்னுருயிர்த் தலைவ! என்னை யிழத்தற் கஞ்சி அறத்தைக் கைவிடேல்' என்றனள். அக்காலத்து அரிச்சந்திரன் வாளைக் கையிற் கொண்டு,

'உலகு யிர்க்கெலாம் பசுபதி யொருமுத லாயின்
அலகில் சீருடை யவன்மொழி மறையெனி னதன்கண்
இலக நம்பல வற்றினும் வாய்மையீ டிலதேல்
விலகு றுமலவ் வாய்மையே விரதமாக் கொளின்யான்

என்றனையே உறுதியாக்கொண்ட கற்பு இவளிடத்-திருப்பது உண்மையே யாயின், சத்தியம் தலைகாக்க வேண்டும்' எனச் சொல்லி வாளை ஓங்கினான். அவ் வாளும் திருமணத்திலிட்ட மாலையேபோல் சந்திர-மதி கழுத்தில் விளங்கியது. அக்காலத்து மும்மூர்-த்திகளும் எதிர்தோன்றி அரிச்சந்திரனை நோக்கி, 'மூவுலகினும் உத்தமன் நீயே' என வாழ்த்தி, இறந்துபட்ட மக்கள் இருவரும் உயிர் பெறச் செய்து மறைந்தருளினர். மற்றைய தேவர்கள் அரிச்சந்திரனை யணுகிப் புகழ்ந்துரைத்தனர். காசி மன்னன் அளவிறந்த மகிழ்ச்சி யடைந்தான்.

அக் காலத்துத் தேவர்கள் யாவரும் அறிய விசுவாமித்திரர், 'தோற்றவன் யானே ; வென்றவர்

வசிட்டரே' என்று கூறி, தாம் அரிதின் இயற்றிய தவத்தில் செம்பாதியை அரிச்சந்திரனுக்குத் தத்தஞ் செய்த பின்பு, 'அவனது நாட்டையும் அவனுக்கே கொடுத்து விட்டேன்' என்றார். அது கேட்டு அரிச்சந்திரன் மனங்கசிந்து,

'இம்மையிற் பழியாம் மறுமையில் நரகம்
இரந்தவர்க் களித்ததை வாங்கின்
செம்மை யோர்க் கெல்லாம் பெருநகையாம் இத்
தீமைசெய் வதற்குநீ யுலகத்
தெம்மையோ கண்டா யிதற்குமுன் தீரா
இடர் பல விளைத்தனை யெனினும்
மும்மையும் பழியே சூட்டுதல் தகுமோ'
என்றனன் முனியதற் குரைப்பான்

'அரிச்சந்திர! நின் நன்னெறியை யுலகறிந் துய்ய இந்த இடையூறுகளை நினக்கு இயற்றினே மல்லது வேறன்று' என, இந்திரன் முதலியோரும் முன்னர்ப் பொன்னுலகி லுற்றவை யனைத்தும் விளங்கக் கூறி, சுடலைமுற்றும் யாகசாலைக ளென்பதை உண்மையுறக் காட்டி, அவனடைந்த துன்ப மனைத்தையும் வீட்டி, அயோத்தியில் அரசர் யாரையுங் கூட்டி, அரிச்சந்திரனே மக்கள் யாரினும் மாசற்றவனென நாட்டி, சகல விபவங்களும் விளங்க முடிசூட்டி, அவரவர் தத்தம் இருக்கையை யடைய, அரிச்சந்திரன் செங்கோல் கைக்கொண்டு, தன் குடிகளுக்கு நேர்ந்த துன்ப மனைத்தையும் ஓட்டி, இன்பமூட்டி, எல்லாம் வல்ல இறைவனடிகளை மனமொழி மெய்களின் வணங்கி, ஆனந்தக் கண்ணீராலாட்டி, மனைவி மக்களுடன் இன்புற்று இனிது வாழ்ந்திருந்தனன்.

## 11. இறையனா ரகப்பொருள் வரலாறு

கடைச்சங்க மிருந்து தமிழாராய்ச்சி செய்தகாலத்தில், பாண்டிநாடு பன்னிரு யாண்டு வற்கடஞ் சென்றது. செல்லவே, பசி கடுகுதலும், அரசன் சிட்டரை யெல்லாங் கூவி, 'வம்மின், யான் உங்களைப் புரந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஞான்று என்னை யுள்ளி வம்மின்' என்றான். என, அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்தபின்னர், நாடுமலிய மழை பெய்தது. பெய்த பின், அரசன் 'இனி நாடு நாடாயிற்றாகலின், நூல் வல்லாரைக் கொணர்க' என்று எல்லாப் பக்கமும் ஆட்களைப் போக்க, அவர்கள் எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, 'பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேம்' என்று வந்தார். வர, அரசனும் புடைபடக்கவன்று, 'என்னை? எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே? பொருளதிகாரம் பெறேமேயெனின், இவை பெற்றும் பெற்றிலேம்' எனச் சொல்லா நிற்ப, மதுரை ஆலவாயின் அழனிறக் கடவுள் சிந்திப்பான், 'என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று; அது தானும் ஞானத்திடைய தாகலான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்' என்று சிந்தித்து, 'அன்பினைந்திணை' என்றற் றொடக்கத்து அறுபது சூத்திரத்தையுஞ் செய்து மூன்று செப்பிதழகத் தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்.

இட்ட பிற்றை ஞான்று, தேவர்குலம் வழிபடு-வான், தேவர்கோட்டத்தை எங்குந் துடைத்து, நீர் தெளித்துப் பூவிட்டுப் பீடத்தின்கீழ் என்றும் அலகிடான் அன்று தெய்வத் தவக்குறிப்பினான் அலகிடுவனென்று உள்ளங் குளிர அலகிட்டான். இட்டாற்கு அலகினோடும் இதழ் போந்தன. போ-தர, கொண்டு போந்து நோக்குவார்க்கு, அது வாய்ப்புடைத் தாயிற்றோர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று. காட்ட, பிராமணன் சிந்திப்பான், 'அரசன் பொருளதிகாரம் இன்மையிற் கவல்கின்-றான் என்பது கேட்டுச் சொல்லா நின்ற துணர்ந்து நம்பெருமான் அருளிச் செய்தானாகும்' என்று தன் அகம் புகுதாதே, கோயிற் றலைக்கடைச் சென்று நின்று, கடைகாப்பார்க் குணர்த்த, கடைகாப்பார் அரசற்கு உணர்த்த, அரசன் புகுதுக வென்று பிராமணனைக்கூவ, சென்று புக்குக்காட்ட, அதனை ஏற்றுக்கொண்டு நோக்கி, 'பொருளதி-காரம்; இது நம்பெருமான் நமதிடுக்கண் கண்டு அருளிச் செய்தானாகற் பாலது' என்று, அரசன் அத்திசை நோக்கித் தொழுதுகொண்டு நின்று, சங்கத்தாரைக் கூவுவித்து, 'இது நம்பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச் செய்த பொரு-ளதிகாரம்; இதனைக் கொண்டுபோய்ப் பொருள் காண்மின்' என, அவர்கள் அதனைக் கொண்டு போந்து கன்மாப் பலகை ஏறியிருந்து ஆராய்வுழி, எல்லாரும் தாந்தாம் உரைத்த உரையே நல்ல தென்று சிலநாளெல்லாஞ் சென்றன. செல்ல, 'நாம் இங்ஙனம் எத்துணையுரைப்பினும் ஒருதலைப்படாது; அரசனுழைச் சென்று, நமக்கோர் காரணிகனைத்

தரல்வேண்டு மென்று கொண்டு போந்து, அவனாற் பொருளெனப்பட்டது பொருளாய், அன்றெனப் பட்டது அன்றாய் ஒழியக் காண்டும்' என, எல்லாரும் ஒருப்பட்டு அரசனுழைச் சென்றனர்.

அரசனும் எதிர்சென்று, 'என்னை ? நூலுக்குப் பொருள் கண்டீரோ' என, 'அஃது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும்' என்றார். 'போமின், நுமக்கோர் காரணிகனை எங்ஙனம் நாடுவேன் ? நீயிர் நாற்பத்தொன்பதின்மராயிற்று; நுமக்கு நிகராவார் ஒருவர் இம்மையின் இன்றே' என்று அரசன் சொல்ல, உடனே போந்து கன்மாப் பலகையில் ஏறியிருந்து, 'அரசனும் இது சொல்லினன்; காரணிகனைப் பெறுமாறு என்னை கொல் ?' என்று சிந்திப்புழி, 'சூத்திரஞ் செய்தான் ஆலவாயில் அவிர்சடைக் கடவுளன்றே; அவனையே காரணிகனைத் தரல்வேண்டும் என்று சென்று வரங்கிடத்துமென்று வரங்கிடப்ப, இடையாமத்து, இவ்வூர் உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திரசன்மனென்பவன், பைங்கண்ணன், புன்மயிரன், ஐயாட்டைப் பிராயத்தான் ஒரு மூங்கைப் பிள்ளை யுளன். அவனை அன்னனென்று இகழாது கொண்டுபோந்து, ஆசனமேலிரீஇக்கீழிருந்து சூத்திரப் பொருளுரைத்தால், கண்ணீர் வார்ந்து மெய்ம் மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரை கேட்ட விடத்து, மெய்யல்லா உரை கேட்டவிடத்து வாளா இருக்கும். அவன் குமார தெய்வம், அங்கோர் சாபத்தினாற் றோன்றினான்' என மும்முறை இசைத்த குரல் எல்லாருக்கும் உடன்பாடாயிற்றாக. எழுந்திருந்து, தேவர் குலத்தை வலங்கொண்டு போந்து,

உப்பூரி குடிகிழா ருழைச் சங்கமெல்லாஞ் சென்று, இவ்வார்த்தை யெல்லாஞ் சொல்லி, 'ஐயனுவான் உருத்திர சன்மனைத் தரல்வேண்டும்' என்று வேண்டிக் கொடுபோந்து, வெளியது உடீஇ, வெண்பூச் சூட்டி, வெண்சாந்து அணிந்து, கன்மாப்பலகை யேற்றி, கீழிருந்து சூத்திரப் பொருளுரைப்ப, எல்லாரும் முறையே உரைக்கக் கேட்டு வாளா இருந்து, மதுரை மருதனிளநாகனார் உரைத்தபோது ஓரோவிடத்துக் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் நிறுத்தி, பின்னர்க் கணக்காயனார் மகனார் நக்கீரர் உரைத்தவிடத்துப் பதந்தோறும் கண்ணீர் வார்ந்து மெய்ம் மயிர் சிலிர்ப்ப இருந்தான். இருப்ப, ஆர்ப்பெடுத்து மெய்யுரை பெற்றும் இந்நூற்கென்றார்.

## III. நல்லொழுக்கம்

பெரும்பான்மை எல்லாச் சாதியாருக்கும் எல்லா ஆச்சிரமத்தாருக்கும் பொதுவாயுள்ள நல்லொழுக்கங்களை இயன்றமட்டும் திரட்டிச் சொல்வாம்.

கடவுளும், புண்ணியபாவமும், சுவர்க்க நரகமும், மறுபிறப்பும், முத்தியும் உண்டென்னும் உண்மையை ஒருபோதும் மறக்கலாகாது.

ஒருயிருக்கும் சிறிதாயினும் தீங்கு நினைக்கலாகாது. தனக்குத் துரோகஞ்செய்தவரிடத்தும் தான் துரோக சிந்தை இல்லாதவனாக இருத்தல் வேண்டும். பிறவுயிர்களுக்குத் துன்பம் வந்தபொழுது தன்னை நெருப்பிலேதோய்த்தாற்போலப் பரிதபித்து அதை நீக்க முயலல்வேண்டும். பொறுத்தற்கரிய கோபமும் துன்பமும் வந்தாற் சகித்துக்கொள்ளல் வேண்டும்.

பிறருடைய பொருளைக் காஞ்சிரங்காய்போல நினைத்தல்வேண்டும். தனக்குப் பிறர் இலாபங் கருதாமற்செய்த நன்றியை மறக்கலாகாது. வஞ்சனையை ஒழித்தல் வேண்டும். பகைவரும் சிநேகரும் அயலாருமாகிய மூன்று திறத்தாரிடத்தும் பக்ஷபாத மின்றிச் சமமாயிருத்தல் வேண்டும். பிறருடைய கல்வி செல்வ முதலியவற்றைக் கண்டு பொறாமைப் படலாகாது. கல்வியும் அறிவும் நல்லொழுக்கமும் செல்வமும் அழகும் தமக்குப் பார்க்கிலும் பிறருக்கு மிகப் பெருகல் வேண்டுமென்று நினைத்தல் வேண்டும்.

காணாதவிடத்துப் பிறரை இகழ்ந்து பேசலாகாது. விளையாட்டுக்காயினும் பொய் பேச்லாகாது. எந்நாளும் சத்தியமே பேசல் வேண்டும். தன்னை வைதவனிடத்தும் கடுஞ்சொற்களைப் பேசாது இன்சொற்களையே பேசல் வேண்டும். தனக்கும் பிறர்க்கும் பயன்படாத வீண் வார்த்தைகளைப் பேசலாகாது; கோள் மூட்டலாகாது.

பிறரிடத்தே குற்றம் உண்டாயின், அவரைத் தனித்தவிடத்திற் கண்டு, அதனையும் அதனால் வருங் கேட்டையும் அவருக்கு அறிவித்து, அவரை நல் வழிப் படுத்தல் வேண்டும். ஒன்று ஒருவருக்கு மிக அப்பிரியமாய் இருப்பினும், அது அவருடைய நன்மைக்குக் காரணமாக இருக்குமாயின், அதை ஆவசியகமாகச் சொல்லல் வேண்டும்.

ஈசுரத்துரோகி, கொலைஞன், கள்வன், கள்ளுண்போன், பொய்யன், சூதாடுவோன், தூர்த்தன், வஞ்சகன், பொறாமை யுடையவன், புறங்கூறுவோன், பலரோடு பகைகொண்டவன், மிகச் செலவு

செய்பவன், பைத்தியம் பிடித்தவன் என்பவர்களோடு கூடலாகாது.

தனக்கு மந்திரங்களையேனும் சாத்திரங்களையேனும் உபதேசிக்குங் குருவை அன்போடு வழிபடல் வேண்டும். குருவுக்கு வழிபாடு செய்யாது பெறும் வித்தை சித்திபெறாது. கிரியை, ஞானம் என்னும் இரண்டினுள்ளும் ஞானஞ் சிறந்தது போல, கிரியாகுரு ஞானகுரு என்னும் இருவருள்ளும் ஞானகுருச் சிறந்தவன். அதிகமாகவேனும் அற்பமாகவேனும் ஆன்மா உய்யும் வழிக்கு உரியதை அறிவித்தவனையும் குருவென்றே நினைத்தல் வேண்டும். சமயச் சடங்கு செய்விப்பவரும் ஆசாரியரே யாவர்; அவரிடத்தும் வழிபாடு செய்தல் வேண்டும். குருவின் ஆசனத்திலும் படுக்கையிலும் இருத்தலும் படுத்தலும் அவைகளைக் காலினாலே தீண்டலும் ஆகாவாம்.

தகப்பன், தாய், பெரிய தகப்பன், சிறிய தகப்பன், பெரிய தாய், சிறிய தாய், பாட்டன், பாட்டி, மாமன், மாமி, தமையன், தமையன் மனைவி, குரு, குருபத்தினி, உபாத்தியாயர் முதலிய பெரியோர்கள் வந்தால், இருக்கைவிட் டெழுந்து வந்தனஞ் செய்தல் வேண்டும். வயசினாலும் கல்வியினாலும் ஒழுக்கத்தினாலும் முதிர்ந்த பெரியோர்கள் வரும்போது, சிறியவன், இருக்கைவிட் டெழாதிருந்தால், அற்பாயசை அடைவான். பெரியோர்களை நாடோறும் வந்தனஞ் செய்பவனுக்கு, ஆயுள், கல்வி, கீர்த்தி, பலம் என்னும் நான்கும் விருத்தியாகும்.

தன்னின் உயர்ந்தாரையாயினும், தன்னை ஒத்தாரையாயினும் வணங்கும்போது, அவ்வணக்கம்

அவருக்கென்று புத்தி பண்ணுமல், அவரிடத்தில் இருக்கும் கடவுளுக்கென்று புத்திபண்ணி வணங்கல் வேண்டும். தன்னை யாராயினும் ஒருவர் வணங்கும் போது, 'இவ்வணக்கம் ஆன்மாவாகிய நமக்கன்று; நம்மிடத்தில் இருக்கும் கடவுளுக்கேயாம்' என்று புத்திபண்ணல் வேண்டும்.

தான் ஒருவருக்குச் செய்த நன்றியைச் சொல்லலாகாது. தனக்கு ஒருவர் இட்ட போஜனத்தை இகழ்ந்து பேசலாகாது. தான் செய்த தருமத்தையும் விரதத்தையும் புகழ்ந்து பேசலாகாது.

அங்கவீனர், ஆறுவிரலுள்ளவர்கள், வியாதியாளர், படியாதவர்கள், கிழவர், குரூபிகள், தரித்திரர், ஈனசாதியார் என்பவர்களை அவர்களுடைய தோஷத்தைச் சொல்லிப் பரிகாசஞ் செய்யலாகாது.

ஒருவரை அடிக்கும்பொருட்டுத் தடி முதலிய ஆயுதங்களை உயரத் தூக்குதலும், அவைகளால் அடித்தலும் ஆகாவாம். புத்திரன், சீடன் என்பவர்கள் குற்றஞ்செய்தால், அவர்களைப் பிரம்பினுலே தண்டித்தல் வேண்டும். கோபத்தினுல் ஒருவர் தலைமயிரைப் பிடித்திழுத்தலும், தலையில் அடித்தலும் ஆகாவாம். தன் வேலைக்காரர் தன்னிழலாயும் தன் மனைவியும் பிள்ளையும் தன் சரீரமாயும் இருத்தலால், அவர் செய்த பிழையை வருத்தமின்றிப் பொறுத்துக்கொள்ளல் வேண்டும்.

நாடோறும், சூரியன் உதிக்க ஐந்துநாழிகைக்கு முன்னே நித்திரைவிட்டெழுந்து, கடவுளைத் தியானித்து, உச்ச சுரத்தினுலே தோத்திரஞ்

செய்துகொண்டு, அவசிய கருமமும் தந்த சுத்தியும் முடித்து, ஸ்நானம் பண்ணிச் சந்தியாவந்தனம் முதலிய கருமங்களைச் செய்தல் வேண்டும்.

சூரியன் உதிக்க ஐந்துநாழிகை உண்டென்னு மளவில் எழுவது உத்தமம்; மூன்றேமுக்கால் நாழிகை உண்டென்னுமளவில் எழுவது மத்திமம்; உதயத்தில் எழுவது அதமம்; உதயத்தின்பின் எழுவது அதமாதமம். அவசிய கருமமுதற் றந்தசுத்தி இறுதியாகிய கருமங்களைச் சூரியோதயத்துக்கு முன்னே முடித்தல் வேண்டும்.

உதயகாலத்திலும், அஸ்தமனகாலத்திலும் சயனமும் போசனமும் அத்தியயனமுஞ் செய்யலாகாது. சயனித்தால் மூதேவி யுண்டாகும்; புசித்தால் வியாதி உண்டாகும்; அத்தியயனஞ் செய்தால் ஆயுசு குறையும்.

ஆறு, தடாகம், ஓடை, மடு முதலியவைகளிலே ஸ்நாநஞ் செய்தல் வேண்டும். இவைகள் இல்லையானல் கிணற்றினின்றும் தண்ணீரை எடுத்து ஸ்நாநஞ் செய்தல் வேண்டும். ஒருவர் வெட்டின குளத்திலே ஸ்நாநஞ் செய்யப்புகின், அந்தக்குளத்தில் ஐந்துகை மண்ணெடுத்து வெளியிற் போட்டுவிட்டு ஸ்நாநஞ் செய்தல் வேண்டும்.

தீண்டத்தகாத சாதியாரையும், புலாலுண்பவரையும், அசுத்தரையும், சனனமரணசௌசமுடையவரையும், ஊர்ப்பன்றி, நாய், கழுதை, நரி, காகம், கோழி, கழுகு, கூகை முதலியவைகளையும், எலும்பையும் தீண்டினலும், க்ஷௌரஞ் செய்துகொண்டாலும், சுற்றத்தார் இறக்கக் கேட்டாலும், துச்

சொப்பனங் கண்டாலும், பிணப்புகை பட்டாலும், சுடுகாட்டிற் போனாலும் உடுத்த வஸ்திரத்துடனே ஸ்நானஞ் செய்தல் வேண்டும்.

திருவிழாவிலும், யாகத்திலும், விவாகத்திலும், தீர்த்தக் கரையிலும், யாத்திரையிலும், வீடு அக்கினி பற்றி எரியுங் காலத்திலும், கலகத்திலும், இடருற்ற காலத்திலும் நீசரல்லாத மற்றையோரைத் தீண்டினால் தீட்டில்லை.

வஸ்திரந் தரித்துக் கொள்ளாமல், சயனம், ஸ்நானம், சந்தியாவந்தனம், பூசை, போசனம் முதலியவைகளைச் செய்யலாகாது. ஜலத்தைக் காலினால் உழக்கலாகாது. ஸ்நானஞ் செய்தவுடனே உடம்பை வஸ்திரத்தினாலே துடைத்தல் வேண்டும்; கையினாலே துடைக்கலாகாது. பிறர்மேலே நீர் தெரிக்கும்படி வஸ்திரத்தைத் தோய்த்தலும், மயிரை உதறலும் ஆகாவாம். நடக்கும்போது மயிரை உலர்த்தலாகாது. வஸ்திரத்தைத் தண்ணீரினுள்ளே பிழிதலாகாது. காலினாலே காலைத் தேய்த்துக் கழுவலாகாது. ஈரவஸ்திரத்தைத் தரித்துக்கொண்டிருக்கலாகாது.

மயிர், கரி, சாம்பர், எலும்பு, முள், விஷம், எச்சில் இவைகளைச் சலத்திலே போடலாகாது; கோழையைச் சலத்திலே உமிழ்தலாகாது.

நோயினாலே ஸ்நானஞ்செய்ய இயலாதபோது, கழுத்து, கால் என்னும் இவைகளுள் ஒன்றை இயன்றபடி ஜலத்தினாலே கழுவிக்கொண்டு, கழுவாமல் எஞ்சிய உடம்பை நனைந்த வஸ்திரத்தினால் ஈரம்படும்படி துடைத்து, தோய்த்துலர்ந்த வஸ்-

திரந் தரித்துக்கொண்டு, சந்தியாவந்தனம் முதலி-யவை செய்யலாம்.

முகத்தையும் கைகால்களையும் கழுவாமற் புசிக்கலாகாது. தண்ணீரினலே கால் கழுவி, அந்த ஈரம் இருக்கும்போதே புசித்தல்வேண்டும். படுக்-கையில் இருந்துகொண்டும், மூலைக்கு எதிராக இருந்துகொண்டும் இடக்கையில் அன்னத்தை வைத்துக்கொண்டும், உள்ளங்கையில் அன்னத்தை வைத்துக்கொண்டும் ஆசனத்தின் மீது இலை போட்டுக்கொண்டும், நின்றுகொண்டும், நடந்து-கொண்டும் புசிக்கலாகாது.

அசுத்தமாகிய இடங்களிலும், நானவித ஜனங்-கள் சேர்ந்த சங்கத்திலும், சந்தியாகாலங்களிலும் புசிக்கலாகாது. கனி, கிழங்கு, வற்றல், வடகம், என்பவை யொழிந்த மற்றைப் பழைய உணவுகளை-யும், பிண்ணக்கு முதலிய சாரமில்லாத உணவுக-ளையும் உண்ணலாகாது.

அங்கவீனர், வியாதியாளர், ஆசாரமில்லாதவர் முதலாயினோராலே தீண்டப்பட்டதும் அருவருப்-புள்ளதுமாகிய அன்னத்தைப் புசிக்கலாகாது. கோபமும் கவலையுமின்றி முகமலர்ச்சியோடும் மன மகிழ்ச்சியோடும் செவ்வையாக இருந்து புசித்தல் வேண்டும்.

வயிற்றிலே பாதிப்பங்கை அன்னத்தினலும், காற்பங்கைச் சலத்தினலும் நிறைத்து, காற்பங்கை வாயு சஞ்சரிக்க விடல் வேண்டும்.

இரவில் எட்டு நாழிகையினுள்ளே புசித்தல் உத்தமமும், பதினொரு நாழிகை யளவேல் மத்திம-

மும், பதினொன்கு நாழிகையளவேல் அதமமுமாம். அதன்மேற் புசிக்கலாகாது.

இராத்திரியிலே மிகப் புசிக்கலாகாது. மத்தியானத்திலே அதிக போசனஞ்செய்தால், இரவிலே புசிக்கலாகாது. இரவிலே தயிரையேனும் வெண்ணெ யெடுத்த மோரையேனும் உட்கொள்ளலாகாது.

வெண்கலப் பாத்திரத்தில் விடப்பட்ட இளநீரும் தாமிரபாத்திரத்தில் விடப்பட்ட பாலும் கள்ளுக்குச் சமமாகும், ஆதலால் அவைகளை உண்ணலாகாது.

புசித்தபின் காரணமின்றி ஸ்நாநஞ்செய்யலாகாது. நோயாளி தலைமுழுகலாகாது. ஜனனம், மரணம், கிரகணம், மாசப்பிறப்பு இவைகளினன்றி இராத்திரியிலே ஸ்நாநஞ் செய்யலாகாது.

எண்ணெய் தேய்த்துக்கொள்வதற்கு ஆடவர்களுக்குப் புதன்கிழமையும் சனிக்கிழமையும் நல்லனவாம்; பெண்களுக்குச் செவ்வாய்க் கிழமையும் வெள்ளிக்கிழமையும் நல்லனவாம்.

பெரியோர் நித்திரை செய்யும்போது அவரை எழுப்பலாகாது. பசுவானது தண்ணீர் குடிக்கும்போதும், புல்லுத் தின்னும்போதும், கன்று பால் குடிக்கும்போதும் தடைசெய்யலாகாது. பசுக்கன்றேயேனும் அது கட்டுங் கயிற்றையேனும் தாண்டலாகாது.

தாம் உடுத்த ஆடைக்காற்றுப் பிறர்மேல் உறைப்பப் போலும், பலர் நடுவே நின்று வஸ்திரத்தை உதறலும் ஆகாவாம்.

பெரியோர்களும், வயோதிகர்களும், சுமை சுமப்போர்களும், வியாதியாளர்களும், பிள்ளைகளும் பசுக்களும், பெண்களும் எதிர்ப்பட்டால், அவர்களுக்கு வழி கொடுத்து, விலகிப் போதல்வேண்டும்.

பிறர் இரகசியம் பேசும்போது அதனைக் கேட்கலாகாது. இருவர் இருந்து பேசும் இடத்திலே அவரனுமதியின்றிப் போகலாகாது. பிறர் பேசும்பொழுது கதவு முதலியவைகளின் பக்கத்திலே மறைந்து நிற்றலாகாது. பிறருடைய வீட்டின்கண்ணே புழைக்கடை வாயிலாலே போகலாகாது.

பற்கடித்தலும், நகங்களைக் கடித்தலும், மீசையைக் கடித்தலும், நகத்தினாலே புல்லைக் கிள்ளுதலும், உதட்டைக் கசக்கிக்கொண்டிருத்தலும், மூக்கைத் தூக்கியிழுத்தலும், கண்மயிரைப் பிடுங்கலும், நகம் மயிர் இவைகளைத் தானாகச் சேதித்தலும் ஆகாவாம்.

வாயைக் கையால் மூடிக்கொள்ளாமற் கொட்டாவி விடுதலும், பெருமூச் செறிதலும், இருமுதலும் ஆகாவாம். இரைச்சலிட்டுச் சிரித்தலும், காரணமின்றிச் சிரித்தலும் ஆகாவாம்.

பாதக்குறடு, செருப்பு, வஸ்திரம், பூணூல், புஷ்பம், கமண்டலம் என்பவைகள் அன்னியனால் அநுபவிக்கப் பட்டிருந்தால், அவைகளைத் தான் அநுபவிக்கலாகாது. குடுமிக்கு வெளியிலே பூவைச் சுற்றிக்கொள்ளலாகாது.

துஷ்டவாகனத்தின்மேல் ஏறலும், தண்ணீர் அலம்பி இடித்த ஆற்றங்கரை முதலியவைகளைச் சேர்தலும், தீப்பட்ட வீட்டிலே பிரவேசித்தலும்,

மரத்தினுனியில் ஏறலும், மழை பெய்யும்போது காலைப்பரப்பி ஓடலும், ஜலப்பிரவாகத்துக்கு எதிராக நீந்தலும், ஒருவனுய் ஓடமேறிக் கடத்தலும், மங்கையினுள்ளே கோலின்றிப் போதலும், சர்ப்பம் மதயானை முதலியவற்றிற்கு எதிரே நிற்றலும், அவைகளைத் தொடர்தலும், குடியில்லாத வீட்டிலே தனித்துத் தூங்கலும், பாழ்ங்காட்டுக்குத் தனித்துப் போதலும், பாழ்வீட்டிலே தனித்திருத்தலும் ஆகாவாம்.

துணையின்றித் தனித்தாயினும், இன்னனென்று அறியப்படாதவனேடாயினும் வழிநடக்கலாகாது. இரவிலே தனித்து ஊர்ப்புறத்திலே போகலாகாது. போகவேண்டின், ஒருவரைக் கூட்டிக்கொண்டு போதல்வேண்டும். இருட்டிலே வெளிச்சமின்றிப் போகலாகாது.

மழையிலும், வெய்யிலிலும், இரவிலும், காடுகளிலும், குடை பாதரக்ஷை தடி இவைகளைத் தரித்தவணுகி, தேகத்துக்குத் தீங்கு வாராதபடி சஞ்சரித்தல்வேண்டும். சஞ்சரிக்கும்போது, மேற்பார்வையும் பக்கத்துப் பார்வையும் தூரப் பார்வையும் விட்டு, நுகத்தடியளவுதூரம் வழியை நன்ருகப் பார்த்துப் போதல்வேண்டும்.

மிக விழித்திருத்தல், மிகத் தூங்கல், மிக விருத்தல், மிக நடத்தல், மிகப் படுத்திருத்தல், மிக வருந்தல், மிகப் பேசல் இவை யெல்லாம் நன்மையல்ல. பகலிலே ஒருபொழுதும் நித்திரை செய்யலாகாது. வடக்குத் திக்கிலே தலைவைத்துச் சயனிக்கலாகாது. காலீரம் புலருமுன் சயனிக்கலாகாது.

# IV. சுகிர்ல்லாபம்

அல்லது

(நட்புப்பேறு.)

'புத்திசாலிகளா யிருக்கின்ற சினேகிதர்கள் திரவியமில்லாதிருந்தாலும், வேறே சாதனங்க ளில்லாதிருந்தாலும் காகமும் எலியும் ஆமையும் மானும் நட்பினால் ஒன்றையொன்று காப்பாற்றினாற்போல் ஒருவர்க்கொருவர் உதவுவார்கள்' என்று சோமசன்மா சொல்ல, ராஜகுமாரர்கள் 'அஃதெப்படி?' யென, அவன் சொல்லத் தொடங்கினான் :—

'கோதாவரி நதிக்கரையில் ஒரு பெரிய வன்னி மரத்தில் இலகுபதனன் என்னுங் காகம் வாசஞ் செய்துகொண் டிருக்கையில், ஒரு நாள் விடியற்காலத்தில் அங்கே யமனைப்போல மிகவும் பயங்கரனை ஒரு வேடன் வந்தான். இலகுபதனன் அவனைப் பார்த்துப் பயப்பட்டு, 'இந்த துராத்மா என்ன பண்ணுவானோ, தெரியவில்லை; ஆகையால் இதைச் சோதிக்க வேண்டும்' என்று இரைதேடுகிற யத்தனத்தை விட்டிருக்க, இதற்குள்ளே அவ்வேடன் வலையை விரித்துப் பலவகைப்பட்ட தானியங்களையுந் தெளித்து அங்கே ஒரு செடிமறைவிற் பதுங்கிக்கொண்டிருந்தான். அதன் பிறகு தன் பரிவாரத்தோடு அந்த மரத்தில் வந்திறங்கின சித்திரக்கிரீவன் என்னும் புறுவரசு அங்கே யிறைத்திருக்குந் தானியத்தைப் பார்த்துத் தன் பரிவாரப் புறுக்களுடனே, 'இந்த நிர்மானுஷ்யமான காட்டில் தானியமெப்படி வரும்? யாராகிலுங் கொண்டு வந்து போட்டிருக்கவேண்டும்; இது நமக்குத்

தெரிந்தாலல்லாமல் இதைப் பக்ஷிக்கலாகாது; ஒரு பிராமணன் பொற்காப்புக்கு ஆசைப்பட்டுப் புலியினால் எப்படி மரண மடைந்தானோ அப்படி இஃது ஏதோ ஒரு விபரீதமாகத் தோற்றுகின்றது' என, புறக்கள் அதைக் கேட்டு, 'அஃதெப்படி? அரசே!' எனச் சித்திரக்கிரீவன் சொல்லுகின்றது:

'நான் தென் காட்டில் மேய்ந்துகொண்டிருக்கையிற் பார்த்தேன். அதைக் கேளுங்கள்: ஒரு கிழப் புலி பலவீனத்தால் ஆகாரஞ் சம்பாதிக்கக் கூடாமல் ஒரேரிகரையில் நீராடிக் கையில் தருப்பையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கையில், ஒரு பிராமணன் அவ் வழியில் வந்தான்; புலி அவனைப் பார்த்து, 'ஓ பிராமணா! இந்தப் பொற்காப்புத் தருகின்றேன் வா' என, இதைக் கேட்டு அந்தப் பிராமணன், 'இந்தக் காப்பு நமக்கு வலியக் கிடைக்கின்றது. மரணத்துக்கிடமாகிய புலியின் கிட்டப் போகலாகாது; ஆகையால் இந்தக் காப்பில் ஆசை வைக்கலாகாது என்போமானால் மரணத்துக்கு நாலண்டையும் வழியாகையால் இதைக் குறித்துப் பிரயத்தனம் அவசியம் பண்ணவேண்டும்' என்று, தன் துராசைக் கேற்பத் தனக்குள்ளே யாலோசித்து நிச்சயித்துக் கொண்டு, புலியை நோக்கி, 'ஓ புலியாரே! காப்பெங்கேயிருக்கின்றது?' என, புலி கையில் வைத்துக்கொண்டு, 'இதோ பாரும் பிராமணோத்தமரே' எனக் காண்பித்தது. பிராமணன், 'உன்னிடத்திலெனக்கெப்படி நம்பிக்கையுண்டாகும்;' என, புலி, 'நான் வைகறையில் மூழ்கி நித்தியதானம் பண்ணிக்கொண்டிருக்கிறேன்: நகமும் பல்லும் போன கிழவனா யிருக்கின்றேன்;

இப்போது என்னிடத்தில் நம்பிக்கை யில்லையா? வேட்டல், ஓதல், கொடுத்தல், தவம், சத்தியம், உறுதி, பொறுமை, ஆசையின்மையென்னு மிவ்வெட்டுத் தருமங்களையும் நான் அறிந்திருக்கின்றே-னுதலின், இந்த அபூர்வ வஸ்துவை யார்க்காகிலுங் கொடுக்க இச்சிக்கின்றேன்,' இதனுல் என்னிடத்-தில் நற்குணமிருக்கின்றதென்றும் எவ்வளவானுலுந் துர்க்குண மில்லையென்றும் அறியவில்லையா?' என, அப்போது பிராமணன், 'இதுமெய்தான், ஆனுலும் புலி மனிதரை யடித்துத தின்னுகிறதென்று மிகவும் லோகாபவாத மிருக்கின்றதே' என, புலி, 'நான் தருமசாஸ்திரமும் அறிந்திருக்கின்றேன்; தன் பிரா-ணன் தனக்கு எப்படித் தித்திப்போ அப்படியே எல்லார்க்கு மிருக்குமென்றறிந்து, சாதுக்கள் பிரா-ணிக ளிடத்தில் தயையா யிருக்கின்றூர்கள்; தன்-னைப்போலச் சுகதுக்கங்களைப் பிறரிடத்தில் நினைக்-கின்றூர்கள்; நீ மிகவுந் தரித்திரனுகையால் உனக்-குக் கொடுக்க யத்தனிக்கின்றேன்; சாஸ்திரமும் இப்படியே யிருக்கின்றது; எப்படியும் ஏழைக்கே கொடுக்கவேண்டும், செல்வமுள்ளவனுக்குக்கொடுக்கலாகாது; மருந்து நோயாளிக்கு எப்படிக் குணங்-கொடுக்குமோ, அப்படி நோவில்லாதவனுக்காகு-மோ? நீ இந்த ஏரியிலே மூழ்கி வந்து காப்பை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப்போ' என்றவுடனே, ஐயோ! பிராமணனுக்குப் பின்புத்தி யாகையாற் பிராமணன் புலியின் பேச்சை நம்பி ஸ்நானம்பண்-ணுகிறதற்காக ஏரியி லிறங்கினவுடனே உளையிற் புதைந்து, காலைப் பிடுங்கிக்கொண்டு வரக்கூடாமல் திகைத்தான். புலி அதைப் பார்த்து, 'பிராமணு!

பயப்படாதே, நானுன்னைச் சேற்றினின்றும் எடுக்கின்றேன்; சற்றிரு' என்று சொல்லிக் கொண்டு மெல்லெனப்போய் அவனைப் பிடித்துக்கொண்டது. அப்போது பிராமணன் எண்ணமிடுகின்றான் : 'துஷ்டர்கள் வேதாத்தியயநம் பண்ணியிருந்தாலும் தருமசாஸ்திரம் அறிந்திருந்தாலும் அவர்கள் வார்த்தையில் நம்பிக்கை வைக்கலாகாது. எவன் சுபாவம் எப்படியோ அஃது எப்போதும் போகாது. இப்படி யிருக்கையில் நம்முடைய சாதிக்கியல்பாயிருக்கின்ற பேராசையினால் இந்தத் துஷ்டனிடத்தில் விசுவாசம் வைத்து மோசம்போனேம்' என்று இப்படிப் பச்சாதாபப் பட்டுக்கொண்டிருக்கையில், அந்தப் புலி அவனைக் கொன்று தின்றது. ஆகையால் மிகவும் ஆலோசனை பண்ணி யாதொன்று செய்யத்தக்கதோ அதைச் செய்யவேண்டும்; அப்படிச் செய்தால் யாதொரு தீங்கும் நேரிடாது' என்றிப்படிச் சித்திரக்கிரீவன் சொன்ன வார்த்தையைக் கேட்டு ஒரு புறா கர்வத்தோடு, 'இப்படி யாலோசித்தால் ஒரிரையும் நமக்ககப்படாது; மேலும் வெட்கப் படுகின்றவன், பொறாமை யுள்ளவன், சந்தோஷப்படாதவன், குரோதமுள்ளவன், தீராச் சந்தேகமுள்ளவன், பிறர் பொருளாற் சீவிக்கிறவன், இந்த ஆறுபேருந் துக்கத்தையே யநுபவிப்பார்கள்' என, இதைக் கேட்டுப் புறாக்களெல்லாம் தானியத்தைத் தின்னும்பொருட்டுப் போய் நிலத்திலிறங்கி வலையிலகப்பட்டன. புறா வரசன் அதைப் பார்த்து, 'எல்லாரும் என் சொல்லைக் கேளாமற் போனார்கள். இப்போது நான் ஒன்றியாயிருந்து பலனில்லை' என்று சொல்லி அதுவும் வலையில் வந்தகப்பட்-

டது. வேடன் பக்ஷிகள் வலையில் சிக்கிக்கொண்டதைப் பார்த்து அருகில் வரத் தொடங்கினன். அதைப் புறக்கள் கண்டு, சித்திரக்கிரீவனைப் பார்த்து, 'நாங்கள் நீசன் புத்தியைக்கேட்டு உன்னை அவமானம் பண்ணினேம்; அதன் பலன் பிராப்தியாயிற்று' என, சித்திரக்கிரீவன், 'இப்போது, இதைச் சொல்லிப் பயனென்னே? இதற்கோருபாயமிருக்கின்றது; எல்லோரும் வலையோடுகூட ஒருமிக்கப் பறந்து வேறிடத்திற்குப் போகவேண்டும், அப்படிச் செய்தாற் பிராணனைக் காப்பாற்றலாம்' என, இதைக் கேட்டவுடனே யெல்லாப் பறவைகளும் வலையோடுகூடச் சடுதியிற் பறந்துபோயின. அதை வேடன் தூரத்திலிருந்து கண்டு ஆச்சரியப்பட்டு, 'இவைகள் ஒரே மனமாய் வலையைக்கொண்டு போயின; ஆயினும் இவைகளில் ஒன்றுக்கொன்று சண்டை நேரிடும்; அப்போது என் கையில் அகப்படும்' என நினைத்துக்கொண்டு அவைகளின் பின்னே ஓடும்போது புறக்கள் கண்ணுக்கு எட்டாமல் மறைந்து போய்விட்டன. பிறகு அவன் வருத்தப்பட்டுத் திரும்பி வந்துவிட்டான். இவ்வாச்சரியமெல்லாம் பார்த்திருந்த இலகுபதனன் என்னுங் காகம் அந்தப் புறக்களின் பின்னே போயிற்று. கபோதராஜன் தன் கூட்டத்தைப் பார்த்து, 'கண்டகீ நதி தீரத்திலிருக்குஞ் சித்திரவனத்தில் என் சிநேகிதனான இரணியகன் என்னும் ஒரெலியரசனிருக்கின்றான்; அவன் பல்லினாலே நம்முடைய வலையை யறுப்பான்; அங்கே நடப்பீர்கள்' என, இதைக் கேட்டு அப்படியே சென்று எலியரசன் வளையண்டை யிறங்கின. அப்போது, ஏதாவது ஆபத்து நேரிடும் என்பதைக் குறித்துத் தன் வளை-

க்கு நூறு வழி செய்துகொண்டு உள்ளே யிருந்த எலியரசன் புறாக்களிறங்கின சத்தத்தைக் கேட்டுப் பயந்து அடங்கி யிருக்கையில் சித்திரக்கிரீவன், 'சிநேகிதா! இரணியகனே! எங்களோடே யேன் பேசவில்லை?' என இதைத் தன் சிநேகனுடைய தீங்குரலென்றறிந்து சந்தோஷத்தோடு சீக்கிரமாக வளையினின்றும் வந்து, 'நான் புண்ணியவானாகை-யாற் சித்திரக்கிரீவனென்னு மித்திரன் என் வீட்டுக்கு வந்தான்; இவ்வுலகத்தில் மனமொத்த மித்திரனோடு சம்பாஷிப்பதினும் வேறே யானந்தமேது?' என்று உபசாரஞ்சொல்லிப் பிறகு அதனுடைய அவஸ்தை-யைப் பார்த்து மிகவும் துக்கித்து, 'மித்திரா! நீ யாவரினும் மிக்க சமர்த்தனாயினையே உனக்கு இப்-படிப்பட்ட காரியமெப்படி நேரிட்டது?' என புறா, 'எந்தக் காலத்தி லெதுநடக்குமோ அது நடக்கும்; விதி வலிது; அதன் முன் யாருடைய உபாயம் நடக்கும்? கடல் பெருகி மேலிட்டால் அதற்குக் கரையேது?' என, இரணியகன், 'இந்தப் பேச்சு மெய்யே; நூறு நாழிகை வழித் தூரத்திலிருந்து வஸ்துக்களைத் தெரிந்துகொண்டு போகின்ற நீ இன்றைக்கு வேடன் வலையிற் பாராமற் சிக்கிக் கொண்டையே பார்; சந்திர சூரியர்களுக்கு இராகு கேதுக்களாற் பீடை வருதலும், யானையும் பறவை-யும் பாம்புங் கட்டுப்படுதலும், புத்திசாலிகளுக்கு வறுமை வருதலுந் தெய்வத்தின் மகிமையே யல்-லாமல் வேறன்று' என்று சொல்லிச் சித்திரக்கிரீ-வன் கட்டுண்டிருக்கின்ற வலைக்கயிற்றை யறுக்கத் தொடங்கிற்று. அப்போது சித்திரக்கிரீவன், 'மித்-திரா! முன்னே யென் பரிவாரத்தினுடைய கயிற்-றை யறு, பிறகு என் பாசத்தைத் துணி' எனக்

கேட்டு எலி, 'என் பற்கள் மிகவும் மெதுவானவை; அவற்றிற்குப் பலமுங் கொஞ்சம்; இத்தனை பெயருடைய பந்தனைகள் எனக்கெப்படி யறுபடும்? உன் தலையை யறுத்ததன்பின் என் சாமர்த்தியத்திற்குத் தக்கவாறு அவர்களுடைய தலையையும் அறுப்பேன்' என, சித்திரக்கிரீவன், 'நல்லது, முன்னே யிவர்களுடைய பாசத்தை யறு' என, இரணியகன், 'தன்னைக் காப்பாற்றிக்கொண்டு தன் பரிவாரங்களைக் காப்பாற்ற வேண்டும்; அறம், பொருள், இன்பம், வீடாகிய இவைகளுக்குப் பிராணன் முக்கிய சாதன மாகையால் அதைக் காப்பாற்றினல் எல்லாவற்றையுங் காப்பாற்றினற் போலாகின்றது' என, சித்திரக்கிரீவன், 'இந்த நீதி சரிதான்; ஆயினும் இப்படிப்பட்ட வேதனையினின்றும் பாலனம் பண்ணுவதற்காக வன்றோ என்னை யிவர்கள் ராஜாவாக நினைக்கின்றார்கள்? ஆகையால் என்பிராணனிடத்தி லிச்சையை விட்டு இவர்களைப் பிழைப்பிப்பாய்' என, அதைக் கேட்டு எலி, 'நீ பரம சாது; அடுத்தவர்களை யாதரிக்கின்றவனு யிருக்கின்றாய்; எசமானனிடத்தில் விசுவாசமாயிருக்கின்ற சேவகனும், சேவகனிடத்திற் பிரீதியாயிருக்கின்ற எசமானனுஞ் சுகமடைவார்கள்' என்று சொல்லி, எல்லாவற்றின் பாசங்களையும் அறுத்துச் சித்திரக்கிரீவனுடைய கட்டையுஞ் சேதித்தது. பிறகு, ஒன்றுக்கொன்று தழுவிக் கொண்டு பிரிய வார்த்தைகள் சொல்லின, சித்திரக்கிரீவன் பரிவாரத்தோடு தன்னிடத்திற்குப் போயிற்று. இலகுபதனன் என்னுங் காகம் இவற்றையெல்லாம் பார்த்து ஆச்சரியப்பட்டு இரணியகனை நோக்கி, 'நீ பாக்கியவானாயிருக்கின்றாய்; ஆகையால், நானும் உன் சிநேகத்தை

விரும்புகின்றேன்; நீ தயை செய்து எனக்குச் சிநேகனுக வேண்டும்' என, அப்போது இரணியகன், 'நீ யார்?' என, காகம், 'நான் இலகுபதனனென்னுங் காக்கை' என, அதைக் கேட்டு எலி, 'உனக்கும் எனக்கும் வெகு தூரம்; உலகத்திற் சமானஸ்தர்களுக்குள்ளேயே சிநேகமுண்டாகின்றது; நானுனக்கிரை; நீ யென்னைத் தின்கிறவன்; இப்படி யிருக்கையி லிஃதெப்படியாகும்? ஆபத்துக்கே முகாந்தரமாம்; நரியின் சிநேகத்தினல் ஒரு மான் வலையிலகப்பட்டதுபோல் உன்னு லெனக்குப் பொல்லாங்கு நேரிடும்' என, இலகுபதனன் அதைக் கேட்டு, 'மான் எப்படி வலையிற் சிக்கிக் கொண்டது?' என, எலி சொல்லத் தொடங்கிற்று.

மகததேசத்திற் சண்பகவனத்தில் மானுங் காகமும் ஒன்றுக்கொன்று நட்பா யிருந்தன. அப்படி யிருக்கையில் அந்த மான் தன் மனத்தின்படி புல் முதலானவைகளை மேய்ந்து கொழுத்திருப்பதை ஒரு நரி பார்த்து, தனக்குள்ளே யாலோசித்து, 'இவன் நமக்கு அசாத்தியனு யிருக்கின்முன்; ஆகையா லிவனை வஞ்சனையாற் கொல்லவேண்டும்' என்று, இப்படி நிச்சயித்து அதன் சமீபத்திற் போய், 'சிநேகிதா! சுகமா?' என அதைக் கேட்டு மான், 'நீ யார்?' என, நரி, 'நான் க்ஷுத்திரபுத்தி யென்னும் நரி; இந்தக் காட்டில் யாருமற்ற பாவியாய் ஒருவனுகத் திரிந்துகொண்டிருந்தேன்; இன்றைக்கு உன்னைப் பார்த்து மிகுந்த சந்தோஷத்தை யடைந்தேன்; இப்போது உனக்கு வேலைசெய்துகொண்டு உன்னிடத்திலிருக்க இச்சிக்கின்றேன்' என, இதைக் கேட்டு மான், 'நல்லது' என்று

பொழுது போனவுடனே யிரண்டுஞ் சண்பக மரத்-
தின் கீழே வந்தன. அம் மரத்தின்மேல் வாசம்
பண்ணிக்கொண் டிருக்கின்ற மானின் சிநேகிதனா-
கிய சுபுத்தி என்னுங் காகம் இவ் விரண்டையும்
பார்த்து மானை நோக்கி, 'ஓ மித்திரா! உன்னண்-
டையி லிருக்கின்றவன் யாவன்?' என வினவ, மான்,
'இந்தச் சம்புக னென்னுடன் சிநேகிக்க விரும்பு-
கிறான்' என, அப்போது காகம், 'மித்திரனே! சடு-
தியில் வந்த பழக்க மில்லாதவனை நம்பலாகாது;
ஒருவன் குலமும் நடத்தையுந் தெரியாமல் அவனுக்
கிடங்கொடுத்தால் ஒரு பூனைக்குச் சரற்கவன் என்-
னுங் கழுகு இடங்கொடுத்து இறந்தாற்போல் நேரி-
டும்' என, அதைக் கேட்டு மான், 'சரற்கவ னெப்படி
இறந்தான்?' என, காகம் சொல்லுகின்றது—

'பாகீரதி தீரத்தில் திரிகூடம் என்னு மலையில்
ஒரு முதிய இத்திமரத்தின் பொந்தில் வாசம் பண்-
ணிக்கொண்டிருந்த நகமுங் கண்ணுமில்லாத சரற்-
கவன் என்னு மொரு கிழக்கழுகானது மற்றைப்
பக்ஷிகள் தன்னிடத்தில் இரக்கம் வைத்துத் தங்க-
ளாகாரத்திற் கொஞ்சங் கொஞ்சம் நெருக்கிக்
கொடுக்கத் தின்றுகொண்டு ஜீவித்திருக்கையில்,
ஒரு நாள் நெடுஞ்செவியன் என்னும் பூனை பறவைக
ளுடைய குஞ்சுகளைத் தின்னவேண்டி அந்த மரத்-
தின் கீழே வர, அதைக் குஞ்சுகள் பார்த்துப்
பயந்து பெருங் கூச்சலிட்டன. கழுகு கேட்டு,
'நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? இங்கே எவன்
வந்தான்?' என, இதற்குள்ளே பூனை சரற்கவனைப்
பார்த்து, 'நான் செத்தேன்' எனப் பயப்பட்டு,
உடனே மனத்தில் தைரியம் பண்ணிக்கொண்டு,

இந்தச் சத்துருவைத் தப்பித்துக்கொண்டு ஓடுவ-தற்கு நமக்குச் சக்தியில்லை. ஆகையால் இவன் சமீ-பத்திற் போகவேண்டும். பின்னர் எஃதுண்டாகு-மோ அஃதுண்டாகட்டும்' என்று இப்படி நிச்ச-யித்து அந்தக் கழுகின் அருகிற் போய், 'சமர்த்-தனே! உனக்கு வந்தனம் பண்ணுகின்றேன்' என, கழுகு அதைக் கேட்டு, 'நீ யார்?' என, அப்போது பூனை, 'நெடுஞ்செவியனென்னும் பூனை' என, பின்பு சரற்கவன், 'நீ சீக்கிரமாக இவ்விடம் விட்டு ஓடிப்-போ, இல்லாவிட்டாற் சாவாய்' என, பூனை, 'நான் என் விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன் அதைக் கேள்; பிறகு என்னைக் கொல்லுதல் தக்கதானாற் கொல்லு; சாதி பேதத்தினாலேயே பிராணிகளைக் கொல்லுவதாவது, புசிப்பதாவது யோக்கியமன்று: ஆதலால், அவனவன் நடத்தையைப் பார்த்து, எது செய்யத்தக்கதோ அதைச் செய்யவேண்டும்' என, கழுகு இதைக்கேட்டுப் பூனையைப் பார்த்து, 'நீயேன் வந்தாய்? சொல்' என, பூனை, 'நான் கங்காதீரத்தில் நித்தியஸ்நானம் பண்ணி, சாந்திராயண முதலாகிய விரதங்கள் ஆசரித்துக்கொண் டிருக்கின்றேன்: நீ மிகவுந் தருமவானாக இருக்கின்று யென்று பக்ஷிக-ளால் எப்போதுங் கேள்விப்பட்டதனாலும் வயது முதிர்ந்த வித்துவான்களிடத்தில் தருமங் கேட்க வேண்டுமென்று சாஸ்திர மிருப்பதனாலும் நான் உன்னிடத்திற்கு வந்தேன்; நீ தர்மத்தை விட்டு என்னைக் கொல்லத் துணிந்தாய்; இப்படி யில்லறத்-தாருடைய ஆசாரம் யானெங்கும் பார்த்ததில்லை; சத்துருவுந் தன் வீட்டுக்கு வந்தாற் சாதுக்கள் அவ-னுக்குச் சன்மானம் பண்ணுவார்கள்; மரம் தன்னை வெட்டுகின்றவனுக்கும் நிழல் கொடுக்கவில்லையோ?

சாதுக்கள் தங்கள் வீட்டுக்கு எவன் வந்தாலும் பூசிக்கின்றார்கள்; குறை வொன்றும் பண்ணுகிறதில்லை; அதிதி எவனுடைய வீட்டுக்கு வந்து முகம் வாடிப்போகின்றானோ அவ்வீட்டின் எசமானனுக்குத் தன் பாவத்தைக் கொடுத்து அவன் புண்ணியத்தைத் தான் கைக்கொண்டு போகின்றானகையாற் சாதுக்கள் யாவரிடத்திலுந் தயை செய்கின்றார்கள்; சந்திரன் சண்டாளன் வீட்டிலும் பிரகாசிக்கின்றான்' என, இதைக் கேட்டுக் கழுகு,' பூனை யிறைச்சிகளைத் தின்னும்; மேலுங் கொலை செய்யும் என்று நினைத்து இப்படி நான் சொன்னேன்' என, அதைக் கேட்டு நெடுஞ் செவியன் பூமியைத் தொட்டு, 'சிவ சிவ' என்று உச்சரித்துக் காதின்மேற் கையை வைத்து, 'நான் தரும சாஸ்திரங்கள் கேட்டு மிகுந்த வைராக்கியமடைந்து பொல்லாத கருமங்களை யெல்லாம் விட்டுவிட்டேன்; அநேக சாஸ்திரங்களிற் கொலை செய்வது போல வேறொரு பாதகமில்லையென்று சொல்லி யிருக்கின்றது; எவர்கள் மற்றொருவனைக் கொன்று தங்களுக்குச் சுகத்தை விரும்புகிறார்களோ அவர்கள் நரகத்தை யடைகின்றார்கள்; ஆகையாற் கொலை செய்யாம விருப்பதுபோல வேறொரு தரும மில்லை யென்று நினைத்துக் காட்டிலிருந்துகொண்டு காய்கனி கிழங்குகளைச் சாப்பிடுகின்றவர்கள் பாதகம் எப்படிப் பண்ணுவார்கள்?' என்று சொல்லிக் கழுகுக்கு நம்பிக்கை வரப் பண்ணி அதன்வீட்டிலிருந்தது. பிறகு அந்த ருத்திராக்ஷப் பூனை பக்ஷிகளின் குஞ்சுகளை நாடோறும் அங்கே கொண்டுவந்து தின்றுகொண்டு இருக்கத் தலைப்பட்டது. அப்போது குஞ்சிழந்த பறவைகள் எல்லாங் கிலேசப்பட்டு ஒன்றாகக் கூடித் தங்கள்

குஞ்சுகளைச் சோதிக்கத் தொடங்கின. பூனை இதை யறிந்து அவ்விடம் விட்டு ஓடிப் போயிற்று. அந்தப் பக்ஷிகள் அங்கங்கே பார்த்துக்கொண்டே கழுகின் பொந்தண்டை வந்து பார்க்கையில் அக் குஞ்சுக-ளுடைய எலும்புகளும் சிறகுகளும் விழுந்து கிடக்-கக் கண்டு, 'நம்முடைய குஞ்சுகளை யிந்தத் துரோ-கிக் கழுகே பக்ஷித்தது' என்று நிச்சயித்து அந்தக் கழுகைக் கொத்திக் கொன்றன. ஆகையால் ஒரு-வனுடைய குணம் தெரியாமல் அவனுக்கு இடங் கொடுக்கலாகாது' என, அப்போது நரி, 'ஒருவன் சுபாவம் சிநேகிப்பதற்கு முன்னே தெரியுமோ? நல்லோர்களுக்குச் சுபாவத்தினாலே காரியமில்லை; அவர்களுடைய சிநேகங் கண்ட மாத்திரத்திலேயே யாகின்றது' என, மான் அதைக் கேட்டுக் காகத்-தைப் பார்த்து, 'எப்படி நீ யெனக்கு மித்திரனோ அப்படியே யிவனுமிருக்கட்டும்; நீ யொன்றுக்குந் தடைசொல்லாதே' என்று சொல்லி நரியைத் தன்-னிடத்தில் வைத்துக்கொண்டது. பிறகு மூன்றுந் தங்கள் மார்க்கத்தின்படி வயிற்றை நிரப்பிக்-கொண்டு இராத்திரிக்கு அந்த இடத்தில் வந்து கொண்டிருந்தன. இப்படி யிருக்கையில் ஒரு நாள் நரி மானைப் பார்த்து, 'மித்திரா! இந்தக் காட்டில் இளவிளவென்று நேர்த்தியான பயிரிருக்கின்றது; அதை யுனக்குக் காண்பிக்கிறேன் வா' என்று சொல்லி அதை இட்டுக்கொண்டு போய்க் காட்-டிற்று. அன்று முதல் அந்த மான் போய்த் தின-மானம் பயிரை மேய்ந்துகொண் டிருக்கையில், அதைக் கொல்லைக்காரன் பார்த்து அங்கே வலை கட்டினான். பின்பு மான் அங்கே வழக்கப்படி மேயப் போய் அதிற் சிக்கிக்கொண்டு, 'இப்போது

என்னை மித்திரனைத் தவிர யாவன் விடுவிப்பான்' என்று மனத்தி லெண்ணிக்கொண் டிருக்கையில், அங்கே நரி வந்து, 'என்னுடைய மனோரதம் நிறைவேறிற்று; இப்போது, நான் இதன் எலும்பையும் மாமிசத்தையும் நிரம்பத் தின்னுவேன்' என்று வாயூறமனத்தி லெண்ணிக்கொண்டு சும்மா விருந்தது. அதைக் கண்டு மான், 'மித்திரா! ஏன் சும்மா இருக்கின்றாய்? என்னுடைய தளையைச் சீக்கிரமாய் அறுத்து என்னை விடுவி, சங்கடகாலத்திற் சிநேகிதர்கள் உடையிழந்தவன் கைபோலுதவுகின்றார்கள்' என, சம்புகன், 'ஆம், நீ சொல்வதெல்லாம் மெய்யே, ஆயினும் எனக்கு இன்றைக்கு விரததினமாகையால் நானிந்தத் தோலவலையைத் தீண்டமாட்டேன்; நாளைக்கு என்ன சொன்னாலுங் கேட்பேன்; சிநேகிதனுக்காக நான் பிராணனை விடத்தக்கவன்' என்று சொல்லி அதன் கண்ணுக்குத் தப்பித்துக்கொண்டு அங்கே யோரிடத்தில் ஒளித்துக்கொண்டிருந்தது. காகம் இராத்திரிக்கு மான் வரவில்லையென்று அதைத் தேடும்பொருட்டு இங்குமங்குந் திரிந்துகொண்டு அங்கே வருகையில், அந்த மானின் அவஸ்தையைப் பார்த்து, 'சிநேகிதா! உனக்கிந்த அவஸ்தை யிப்படியேன் வந்தது?' என, மான் இஃதுன் வார்த்தையைக் கேளாமையால் வந்த பலன்' என, காகம், 'உன் கூட்டாளியான சம்புகனெங்கே போனான்?' என, மான், 'என்னுடைய இறைச்சியைத் தின்பதற்காக இங்கேதானே யொளித்துக்கொண் டிருப்பான்' என, அதைக் கேட்டுக் காகம், 'தனக்கிதம் பண்ணுகிற மித்திரன் பேச்சைக் கேளாதவனுக்கு விபத்துச் சீக்கிரமாக வரும்; பின்னுமவன் சத்துருவுக்குச் சந்தோஷம்

வருவிக்கின்றான்' எனச் சொல்லிக்கொண் டிருக்கையில், கொல்லைக்காரன் கையில் ஒரு தடியை யெடுத்துக் கொண்டு வர, அவனைப் பார்த்துக் காகம், மானுக்கு, 'மித்திரா! நீ இப்போது மூச்சை யடக்கிக்கொண்டு செத்தவனைப்போல் கிடந்தால், அவனுன்னைப் பார்த்து, நீ செத்தாயென் றெண்ணிக்கொண்டு கட்டிய வலையை யவிழ்த்துச் சுருட்டி வேறோரிடத்தில் வைக்கப் போவான். அப்போது நான் கத்துகின்றேன்; அதைக் கேட்ட மாத்திரத்தில் நீ மிகவும் விரைவா யோட்டம் பிடி' என்று சொல்லித் தான் அப்படியே பொய்யாக மானின் கண்ணைக் குத்திக்கொண்டிருந்தது. இதற்குள்ளே வந்த கொல்லைக்காரன் மானைப் பார்த்துச் செத்ததென்றெண்ணிக் கட்டியிருந்த வலையை யவிழ்த்து ஓரிடத்தி லொன்றாகக் கூட்டிவைக்கப் போனான். காகம் அதைப் பார்த்துச் சங்கேதப்படி கத்த, மான் அதைக் கேட்டவுடனே யோட்டம் பிடித்தது; அதைக் கொல்ல நினைத்து அந்தக் குடியானவன் தடியை விசிறி யெறிய, அது பதிவிருந்த நரி மேற்படலும் அந்நரி இறந்தது. ஆகையாற் 'புண்ணியமாவது பாவமாவது மிகுதியானால் அதன் பலன் உடனே யுண்டாகின்றது' என்று சொல்லிப் பின்னும் எலி, 'இப்படி மானுக்கு நரியின் சிநேகம் போல் உன்னுறவும் எனக்கு உபயோகமன்று' என, காகம், 'உன்னைத் தின்றா லெனக்குப் போதுமோ? நீ பிழைத்திருந்தால் நான் சித்திரக்கிரீவனைப் போலச் சுகமடைவே னென்று உன்னட்பை விரும்புகின்றேன்' என, பின்னு மிரணியகன் 'நீ யெனக்குப் பகைவன்; உன்னுடனே நான் சிநேகம் பண்-

ணுவேனல்லேன்; சத்துரு தனக்கு அநுகூலமா-யிருந்தாலும் அவனோடே சிநேகிக்கலாகாது; தண்-ணீர் வெந்நீரானாலும் நெருப்பை யவிக்கும்; எது தக்கதோ அதைச் செய்யவேண்டும்; தண்ணீரில் வண்டியும் பூமியின்மேற் கப்பலும் நடக்குமோ? இதனாற் சத்துருக்களிடத்தில் நம்பிக்கை வைக்கலாகாது' என்று இப்படிப் பலவிதமாகச் சொல்லக் காகம் நானுன்னுடனே சிநேகிப்பேன்; அல்-லாவிட்டாற் பட்டினியாக இருந்து இங்கேயே பிரா-ணனை விடுவேன்; நெருப்பின் வெப்பத்தினாற் பொன் முதலானவை யுருகி யொன்றாகின்றன; யாதேனு மொரு நிமித்தத்தினாலே விலங்கு பறவைகள் மித்தி-ரத்துவத்தை யடைகின்றன; பயத்தினாலாகியும் யாதோ ராசையினாலாகியும் மூடர்களுக்குச் சிநேக முண்டாகின்றது; சாதுக்களுடைய சிநேகமோ கண்டமாத்திரத்தில் உண்டாகிறது. மண் பானை சீக்கிரமா யுடையும்; பிறகு, பொருந்துகிறது மில்லை. மற்றுப் பொற் குடமோ சீக்கிரத்தி லுடையாது; உடைந்தாலு மொன்றும்; இப்படியே துர்ச்சன சர்ச்சனர்களுடைய சிநேகமு மிருக்கின்றது' என, இதைக் கேட்டு இரணியகன, 'உன் வார்த்தையால் நான் சந்தோஷ மடைந்தேன்: இப்போ துனக்கும் எனக்குஞ் சிநேகத்துவ மிருக்கட்டும்; இனிமேல் நாமிருவரு மொரு மனத்தின ரா யிருக்கவேண்டும்; உபகாரம் பண்ணுகின்றவன் சத்துரு வென்றும் அறிந்து மனக் களங்க மில்லாமல் நடக்கவேண்டும்' என்று இப்படிப் பேசி நிச்சயித்து இரணியகன் இலகுபதனனுக்குச் சிறிது ஆகாரங் கொடுத்துத் தன் வளையிற் போயிற்று. சிநேக லாபம் பெற்ற காகமும் அதனிடத்திற் செலவு பெற்றுக் கொண்டு

தன்னிடத்திற்குப் போயிற்று. அது முதலாய் இவைகள் அத்தியந்த சிநேகமாய் ஒன்றுக்கொன்று ஆகாரங் கொடுத்துக் கொண்டு பலபல வார்த்தைகள் பேசிக்கொண்டிருக்கையில், ஒருநாள் இலகுபதனன் எலியைப் பார்த்து, 'மித்திரா! இப்போது இங்கே யிரையகப்படாமையால் வேறோரிடத்திற்குப் போக இச்சிக்கின்றேன்' என அதைக்கேட்டு இரணியகன், 'எங்கே போகின்றாய்?' என, அப்போது அது 'தண்டகாரணியத்திற் கர்ப்பூரகௌரம் என்னுந் தடாகத்திலிருக்கிற ஆமையாகிய மந்தரன் என்பவன் எனக்குச் சிநேகிதனு யிருக்கின்றான். அவனெனக்கு விதவிதமான மீன்களைக் கொடுத்துப் போஷிப்பான்; அதைக் குறித்து நானவனிடத்திற்குப் போகின்றேன்' எனக்கேட்டு, இரணியகன், 'மித்திரா! அவ்விடத்திற்கு என்னையுங் கொண்டுபோக வேண்டும்; நான் தேசாந்தரம் போக விரும்புகின்றேன்' என, அப்போது காக்கை 'நீ யப்படி விரும்புவானேன்?' என, இரணியகன், 'அங்கே போனபின்பு சொல்லுவேன்' என, இலகுபதனன் இரணியகனை எடுத்துக் கொண்டு அவ்விடத்துக்குப் போயிற்று. அவைகளைப் பார்த்து மந்தரன் அவ்விரண்டுக்கும் ஆதித்தியம் பண்ணிற்று; அப்போது இலகுபதனன் மந்தரனைப் பார்த்து, 'இந்த இரணியகன் மிகவும் பரோபகாரி; இவன் சித்திரக்கிரீவனை அவன் கூட்டத்தோடுகூட வலையினின்றும் விடுவித்தவன்; அப்போது இவன் நட்பு நிலைமையைப் பார்த்து நானுமிவனுடனே நட்புக் கொண்டேன்' என, அதைக் கேட்டுக் கூர்மஞ் சந்தோஷப்பட்டு இரணியகனைப் பார்த்து, 'மித்திரா! நீ யிந்த மனித சஞ்சாரமில்-

லாக் காட்டில் வருவானேன்?" என, அப்போது எலி சொல்லுகின்றது.

'சம்பகாவதி' என்னும் பட்டணத்திற் சூடா-கர்ணனென்னும் ஒரு சந்நியாசி, தான் உண்டு மிகுந்த சோற்றைக் கப்பரையிற் போட்டு உறியின் மேல் வைத்துவிட்டு நித்திரை பண்ணிக்கொண்டு இருப்பான்; பின்பு, அச்சோற்றை நான் தின்று கொண்டு சுகமாக இருக்கிற நாளில், அங்கே வீணா-கர்ணனென்னு மொரு சந்நியாசி வந்து அவனோடு அநேக கதாப்பிரசங்கம் பண்ணிக்கொண் டிருக்-கையில், அச் சூடாகர்ணன் கையில் ஒரு தடியி-னாலே பூமியைத் தட்டிக்கொண்டு சோற்றைக் காப்பாற்றிக் கொண்டிருந்தான்; அப்போது வீணா-கர்ணன், 'என்னுடைய கதையை யனாதரவு பண்ணி நடுவே வேறேயென்ன வியாபாரத்தி லிருக்கின்றாய்?' என, சூடாகர்ணன், 'உன் வார்த்தையை யனாதரவு பண்ணவில்லை; இவ்வெலி யென் பாத்திரத்தி லிருக்-கின்ற அன்னத்தை நாடோறுந் தின்னுகின்றது; அதை யோட்டுகின்றேன்' என, வீணாகர்ணன் அப்-போது உறியைப் பார்த்து கொஞ்சம் பலமுள்ள இந்த எலி யிவ்வள வுயரம் எப்படிக் குதிக்கின்றது? இதற்கேதோ வொரு காரணமிருக்க வேண்டும்; அதுதான் ஏதுவாயிருக்கலா மென்று ஆலோசித்-துப் பார்த்தால் மிகவு மிங்கே திரவிய மிருக்க வேண்டும்; உலகத்தில் திரவியமுள்ளவர்கள் பல முள்ளவர்களா யிருக்கின்றார்கள்; அசாத்தியமான காரியங்களைச் சாதிக்கின்றார்கள்; இராசத்துவத்-துக்கு மிதுகாரணமாகும்; எல்லாம் இதனாலாகின்-றன என்று சொல்ல, அந்தச் சந்நியாசி யிதைக்

கேட்டு மெய்தானென்று நம்பிப் பூமியை வெட்டி, ஐயோ! என் திரவியத்தை யெடுத்துக்கொண்டான்; அன்று தொடங்கி நான் இளைத்துப் போனேன்; பின்பு, எனக்கிரையுங் கிடையாததனால் மெள்ள மெள்ள நடந்துகொண் டிருக்கையிலந்தச் சந்நி-யாசி பார்த்து, 'பார், இந்த எலியிப்போது தன்-னுடைய சாதித் தன்மையை யடைந்திருக்கின்றது; முன்னிருந்த தன் மதம் போய்விட்டது; ஆகை-யால், பணமில்லாதவர்களை யெல்லோரும் அற்ப-மாய் நினைக்கின்றார்கள்' என, இதைக் கேட்டு நானிப்போது இங்கே யிருப்பது சரியன்று; இதை வேறொருவரோடுஞ் சொல்லலாகாது; பொருள் இழவுங் கிருகச் சித்திரமும் தானமும் மானமும் அவமானமும் ஆயுளும் தனமுமாகிய இவைகளைப் புத்திமான் வெளிப்படுத்தலாகாது; தன் விதி பிரதிகூலமா யிருக்குங் காலத்திற் பராக்கிரமும் முயற்சியும் விணாகின்றன; பணமில்லாதவனுக்கு வனவாசத்தைக் காட்டிலுஞ் சுகமில்லை; எந்த விடத்தில் நாம் பணக்காரரா யிருந்தோமோ, அந்த விடத்திலேலழையா யிருப்பது உத்தமமன்றென்று மறுபடி யிழந்த பணத்தை யெடுத்துக்கொள்ள ஆயத்தப் பட்டேன்; அப்போது சந்நியாசி யென்-னைத் தடியால் அடித்தான்; அதனாலே மிகவுந் துக்கப்பட்டு உன் சிநேகிதனோடுகூடி யிங்கே வந்தேன்' என, மந்தரன், 'மித்திரா! நீ யிதனால் அதைரியப்பட்டு உறைவிடந் துறந்தோ மென்று வருத்தப்பட வேண்டாம்; சாதுக்க ளெங்கே போனாலும் மரியாதை பெறுகின்றார்கள்; சிங்கம் வேறொரு காட்டுக்குப் போனாலும் புல்லைத் தின்ப-

தில்லே, யானையையே தின்னும், உற்சாக முள்ள-வன், சந்தோஷமுள்ளவன், தைரியசாலி, சூரன், களங்க மில்லாதவன், இவர்களிடத்திலே இலக்குமி தானே வந்து அடைகின்றாள்; நீ பணமிழந்தாலும் எப்போதுஞ் சந்தோஷத்தோடே கூடியிருக்கிறாய்; ஆகையால், உனக்கிருக்கின்ற சுகம் பணத்தாசை-யால் மயங்குகின்றவர்களுக்கில்லை. இன்னுங்கேள். மேகச்சாயை, துஷ்டனுடைய தயை, இளம்புல், பாலஸ்த்ரீ, யௌவனம், தனம் இவைகள் வெகு நாளைக்கு நில்லா; ஆகையால், இவை இழந்து போனால் அழுதுகொண்டு ஆகாரத்தைக் குறித்து ஏங்கி யிருக்கலாகாது; எவன் கர்ப்பத்தி லிடுகின்-றானோ அவன் பிறக்கிறதற்கு முன்னே தானே தாய் பாலே யமைத்து வைக்கின்றான்; அப்படிப் பட்டவன் ஆயுள் உள்ளவரைக்கும் காப்பாற்ற-மாட்டானோ? நீ நல்ல விவேகியா யிருக்கின்றாய், ஆதலி னிவையெல்லா முனக்குத் தெரிந்தே யிருக்-கும்; இனிச் சிநேகமாய் என்னிடத்திற் சுகமா-யிரு' என இவை யெல்லாங் கேட்டு இலகுபதனன், 'மந்தரா! நீ சகலகுண சம்பன்னன்; மேலுஞ் சற்குணன்; சாதுக்களுக்கு வந்த ஆபத்தைச் சாதுக்களே நிவர்த்தி பண்ணுகின்றார்களென்று அறிந்து நாங்களுன்னை நாடிவந்தோம்' என்று சொல்லி, நீண்ட பெரிய மரத்தின்மேற் போய் உட்கார்ந்து தன் சுபாவப்படியே யிங்கு மங்கும் பார்த்துக்கொண் டிருக்கையில், ஏதோ ஒரு பய முகாந்தரத்தை யறிந்து, அவ்விரண்டுக்கும், 'நீங்க ளுங்களிடத்தி லொளித்துக்கொண் டிருங்கள்' என, மந்தரன் தண்ணீரிற் போயிற்று; எலி வளையில்

நுழைந்தது. காகம் விருட்சத்தின் நுனியிலிருந்து பார்க்கையில், ஏதொன்றுங் காணப்படாமை-யாற் பின்பு அம் மூன்றும் ஒன்றுக்கொன்று பேசிகொண் டிருக்கையில் அங்கு அவைகளின் சமீபத்திற் சித்திராங்க னென்னுமொரு கலைமான் வந்து, 'நான் வேடர் பயத்தால் உங்களிடத்தில் இருக்கலாமென்று வந்தேன்' என, அதைக்கேட்டு மந்தரனதற்குச் சந்மானம் பண்ணி, 'இஃது உன் வீடு, நான் உன் சேவகனென்றெண்ணிக்கொண்டு சுகமா யிருக்கவேண்டும்' என முகமலர்ந்து மனங் கலந்த இன்சொற்சொல்ல, பிறகு அதுவும் இவைக ளுடன் நட்புக்கொண்டிருந்தது. அப்படி யிருக்-கையில் ஒருநாள் சித்திராங்கனென்னு மான் புல் மேய வேறோரிடத்திற்குப் போய் மீண்டு சாயங்-காலம் வாராமையால், ஆமை, 'மேயப்போன மான் இன்றைக்கேன் சாயந்திரம் வரவில்லை?' என்று வியச-னப்பட, அதை யறிந்து எல்லாம் வியசன மடைந்-தன. மறுநாள் விடியற்காலத்திற் காக்கை பறந்து நாலு பக்கத்திலும் பார்த்துக்கொண்டு போகையிற் சித்திராங்கன் தோல் வலையி லகப்பட்டிருப்பதைக் கண்டு, அதனருகிற்போய், 'மித்திரா! உனக்கிந்த அவஸ்தை யெப்படி நேரிட்டது?' என, மான், 'இப்போது இதைக் கேட்டுப் பிரயோசனமில்லை, நீ போய் இரணியகனைச் சீக்கிரமா யிட்டுக்கொண்டு வந்தால் அவன் வேடன் வருகிறதற்குள் என் பாசத்தை யறுத்து என்னையும் விடுவிப்பான்; வேடன் வந்தால் ஒருபாயமும் நடவாது' என, இதைக் கேட்டவுடனே விரைவாகப்போய் அவைக ளுடனே நடந்த காரியத்தைச் சொல்லி யிரணி-

யகனை யிட்டுக்கொண்டு வந்தது. அந்த இரணியகன் மானைப்பார்த்து, 'நீ சமர்த்தனுயிருக்கையில் வலையி லெப்படி யகப்பட்டாய்?' என, மான், 'வல்லமை யிருந்தாலும் வருவது வரும்; இப்போது என்னைச் சீக்கிரமாய் விடுவி; எனக்குப் பழைய பயமிருக்கிறது; முன் குட்டியாயிருக்கையில் வேடன் வலைகட்டி யென் கூட்டத்தை வளைத்தான்; மற்றவைகள் பெரிய மான்களா யிருந்தபடியாற் குதித்து வலையைத் தாண்டிப்போயின; எனக்குத் குதித்தோடச் சக்தி யில்லாதிருந்த தாதலால் வேடன் பிடித்து இராசனிடத்திற் கொண்டுபோனன்; இராசா வாங்கித் தன் பிள்ளைகையிற் கொடுக்க, அங்கே நான் வெகுநாளிருக்கையில் ஒருநாள், மேககர்ச்சனையைக் கேட்டு மிகவுஞ் சஞ்சலப்பட்டுக் காற்றுமழையால் பீடிக்கப்பட்டு மான் கூட்டங்கள் ஓடும்போது அவற்றின் பின் நான் ஓடுவேனே வென்று மனுஷ பாஷையின லெனக்குள்ளே பேசிக்கொண்டேன்; இராஜகுமாரன் இதைக்கேட்டு நாற்றிசையும் பார்த்து என்னையும் பார்த்தான்; பின்பு சற்றுநேரஞ் சும்மா விருந்து இது மனுஷனைப்போ லெப்படி யுச்சரித்தது? ஆகையால், இஃது ஒரு விசித்திரப் பிராணியா யிருக்கிறதென்று நினைத்துப் பயத்தினற் சுரத்தில் விழுந்தான்; பிறகு, விடியற்காலத்திற் சோதிடர்களையழைப்பித்துஅவர்களுடனே யிதைக் சொல்ல, அவர்களெல்லாம், 'மிருகங்களும் மனிதரைப்போற் பேசுகின்றன; ஆயினும் நமக்கு முன்னே பேசுகின்றதில்லை; அதுவு முன்னைப் பாராமற் பேசிற்று; இதற்காக நீ பயப்படவேண்டாம்; இது யாதொரு விசித்திரப் பிராணி

யும் அன்று ; இதனாலுனக்கு எவ்வளவும் பயமில்லை யென, இதைக் கேட்டு இராசகுமாரன் என்னை விட்டு விட்டான். பிறகு, இக்காட்டில் வந்தேன் ; இப்படி முன்னொருதரம் வலையிலகப்பட்டேன். ஆகையால் என்னைச் சீக்கிரமாக விடச் சொல்லு-கிறேன்' என, இதற்குள், மித்திரத்துவத்தினாலே மந்தரனும் அங்கேவந்து இரணியகனைப் பார்த்து, 'மித்திரா! இப்படித் தாமதம் பண்ணுகிறது சரி யன்று ; இப்போது வேடன் வந்தால் நாமெல்லாம் ஓடிப்போவோம். வலையிலகப்பட்ட சித்திராங்-கனைப் பிடித்துக் கொள்வான். இதைக் குறித்து எனக்குக் கிலேசமாயிருக்கின்றது. மிகனப்பின்படி மனத்தி லிருப்பதையறிகின்ற சிநேகிதனும், மனோ-கரமான ஸ்த்ரீயும், பிறர் துக்க மறிகின்ற பிரபுவும் கிடைப்பதருமை' என்று இப்படி மந்தரன் சொல்-லிக்கொண்டிருக்கையில், வேடன் சடிதியில் யம-னைப்போல் தூரத்தில் வருவதை லகுபதனன் கண்டு எலியைப்பார்த்து, 'மித்திரா ! வேடன் வந்தான் ; இப்போது பெரிய சங்கடம் நேரிட்டது' என, அதைக் கேட்டு இரணியகன் அதி சீக்கிரமாய்ச் சித்திராங்கன் வலையை யறுத்தது. அறுத்தவுடனே அருகில் வந்த வேடனைப் பார்த்து எல்லாம் ஓட்டம் பிடிக்க, அப்போது அவன் வியசன மடைந்து நாலண்டையும் பார்க்கையில், மந்தரன் தன்னடையின்படி நடந்துகொண்டு இருந்தது. வேடன் அதைப் பார்த்துத் தன் வில்லில் அதைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு கொஞ்சஞ் சந்தோஷத் தோடே போகும்போது, அதைப்பார்த்து மானும் எலியுங் காகமும் மிகவு மனவருத்தப்பட்டு, 'இப்

போது என்ன செய்யலாம்?' என்று வேடன் பின்னே போகத் தொடங்கின. அப்போது இரணியகன், 'ஒரு சங்கட நிவர்த்தி யாகிறதற்குள்ளே மற்றொன்று வந்து நேரிட்டது; ஆகையால், சீவனுக்குத் தேகத்தோடுகூட அநேகந் துக்கங்களை யனுபவிக்க வேண்டி யிருக்கிறது; இந்தத் துன்பஞ் சிநேகத்தினால் நமக்கு வந்தது; எவன் மித்திரனிடத்தில் விசுவாசம் வைக்கின்றானோ அவனுக்கு அந்த விசுவாசம், தாய் தந்தை சகோதரன், பிள்ளை சுற்றங்களிடத்திலு மிராது' என்றிப்படி வெகுவிதமாய்த் துக்கித்துப் பின்னும், 'வேடன் தூரமாகப் போவதற்கு முன்னே மந்தரனை விடத்தக்க வுபாயம் பண்ணவேண்டும்; பிறகு ஆகமாட்டாது' என, அப்போது அவைகள், 'என்ன செய்யலாம்? சொல்' என, 'சித்திராங்கன் ஏரிகரையிற் செத்தவனைப்போலக் கிடக்கவேண்டும்; அதன்மேற் காகமுட்கார்ந்து கொண்டு பொய்யாகக் குத்தவேண்டும்; அப்படி யிருந்தால் அதை வேடன் பார்த்து மந்தரனைப் பூமியில் வைத்து விட்டு மானண்டை போவான்; இதற்குள்ளே நான் ஆமையின் கட்டைச் சேதிப்பேன்; பிறகு, அவ்வாமை தண்ணீரில் ஒடிப்போம்' என, இதைக்கேட்டு எல்லாம் அவ்வாறே செய்து மந்தரனை விடுவித்தன. பிறகு, அந்த வேடன் வாய்த் தவிடும்போய் அடுப்பு நெருப்பு மிழந்தவன் போல வெட்கி மிகவும் வருத்த மடைந்து, 'கைக்கு வாராத பெரிய லாபத்தை யிச்சித்துக் கைக்குவந்த சிறியலாபத்தை யிழந்தேன்! யார்க்கும் அதிக ஆசை அதிக நஷ்டம்; கிடைத்தமட்டும் போதுமென்று நினைக்கின்றவனே

மகாபுருஷன்' என்று இங்ஙன மெண்ணிக்கொண்டு தன்வீட்டுக்குப் போனவுடனே அந்தக் காகமும் ஆமையும் மானும் எலியும் மிகவுஞ் சந்தோஷ-மடைந்து தங்களிடத்தில் முன்போல வாழ்ந்தி-ருந்தன.'

## V. எரியும் மெழுக்கு வர்த்தியில் அறியும் விஷயங்கள்

ஒரு மெழுக்குவர்த்தியைக் கொளுத்தி நோக்கி-னால் அதன் நுனியில் எரியும் வர்த்தியைச்சுற்றி மெழுகு உருகி, ஒருதட்டில் எண்ணெய் நிற்பது போல நிற்கக் காணலாம். சுடரின் வெப்பத்தால் மெழுகு உருகுகின்றது; குளிர்காற்று மெழுக்கு வர்த்தியின் வரம்பில் தாக்கிக்கொண்டே யிருப்ப-தால், தீச்சுவாலையின் அருகிலிருக்கும் மெழுகு மாத்திரம் உருகிக்கொண்டிருக்க, சுவாலைக்குச் சற்று தூரத்திலிருக்கும் மெழுக்கு குளிர்காற்றின் சகா-யத்தால் உருகாமல் அரும்புகட்டி, உருகின எண்-ணெயைத் தாங்கும் கிண்ணம்போலாகின்றது. அக-லில் திரியின் மூலமாய் எண்ணெய் ஏறி யெரிவது போல, உருகின மெழுக்குவர்த்தியின் நடுவிலிருக்-குந் திரியில் ஏறி யெரிகின்றது. எண்ணெயோ திரவ பதார்த்தம்; திரவம் உயர்ந்த விடத்திலிருந்து கீழ் நோக்கிப் பாயும் தன்மை யுடையது. அங்ஙன மிருக்க, இம்மெழுக்கு நெய், வர்த்தியில் மேல் நோக்கிப் பாய்வ தெப்படி யெனில்: நூலினால் பின்னப்பட்டிருக்கும் திரியில் மிகச் சிறு குழை-கள் இருக்கின்றன. ஜலம், சாம்பல் வழியாகவும்

செடியின் சல்லிவேர் வழியாகவும், மையொற்றும் தாள் வழியாகவும், ஏறுவதுபோல இம்மெழுக்கு நெய்யும் திரியிலிருக்கும் சிறு குழைகளின் வழியாக ஏறுகின்றது.

விளக்கு எரியும்போது, மெழுக்கு புகையாக மாறி, திரிவழியாக வெளியேவந்து எரிந்துகொண்டிருக்கிறது. எரியும் விளக்கை வாயால் ஊதி அவித்தால், உடனே, வர்த்தியிலிருந்து புகை எழுவதைக் காணலாம். நெருப்புக்குச்சி ஒன்றைக் கிழித்து, புகைபோகும் வழியாய்த் திரிக்குச் சற்று தூரத்திற் பிடித்தால், உடனே புகையில் தீப்பற்றி, பிறகு அது திரியைப் பற்றவைக்கும். இதனால், மெழுக்கெண்ணெய், எரிவதற்குமுன் ஒருவித வாயுவாக மாறி அவ்வாயுவே விளக்காக எரிகின்றது என்பது விளங்கும்.

விளக்குக் காற்றினால் அலையாமலிருக்கும் சமயத்தில், அதை உற்றுப் பார்த்தால், தீச்சுவாலை வாழைப்பூ வடிவமாய், அடிகனத்து மேற்செல்லச் செல்ல நுனி சிறுத்து இருப்பதைக் காணலாம். தீச்சுவாலை இவ்வடிவம் அடைவதற்குக் காரணம் என்னவெனில்:— சுவாலையைச் சுற்றி யிருக்கும் காற்று உஷ்ணமடைகிறது. உஷ்ணமானவாயுகுளிர் காற்றைவிட இலேசானதாதலால் அது மேல்நோக்கிச் செல்லுகின்றது. உஷ்ணத்தினால் மெழுக்கெண்ணெய் கரித்தூளாகமாறி, திரிவழியாய் நாலாபக்கங்களிலும் வேகத்தோடு பரவுதலால், சுவாலையின் அடி அகன்றும், அவ்வாறு உண்டான கரி வரவர எரிந்து விடுவதனால் சுவாலை மேல் செல்லச்செல்லக் குவிந்தும் இருக்கிறது. வெளிக்காற்று பலபக்கங்-

களிலுமிருந்து சமமாக சுவாலையைக் கவிந்துகொள்வதனல், விளக்கின்சுவாலை வாழைப்பூவின் வடிவத்தை யடைகிறது.

உஷ்ணவாயு மேல்நோக்கிச் செல்லுந் தன்மையினல்தான் புகைக் கூட்டிற்குப் புகை ஏறுகின்றது. ஒரு காகிதக்கூட்டில் விளக்கைவைத்து ஆகாயத்தில் விட்டால் விளக்கு எரியும்வரையில் அக்கூடு ஆகாயத்தில் மேலே செல்லுகின்றது.

வெள்ளைக் காகிதத்துண்டை யெடுத்து, காற்றினல் அலையாம லிருக்கும் விளக்குச் சுவாலையின் மத்தியிற் படும்படி செய்து, உடனே யெடுத்துச் சுவாலைபட்ட இடத்தைப் பார்த்தால் அதில் மோதிரம்போல் புகைபட்டும், மத்தியிலுள்ள இடத்தில் சிறிது அழுக்குப் படிந்தும் தோன்றும். இதனல், சுவாலைக்கு மத்தியில் மெழுகு, வாயுவா யிருப்பதையும் அதைச் சுற்றி, சுவாலை பைபோல் எரிவதையும் காணலாம். மற்றும் விளக்கை உற்றுப்பார்த்தால், சுவாலை திரியைத் தொடுவதாகக் காணவில்லை. எரியும் விளக்கைச் சிறிது ஊதி யலையவிடுத்தால், விளக்குப் புகைவதைக் காணலாம். இப்புகை எங்கிருந்து வருகின்றது — வாயினல் விளக்கை ஊதும்போது மெழுக்கு வாயுவைச் சுற்றிக் காக்கும் பையாகிய சுவாலை கிழிகிறது. இக்கிழிவின் மூலமாய், காற்றும் மெழுக்குவாயுவும் கலந்து வெளியே செல்லுகின்றன. இதுதான் புகைவதற்குக் காரணம். விளக்கு காற்றினல் அலையாமல் எரியும்போது வெளிக்காற்று சுவாலைப்பையைக் கிழித்து உட்செல்வதில்லை. இதனல், விளக்கு பிரகாசமா யெரிகிறது. காற்று விளக்கின்

மேல் அதிகமாக வீசினால் சுவாலைப்பை கிழிபட்டுப் புகைகிறதென்று முன் சொன்னோம். ஒரு விளக்கின் வர்த்தியைச் சற்று அதிகமாகத் தூக்கி விட்டால் அப்போதும் புகைகின்றதே அதற்குக் காரணமென்னவெனின் — அதிகமாகத் தூக்கப்பட்ட திரியின் மூலமாய் அதிக எண்ணெய் ஏறுகின்றது. ஆகையால் அதிக எண்ணெயால் அதிக கரியுண்டாகிறது. இக்கரி அங்குள்ள பிராணவாயுவு எரிக்கக் கூடிய அளவைப் பார்க்கிலும் அதிகமாக இருத்தலால் அது புகைந்து போகின்றது.

ஒரு தட்டில் ஒரு துண்டு மெழுக்கு வர்த்தியை வைத்து, அதில் ஓரங்குல ஆழத்திற்கு ஜலம்விட்டு, மெழுக்கு வர்த்தியைக் கொளுத்தி ஒரு கண்ணாடிக் குவளையால் (Glass Tumbler) மூடி விட்டால் அம்மெழுக்கு விளக்கு, சிறிது நேரத்தில் கொஞ்சங் கொஞ்சமாகப் பிரகாசம் மங்கிக் கடைசியில் அணைந்து விடுவதையும், தட்டிலிருக்கும் நீர் சிறிது சிறிதாய்க் குவளைக்குள் ஏறுவதையும் பார்க்கலாம். இதனால் பிராணவாயு இல்லாமல் விளக்கெரியாது என்பதும், எரிந்த வாயுவின் அளவிற்கு ஜலம் குவளைக்குள் ஏறியிருக்கிறதென்பதும் விளங்குகின்றன. குவளையைக் கவிழ்த்துத் தட்டில் படியும்படி மூடி விட்டதால், வெளிக்காற்று குவளைக்குள் பிரவேசிக்க ஏதுவில்லை. குவளைக்குள் ஐந்திலொரு பாகம் வரையில் ஜலம் ஏறியிருப்பதால் குவளைக்குள் இருந்த காற்று முழுமையும் எரியவில்லை யென்பதும், விளக்கு எரிவதற்கு ஒரு வகையான வாயுவே பிரயோசனப்படு மென்பதும், மற்றொரு வகையானது அதை எரிக்கப் பிரயோசனப்படா தென்பதும்

விளங்குகின்றன. இப்படி விளக்கு எரிவதற்குப் பயன்படும் வாயு ஐந்திலொரு பங்காகவும், எரிவதற்குப் பயன்படாத வாயு ஐந்தில் நான்கு பங்காகவும் நம்மைச் சுற்றி யிருக்கும் காற்றில் கலந்திருக்கின்ற தென்பது இதனல் விளங்கும். காற்றில் விளக்கை எரிவிப்பது பிராணவாயு வென்றும், மற்றது இலவண வாயுவென்றும் பெயர் பெறும்.

புகை என்பதென்ன? புகை என்பது நன்றாக எரிபடாத நுண்ணிய கரித்தூளாம். விளக்கெரியும்போது, விளக்கெண்ணெய் வாயுவாக மாறுகிறது. சுவாலையின் உஷ்ணத்தால் இம்மெழுக்கிலிருந்து கரித்தூள் உண்டாகின்றது. இதுதான் புகை. இப்புகையால் ஒரு பலன் உண்டு. அதாவது, மெழுக்கெண்ணெய் எரியும்போது சுடரின் உட்புறம் நீல நிறமா யிருக்கும்; இதன் மத்தியில் புகை சேருகிறது. இந்தப் புகையான கரித்திரளின் கூட்டம் பிராணவாயு சம்பந்தப்பட்டு எரியும்போது நீலநிறம் மாறி விளக்கு பிரகாசமடைகின்றது.

மெழுக்குவர்த்தி எரியும்போது, அது பிரகாசத்தையும் புகையையும் கொடுப்பதோடு உஷ்ணத்தையும் கொடுக்கிறது. எரியும் சுவாலையை விரலால் தொட்டால் அனல் தாக்குவதை யறியலாம். மெழுக்குவர்த்தி விளக்கில் ஒரு புகை போக்கியை (Chimney) வைத்து, புகை போக்கியின் தலைப்பில் கையைவைத்துப் பார்த்தால் ஒருவித உஷ்ணவாயு புகை போக்கியை விட்டு வெளிவருவதுதோன்றும். ஒருவிளக்கைக் குவளையால் மூடி, அதன் மேற்புறத்தை குளிரச்செய்தால் அதன் உட்புறத்தில் நீர்த்துளிகள் பனிபோல் சேர்வதைப் பார்க்கலாம்.

இதனுல் மெழுக்குவர்த்தி எரியும்போது சலம் உண்டாகின்றதென்பது விளங்கும். இஃது எப்படி உண்டாகின்றது? ஒருபங்கு பிராணவாயுவும், நான்குபங்கு இலவணவாயுவும் கலந்தால் காற்ருகிறதல்லவா? இம்மாதிரியே ஓர் எடை பிராணவாயுவும், எட்டெடை ஜலவாயுவும் சேர்ந்து ஜலமுண்டாகிறது. இந்த ஜலவாயு மெழுக்குவர்த்தியிலிருக்கிறது. இதற்கு எரியும் குணமுண்டு. மெழுக்கில் இருக்கும் ஜலவாயு காற்றிலிருக்கும் பிராணவாயுவினுல் எரிகிறது எனவே, மெழுக்கு வர்த்தி எரியும்போது பிராணவாயுவும், ஜலவாயுவும் கலக்கின்றன. இப்படி, கலப்பதால் ஜலமுண்டாகின்றது. இந்த ஜலம் ஆவியாகப் போவதினுல் கண்ணுக்குத் தெரிவதில்லை. குவளையைக் குளிரச் செய்தால் நீராவி யிறுகிச் சிறு நீர்த்துளிகளாகக் குவளையின் உட்புறத்திற்படியும்.

மெழுக்குவர்த்தி யெரியும்போது கரிவாயு வென்னும் மற்ெருரு பதார்த்தமும் உண்டாகிறது. மெழுகு அல்லது மெழுக்குவாயுவில் கரியுண்டென்று முன் சொன்ேனுமே, அக்கரித்தூள் பிராண வாயுவோடு கலந்து எரியும்போது இக்கரிவாயு வுண்டாகின்றது.

## VI. பௌத்த தருமம்

புத்தசமயிகளுள், இல்லற நெறியைப் பூண்ட உபாஸகர்களுக்கும் உபாஸிகளுக்கும் பஞ்ச சீலத்தையாவது அஷ்டசீலத்தையாவது கைக்கொண்டு நடப்பது கடமையாகும். வேறு சீலங்களும் தியானஸமாதி முதலியவைகளும் அவர்களுக்கு

உரியனவாகச் சொல்லப்படவில்லை. மேற் கூறிய அஷ்ட சீலங்களில் விலக்கப்பட்டவற்றைப் பத்து வகைத் தீவினைகளென்று சொல்லுவதுண்டு; அவைகள் தசபாபமென்றுங் கூறப்படும்:—

'தீவினை யென்பதி யாதென வினவி
ணுய்தொடி நல்லா யாங்கது கேளாய்
கொலையே களவே காமத் தீவிழை
வுலையா வுடம்பிற் றோன்றுவ மூன்றும்
பொய்யே குறளை கடுஞ்சொற் பயனில்
சொல்லெனச் சொல்லிற் றோன்றுவ நான்கும்
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்
றுள்ளந் தன்னி லுதிப்பன மூன்றுமெனப்
பத்து வகையால்'

இந்தப் பத்துவகைப் பாவங்களையும் பௌத்தரில் எவ்வறத்தோரும் ஒருபொழுதும் செய்யலாகாதென்பது விதி.

உபாஸகரும் உபாஸிகைகளுமாகிய இல்லறத்தார், ஸங்கத்தில் விநயபிடகம் படிக்கப்படும் பொழுது அங்கேபோய் அதைக் கேட்கவேண்டு மென்றும், அஷ்டமி பூர்ணிமை அமாவாஸ்யை ஆகிய இந்தத் திதிகளிற் பட்டினியாயிருத்தல் வேண்டு மென்றும், பௌத்த ஸந்யாஸிகள் வெளியே ஸஞ்சரிக்கக்கூடாத காலமாகிய * வருஷாகாலத்திலும் விதித்தவரையில் உபவாஸஞ் செய்யவேண்டுமென்றும், உபவாஸமிருந்ததினத்தின் மறுநாட் காலையில் இயன்றவளவு முதலில் பிக்ஷுக்களை யுண்பித்து அப்பால் பாரணஞ்செய்ய வேண்டுமென்றும்

* இந்தக்காலம் பௌத்தர்களாற் பீராதிஹாரகபக்ஷ மென்று சொல்லப்படும்.

பௌத்தநூல்கள் கூறும். இன்னும் இல்லறத்தார்க்-குரிய நியமனங்கள், ஸ்ருசாலவாத சூஸ்திர மென்கிற நூலிற் பின் வருமாறு கூறப்பட்டுள்ளன.

## க. - தாய் தந்தையர்க்கும் மக்களுக்கு முரிய ஒழுக்கங்கள்.

தாய்தந்தையார் :—

(க) மக்களைத் தீச்செய்கைகளிலிருந்து விலக்க-வேண்டும்.

(உ) நற்செய்கைகளை அவர்களுக்குக் கற்பிக்க-வேண்டும்.

(ங) அவர்களுக்குக் கல்வி கற்பிக்கவேண்டும்.

(ச) அவர்களுக்குத் தக்க பதிபத்தினிகளைத் தேடிக்கொடுக்க வேண்டும்.

(ரு) உரிய தாயபாகத்தை அவரவர்க்குக் கொடுக்கவேண்டும்.

மக்கள் :—

(க) தங்களைப்பாதுகாத்த தாய் தந்தைகளைத் தாங்கள் பாதுகாப்பதாகவும்,

(உ) குடும்ப ஸம்பந்தமாகச் செய்யவேண்டிய கடமைகளை யெல்லாஞ் செய்வதாகவும்,

(ங) குடும்பத்தின் ஸொத்தைப் பாதுகாப்ப-தாகவும்,

(ச) குடும்பப் பொருளைப் பெறுவதற்குத் தக்கவர்களாகத் தங்களைச் செய்து கொள்ளுவ-தாகவும்,

(ரு) தாய்தந்தையர் மரணத்தையடைந்தபின்பு அவர்களை ஞாபகத்தில் வைத்துப் பாராட்டி வருவதாகவும் நிச்சயித்துத் தங்கள் கடமைகளைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

உ. — குரு சிஷ்யர்களுக்குரிய ஒழுக்கங்கள்.

சிஷ்யன், ஆசாரியர்களை :—

(க) அவர்களுடைய எதிரில் நிற்றலாலும்,

(உ) அவர்களுக்குப் பணிவிடைசெய்தலாலும்

(ங) வணக்கத்தோ டிருத்தலாலும்,

(ச) அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்தலாலும்,

(ரு) அவர்களுடைய உபதேசத்தைக் கடைப்பிடித்தலாலும், கௌரவப்படுத்தவேண்டும்.

ஆசிரியன், சிஷ்யர்களை —

(க) நல்வழியில் பயிற்றுதலாலும்,

(உ) ஞானத்தைக் கைவிடாம லிருக்கும்படி உபதேசித்தலாலும்,

(ங) சாஸ்திரங்களிலும் காவ்யங்களிலும் ஞானத்தை உண்டாக்குதலாலும்,

(ச) அவர்களைப்பற்றி அவர்களுடைய மித்திரர்களுக்கும் சகபாடிகளுக்கும் தன்னுடைய நல்ல அபிப்பிராயத்தை வெளியிடுவதினாலும்,

(ரு) அபாயத்திலிருந்து பாதுகாப்பதினாலும் அபிமானிக்க வேண்டியவனாக இருக்கின்றான்.

## ௩. — பதிபத்தினிகளுக்குரிய ஒழுக்கங்கள்.

பதியானவன், பத்தினியை —

(க) கௌரவத்தோடு நடத்துவதனாலும்,

(உ) அன்புடன் நடத்துவதனாலும்,

(௩) அவளைவிட்டு அதிசாரணஞ் செய்யாதிருத்தலினாலும்,

(௪) பிறர் கௌரவிக்கும்படி செய்தலினாலும்,

(௫) அவளுக்குத் தகுந்த ஆபரணங்களையும் உடையையும் கொடுப்பதனாலும், பாராட்டிக்கொண்டு வருவதற் குரியவனாக இருக்கிறான்.

பத்தினியானவள், பதியினிடத்தில் தன் அன்பையும் கௌரவத்தையும் செலுத்துபவளானால்,

(க) வீட்டு வேலைகளைத் திறமையுடன் ஒழுங்காக நடத்திக்கொண்டு போகவேண்டும்.

(உ) சுற்றங்களுக்கும் நட்பினர்க்கும் நன்றாக விருந்தளிக்கவேண்டும்.

(௩) கற்புடையவளாக இருத்தல்வேண்டும்.

(௪) வீட்டுக்குரிய செலவை மிதமாகச்செய்யவேண்டும்.

(௫) தான் செய்யும் வேலைகளி லெல்லாம் மறவாமையும் திறமையும் உள்ளவளாகக் காணப்படவேண்டும்.

## ௪. — நட்பினர் ஒருவரிடத்தில் ஒருவர் நடந்துகொள்ளவேண்டிய ஒழுக்கங்கள்.

சீலவானான மனிதன், தன் மித்திரர்களுக்கு—

(௧) நன்கொடை கொடுப்பதனாலும்,

(௨) கௌரவித்துப் பேசுவதனாலும்,

(௩) அவர்களுடைய நன்மையை அபிவிருத்தி செய்வதனாலும்,

(௪) அவர்களைத் தனக்குச் சமானமாக நடத்துவதனாலும்,

(௫) தன்னுடைய பாக்கியத்தை அவர்களோடு பகிர்ந்து கொள்ளுவதனாலும் உபகரித்தற்குரியவனாக இருக்கிறான்.

அவர்கள்—

(௧) அவன் அஜாக்கிரதையாக இருக்கும் பொழுது அவனைப் பாதுகாப்பதனாலும்,

(௨) அவன் பொருளைப் பாதுகாப்பதனாலும்,

(௩) அவனுக்கு அபாயம் நேரிட்டபொழுது மறைவிடத்தைக் கொடுத்துப் பாதுகாப்பதனாலும்,

(௪) அவனுக்குக் கஷ்டம் நேரிடும் பொழுது அவனைக் கைவிடாமையினாலும்,

(௫) அவனுடைய குடும்பத்தாரிடத்தில் அன்பைச் செலுத்துதலினாலும் அவனிடத்தில் தங்களுக்குள்ள சிநேகத்தைப் பாராட்டவேண்டும்.

## ரு—யஜமானனுக்கும் வேலைக்காரர்களுக்கும் உரிய ஒழுக்கங்கள்.

யஜமானன், வேலைக்காரர்களுடைய நன்மையை —

(க) அவரவர்களுடைய சக்திக்கு இயன்ற தொழில்களை அவரவர்களுக்கு விதிப்பதனாலும்,

(உ) அவரவர்களுக்குத் தக்க உணவையும் கூலியையும் கொடுப்பதனாலும்,

(ங) அவர்கள் வியாதியை அடைவாராயின் மருந்து, உணவு முதலியன கொடுத்து உபசரிப்பதனாலும்,

(ச) (இருந்தால்) சுவையுள்ள நல்ல உணவுகளைக் கொடுத்து அவர்களை உண்பித்தலினாலும்,

(ரு) விடுமுறை நாட்களை அவர்களுக்கு அப்போதைக் கப்போது கொடுத்தலினாலும், அபிவிருத்தி செய்ய வேண்டியவனாக இருக்கிறான்.

அவர்கள் —

(க) காலம் பெற எழுந்திருப்பதினாலும்,

(உ) யஜமானன் தூங்கின பிற்பாடு தாம் தூங்குதற்குச் செல்லுதலாலும்,

(ங) கொடுத்ததைப் பெற்றுக் கொண்டு திருப்தியடைவதனாலும்,

(ச) யாதொரு மனக்குறையுமின்றி ஊக்கத்துடன் வேலை செய்தலினாலும்,

(ரு) அவனிடத்தும், அவனைப்பற்றிப் பிறரிடத்தும் கௌரவமாக வசனித்தலினாலும், தங்களுக்கு யஜமானனிடத்துள்ள பக்தியைக் காட்ட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

## சூ.—உபாஸகர்களுக்கும் பிக்ஷுக்களுக்கும் உரிய ஒழுக்கங்கள்.

சீலவானான உபாஸகன், பிக்ஷுக்களை,

(க) வாக்கினால் அன்பைச் செலுத்துதலாலும்,

(உ) காயத்தினால் அன்பைச் செலுத்துதலாலும்,

(ங) எண்ணத்தினால் அன்பைச் செலுத்துதலாலும்,

(ச) கண்டவுடன் நல்வரவு கூறி அழைத்து ஏற்றுக்கொள்ளுவதனாலும்,

(ரு) அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுப்பதனாலும் உபசரிக்கவேண்டியவனாக இருக்கிறான்.

### அவர்கள் உபாஸகனிடத்தில் தங்களுக்குள்ள பிரீதியை,

(க) அதர்மஞ் செய்யாதபடிக்கும் தர்மம் செய்யும்படிக்கும் உபதேசிப்பதனாலும்,

(உ) அன்பைச் செலுத்துவதனாலும்,

(ங) மதச்சார்புள்ள நூற்பொருள்களை உபதேசிப்பதனாலும்,

(ச) அவனுடைய சந்தேகங்களைத் தீர்த்தலினாலும்,

(ரு) அவனுக்கு வீட்டு நெறியைக் காட்டிக் கொடுப்பதனாலும், பாராட்டிக்கொண்டு வரவேண்டும்.

அந்த ஸ்ருகாலவாத சூத்திரத்தில், மேற் கூறிய வண்ணம் நடப்பவர்கள் யாவரும் இந்த ஆறுவிதமான இயைபுகளிலும் சாந்தியோடும் சுகத்தோடும் வாழ்வார்க ளென்றும், இல்லற வொழுக்கங்களை நன்றாகச்செய்து பெருமைபெற்று வருவார்களென்றும், மரியாதை, கொடை, அன்பு, தன்னயம் பாராட்டாமை ஆகிய இவையெல்லாம் உலக வாழ்வாகிய ஓடுந் தேர்க்கு அச்சாணியைப் போல்வனவென்றும் சொல்லி, இவ் விஷயம் முடிக்கப்பட்டிருக்கிறது.

## VII. சுகாதார தருப்பணம்

உழைப்பு — எடுத்தாளாத பொருள் உதவாது. துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும். உழைப்பில்லாத உடல் உரங்கொள்ளாது. உழவு, கைத்தொழில் முதலியவற்றைச் செய்வோர் உடலுரம் பெற்று நோயின்றி, பலாட்டியராக நீடிய ஆயுள் பெற்றிருக்க, யாதொன்றுஞ் செய்யாமல் சோறுண்டு சோம்பியிருப்பவர், தேகபலமின்றி மெலிந்திருப்பதும், அடிக்கடி வைத்தியரைத் தேடித் திரிவதே உத்தியோகமாக இருப்பதும் பிரத்தியக்ஷம். வாணிபம், இலேககம், உவாத்திமை முதலான தேகப் பிரயாசையில்லாத ஜீவனோபாய முடையவர்களும், யாதொரு தொழிலுமின்றிப் பிதுரார்ஜிதமான பொருளுதவியால் உண்டு உடுத்து நாள் கழிக்கும் சுகஜீவிகளும், கல்விகற்கு மாணாக்கர்களும், தாந்தாம் உண்டவுணவு ஜீர்ணமாகி உடலில் உதிரம் பரவி உறுப்புகளும் நரம்புகளும் உரம் பெறும் பொருட்டு ஏதாவது ஒருவிதத்தில் உழைப்-

யைக்கொள்வது இன்றியமையாதது. சரீரப் பிரயாசை கொள்ளாவிடின் இன்னோரன்னோர் அஜீர்ணம், காய்ச்சல், கைகால் பிடிப்பு, ஸ்தூலம், பாரிசவாயு, தூர்ப்பலம் முதலியவற்றால் பீடிக்கப் பெறுவர். இவர்களுக்கு ஔஷதங்கள் தத்கால பரிகாரமேயன்றி வேறுகா. இவர்களுக்கு உழைப்பே பரமௌஷதம். இந்தப் பரமௌஷதங் கொள்ளாவிடின், இந்த ரோகங்கள் கஷ்டசாத்தியமும் அசாத்தியமுமான ரோகங்களாகி விடும். தங்கள் இருப்பிற்கும் வயதுக்கும் தேக இயற்கைக்கும் ஏற்றபடி, சிலம்பப்பயிற்சி, மல்லயுத்தம், குதிரைசாரி, வெளிக்காற்றில் கால்நடையா யுலாவி வருதல், துரவு குளங்களில் நீந்துதல், நந்தவன முதலியன வைத்துப் பயிரிடல் முதலியவற்றில் எதையாவது இவர்கள் இரண்டு மூன்று நாழிகை நேரம் தினக்கிரமமாக அனுசரித்து வருதல் வேண்டும். இங்ஙனம் அனுசரிப்பது ஏனையரினும் நகரவாசிகளாவார்க்குப் பின்னும் அவசியம். உலாவி வருதலுக்கு மாலைப் பொழுதினும் காலைப்பொழுதே உத்தமகாலம். சூரியன் அத்தமிக்குங் காலத்தைவிடப் பகற்காலத்தில் வேலைசெய்தலே ஆரோக்கியத்துக்கு ஏதுவாகும்.

யௌவன பருவத்தில் காளைகள்போல் ஆடியோடி உலவாமல், எழுவதும் இருப்பதுமே மகாப் பிரயாசையாக இருப்பார்கள் விகடமான மன்னார்சாமி விக்கிரகங்களே. ஏன்? இவர்களை எடுக்கவும் பிடிக்கவும் உரமான ஆள்கள் வேண்டுமாகையால், இவர்கள் பாரமான சுமைகளே; உண்டவுணவு ஜீர்ணியாமையால் இவர்கள் கட்டுச்சோற்று மூட்டை-

களே; "உவமையாகு பெயர்க்கு ஒருதாரணமாக இவர்களைக் குதிர் என்று கூறின், தமிழ்ப்புலவர் நம்மை வாதுக்கழைப்பாரோ? யாதொரு வினையுமின்றி எழுவாயுருபுகளாய் இருக்கும் இவர்களைக் காரக வேதுவாக்கிப் பயனில கொடுத்து முடிவு காட்டாவிடின் நன்னூல் கற்றதனுலாய பயனென்? முத்தகமான இவர்களைக் குளகமாக்குதல் வேண்டும். உண்டுடுத்து எதிர்மறை வினையெச்சமான இவர்களை உடன்பாட்டுத் தெரிநிலை நிகழ்கால எதிர்கால முற்று வினையோடு முடிக்கவேண்டும். நிலைத் திணைப் பொருளான இவர்களை இயங்குதிணைப் பொருளாக்க வேண்டும்.

ஜீவனத்தின் பொருட்டு உழைப்பவர்களும், தேக சௌக்கியத்தின் பொருட்டு உழைப்பவர்களும், வயது தேகவலிமை முதலியவற்றிற்கு ஏற்ற அளவாகவன்றி அதிகமாக உழைப்பு கொள்வதும் கெடுதி விளைக்கும். கல்வி கற்பதும் நூல்கள் எழுதுவதும் விஷய சிந்தனை செய்வதும் வாதஞ் செய்வதுமான மனோவியாபார முள்ளவர்க்கும், மனத்தை மிகவும் வருத்தி உழைப்பதுங் கெடுதியேயாகும். மனமொழிகளாற் செய்யுந் தொழில்களை அவை வருந்துவதற்கு முன்னே விட்டொழிக. இந்தத் திரிகரணங்களில் ஆதியும் அந்தமும் இதரேதரம். இவ் விரண்டில் ஒன்று ஏறுபடியாயின் ஒன்று இறங்குபடியாம். இவ் விரண்டையும் ஏறுமாறின்றி இணைத்துப் பிணைப்பவர்களே எண்ணிய இலக்கை எளிதி னெய்துவோராவர். ஏனையோர் வில் நாணற்றவராவார். வாயால் மொழிதலான தொழிலையும் மிதமாகவே செய்க.

உண்டி — அன்னம் ஒடுங்கினல் ஐந்தும் ஒடுங்கும். அன்னமயம் பிராணமயம். ஊணற்றபோதே உடலற்றுப்போம். உண்டவன் உரஞ்செய்வான், உண்டார் மேனி கண்டால் தெரியும். ஊணினல் புத்தி; (பூணினல் சாதி.)

உணவின் அளவு இவ்வளவு என நிறுதிட்டமாக உரைத்தலாகாது. அவரவர் கொள்ளுதலான உணவின் அளவு, அவரவர் உடலின் அளவுக்கும் உடலுரத்தின் அளவுக்கும் உழைப்பின் அளவுக்கும் ஜீர்ண சக்தியின் அளவுக்கும் ஏற்றதாக இருக்கும். உண்ணும்போது, இன்னும் அவசியமில்லை, உண்ட இவ்வளவே போதும் என்கிற உணர்ச்சி ஒவ்வொருவருக்கும் இயல்பாக உண்டு. அவ்வுணர்ச்சியின் அளவாக உண்பதே மிதமான ஊண். அதுவே அவரவர்க்கு அவசியமான அளவு. அவ்வளவுக்கு மிஞ்சினல் அமுதமும் விஷமாகும். மீதூண் விரும்பேல். உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு. ஊணன் கருமமிழந்தான் (உலுத்தன் பேரிழந்தான்). அன்னசுரணை அதிகமானல் அக்ஷரசுரணை குறையும். மட்டான போசனம் மனத்துக்கு மகிழ்ச்சி. அளவுக்கதிகமாக உண்பார்க்கு லங்கணமே பரமௌஷதம்.

இங்ஙனம் அளவாக உண்ணுமிடத்தும் தேகவியல்பு காலவியல்புகளோடு மாறுகொள்ளாதனவும் சுவை வீரியங்களால் தம்முள் மாறுகொள்ளாதனவுமான உண்டிவகைகளையே உண்டல் வேண்டும். வைத்தியங் கொஞ்சமேனுந் தெரியாதவர்கள் இல்லை. பகுத்தறிவெய்திய அளவில் இதை

யெல்லாம் ஒவ்வொருவரும் தம் தம் அனுபவத்-தால் அறியலாம்.

'மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்.'

இங்ஙனம் தேகவியல்பு முதலியவற்ரோடு மாறு கொள்ளாத உணவை மிதமாக உண்பதே நீடிய ஆயுள் பெறுதற்கான உபாயமாம்.

'அற்ரு லளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்ரு னெடிதுய்க்கு மாறு.'

'மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை யுயிர்க்கு.'

'பசித்தால் உண்க; தாகமெடுத்தால் தண்ணீர் குடிக்க' என்பர் அங்கிலேயர். 'ஞாலந்தான் வந்திடினும் பசித்தொழிய வுண்ணேம்' என்ரூர் தேரையரும்.

'அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.'

ஜீர்ணசக்தி மிக்கவர்கள் நாள்தோறும் மும்-முறை நான்முறை உண்பதோடு இடையில் சிற்-றுண்டி கொள்ளுவார். ஜீர்ணசக்தியோடு தேக-வுழைப் புள்ளவர்கள், இடைவேளைகளில் சிற்றுண்டி கொள்ளினும் கொள்ளாவிடினும், இரண்டு பொழு துண்பதே தேகாரோக்கியத்துக்கு அனுகூல-மாகும். தேரையரும் 'உண்பதிரு பொழுதொழிய மூன்றுபொழுதுண்ணேம்' என்றனர்.

'ஒருபோது யோகியே ஒண்டளிர்க்கை மாதே
இருபோது போகியே யென்ப — திரிபோது
ரோகியே நான்குபோ துண்பான் உடல்விட்டுப்
போகியே யென்று புகல்.'

உழைத்தல் செய்தவுடனே உண்ணுதலும், உண்டவுடனே உழைத்தலும் ஆகா. உண்டபின் தாம்பூலந் தரித்தலால் உற்சாகம், ஜீர்ணவிருத்தி முதலான பல நன்மைகள் உண்டாவதாக நமது மருத்துவ நூல்கள் கூறுகின்றன. தாம்பூலந் தரிப்பது நமது தேசாசாரம். 'உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாங்கண்ணன்' என வருவதுங் காண்க. உண்டபின் அல்லது இடைவேளைகளில் தாம்பூலங் கொள்வது கூடாது 'ஊண் பாக்கொழிய வீண்பாக்காகாது' என்றது மூதுரை.

தாகம் என்பது தமிழில் நீர்வேட்கை எனப்படும். இது எல்லார்க்கும் இயல்பு. நீர்வேட்கையை வேறொன்றால் தீர்ப்பது ஆகாது. சிலர் நீர்வேட்கையை அடக்க மதுபானஞ் செய்கின்ற துராசாரத்தை மேற்கொள்ளுகின்றனர். 'எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பவர்.' 'தண்ணீரிலிறந்தவரினும் சாராயத்திலிறந்தவர் அதிகம்.' மதுபானம் சீதளமித மண்டல தேசாசாரம். அம்மண்டலத்தவரும் அதனை அமிதமாகக் கொள்வதை அநாசாரமாகக் கொள்கின்றனர். அவர்களுள்ளும் பலர் இப்பொழுது அதனைக் கடிகின்றவராகின்றனர். மற்ற துராசாரங்களோடு சேர்த்து 'இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறும் திரு நீக்கப்பட்டார் தொடர்பு' எனக் கூறியிருப்பது காண்க. 'குடி, சூது முதலிய குடியைக் கெடுக்கும்.'

**உறக்கம்** — புலி, சிங்கம் முதலிய சில வன விலங்குகள் மாத்திரமே புதல், குகை முதலிய இடங்களில் பகலில் ஒளித் துறைந்து உறங்கி யிருந்து இர-

வில் இரை தேடப் புறப்படும். பகற் குருடான கூகை முதலிய சில பக்ஷிகளும் பாழ்ம் பொந்துக ளில் தங்கியிருந்து இரை கொள்ள இரவில் வெளிப்படுகின்றன. மாலையானல் பக்ஷிகளெல்லாங் கூட்டில் அடைகின்றன; வன விலங்குகள் ஒரிட மடைந்து உறங்குகின்றன. சில விருக்ஷங்களும் இலையோடு இலை குவிந்து உறங்குவன போல்கின்றன. விருக்ஷங்களில் ஒரின மரம் தூங்குமூஞ்சி மரமென்றே பெயர் பெறுகின்றது. கள்வர், காவலாளர் முதலிய சிற்சிலர் தவிர மன்பதைகளும் இரவில் உண்டபின் உறங்கிவிடுகின்றனர். குக்ஷி பாதையின் பொருட்டுப் பகலில் உழைப்பதும் அவ்வுழைப்பின் அயர்ச்சியால் இரவில் உறங்குவதும் பொதுவில் ஜீவவர்க்கங்களின் பிரகிருதியாக இராநின்றது. யாதொரு அவசரநிமித்தமாக ஒரிராமுழுவதும் விழித்திருந்தவர்கள் மறுநாளில் தாங்கள் வழக்கமாகச் செய்யும் தொழிலைச் செய்ய இயலாமல் இடர்படுவது இயல்பு. சில தேசங்களிற் சில குற்றங்களுக்குக் கண்ணிரப்பையைச் சேதித்து விடுகிற தண்டம் விதிக்கப்படுகிறது. அவ்வித தண்டம் பெற்றவர் உறக்கம் பிடியாமல் சில நாளில் மரண மடைகின்றனர். இடை இடையில் ஆற விடாமல் எந்நேரமும் இயக்கப்படும் இயந்திரங்கள் விரைவில் பழுதடைந்து பயனற்றன வாகின்றன. ஆகவே இளைப்பாறி அயர்ந்து நித்திரை செய்வது ஜீவவர்க்கங்க ளனைத்திற்கும் அவசியம் என்பது தெளியப்படும். பகலில் தொழில் செய்துழைக்கும்போது சில தாதுக்கள் தேய்தலாய்க் கழிகடையாகின்றன. அவை இரவில் நாம் அயர்ந்து நித்திரை செய்கை-

யில், இரத்த வோட்டத்தினல் மறுபடியும் சரிவர நிரம்பி, மறு நாள் தேக உழைப்பிற்கு ஏற்றன வாகின்றன. உற்று நோக்கின், உறக்கமே, உழைத்-துப் பழுதுற்ற உடலைச் சீர்செய்யுஞ் சிற்பி; அன்-றாடம் மரித்தலான தாதுக்களை உயிர்ப்பிக்கும் சஞ்-சீவி; உழைப்பால் வந்த அயர்ச்சியைப் போக்கும் உத்தம பரிகாரி; வாடிய மேனியை மாற்றேற்றி மினுக்கிக் காட்டும் பரிசனவேதி. இரவைப் பக-லாக்கும் மாணாக்கர்க்கு உறக்கமே பகலை இரவாக்-கிக்கொடுக்கும் மாந்திரிகன்.

உறக்கத்துக் குரியகாலம் இரவே. 'உறங்குவ திராவொழியப் பகலுறக்கஞ் செய்யோம்' என்றார் தேரையர். பகலில் உறங்குவது நோய்க்கிடம். 'பகல்வளரார் நோயின்மை வேண்டுபவர்.' இரவி-லும் அர்த்த ஜாமம் உறக்கத்துக்கு மிகவும் இன்றி-யமையாதது. 'சேமம்புகினுஞ் சாமத்துறங்கு.' நள்ளிரவுக்கும் பின்னல் இரண்டு நாழிகை உறங்கு-வதினும் நள்ளிரவுக்கு முன்னல் ஒரு நாழிகை உறங்குவது உத்தமம் என்பது அங்கிலேயருக்கும் அனுபவம்.

அதிகமாக உறங்குவதும், சோம்பலுக்கும் அதனுலுளவாகின்ற குற்றங்களுக்கும் நோய்களுக்-கும் காரணமாகும். அதனலன்றோ 'அனந்தலா-டேல்' என்றார் ஒளவையார். 'கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகருணனுந் தோற்றுமுனக்குப் பெருந்-துயில்தான் தந்தானே, ஆற்ற வனந்தலுடையாய்' என்றவாறு வேண்டிய அளவுக்கு அதிகமாக உறங்குகின்றவர்களை நம்மவர்கள் மூதேவிக்கு உறை விடமாக உரைப்பர். 'நித்திரை சத்துரு (நேரிழை

சத்துரு)' என வழங்குவதும் அக்கருத்துப் பற்றியே யன்றோ? உறங்கு மளவானது, அவரவருடைய தேகநிலைமைக் கேற்றதாயினும், சராசரியில் ஏழுமணிநேரம் போதுமானதென்று சுகாதார நிபுணர்கள் உணர்த்துகின்றனர்.

'பொழுதோடு படுத்துறங்கிப் பொழுதோடு எழுவதால் ஆரோக்கியமும் ஐசுவரியமும் அறிவின் தெளிவும் உண்டாகும்' என்றது ஒரு அங்கிலேயப் பழமொழி. நமது மருத்துவ நூலும் அதிகாலையில் விழித்தெழுவதைக் குறித்து, ஒன்பது அல்லது பத்து மணிக்குப் படுத்துக் கொண்டால் நான்கு அல்லது ஐந்து மணிக்கு எழுதலாகும். அர்த்தராத்திரியில் விழித்துக் கொண்டு நெடுநேரம் தூக்கம் பிடியாமலிருப்பவர்கள் அதிகாலையில் விழித்தெழும் வழக்கத்தை அனுஷ்டிப்பாராயின், அங்ஙனம் நித்திரையின் இடையில் எழாமல் நல்ல நித்திரை செய்பவராவர். லௌகிக காரியங்களுக்கு உண்டாகிற இடையூறுகளாலும் வேறு மனக்கவலைகளாலும் உறக்கம் பிடியாதவர்கள், உறக்கத்தி னிமித்தம் சாராயமுதலிய லாகிரி வஸ்துக்களையும் பூரணாதி முதலிய லேகியங்களையும் உண்ணலாகாது. இயற்கையாய் உண்டாகிற நித்திரையே நன்மையைத் தரும். படுக்கும்போது அன்றுடம் செய்த குற்ற நற்றங்களை ஆராய்ந்து பார்த்து, அன்றன்றளவில் அடைதலான நன்மையின் பொருட்டுக் கடவுளை நமஸ்கரித்து நிச்சிந்தையாகப் படுத்துறங்குவதே நன்மை.

வயிறு நிறைய உண்ட பின்பு உடனே படுத்துறங்குதலால், அமைதியின்மை முதலிய துர்க்குணங்-

கள் உண்டாகும். ஒன்றும் உண்ணாமல் பட்டினியாக உறங்கப் புகுவதும் ஆகாது. கனவு காண்டல் முதலியன இன்றி, மெய்ம்மறந்து உறங்குவதே நல்ல உறக்கமாகும். பலபேர் படுக்கும் அறைகளிலும் மிகவுந் தாழ்வான அறைகளிலும் காற்றுத் தாராளமாகப் பரவுதலில்லாத அறைகளிலும் ஒதமான தரையிலும் படுத்துறங்குதல் தகாது. நில மட்டத்தில் அசுத்தவாயு அளாவியிருத்தலினாலே கட்டிலின்மேற் படுத்துறங்குவதே உத்தமமாம். பலகணி முதலியவற்றின் மூலமாய்க் காற்று நேராக உடலின்மீது வீசும் இடத்தில் படுத்தலாகாது. படுக்கை யறையில் மல்லிகைமுதலிய புஷ்பவகைகளும் மாரிகாலத்தில் கும்பி சட்டி முதலியவைகளும் இருத்தலாகாது.

## VIII. புலவர் நேர்மை

தாவாக் கலைத்திருவாற் றம்பிறரோ டின்புறவர்
நாவா லுலகை நடாத்துவர்—பூவாழ்வி
னேயு மரசருமொப் பெய்தாரே யீதறிஞ
ராயும் புலவர்நெறி யாம்.

புலமையுடையார் அறிவுடைய மன்னரையும், மாதர், கல்வி, அழகு முதலிய சிறப்பமைந்த புருடரையும், மல்லிகை முதலிய கொடிகள் மரங்களையும் பற்றி நிற்பின் விளக்கமுறுவர்எனப்படலால், கற்றறிந்த மேலோர் தன்னை அடுத்திருந்தும் அரசன் அவரது வறுமையைப் போக்கிப் பெருமையுண்டாக்கி அவரைப் போற்றிலனேல் அஃது அவனது மடமையை விளக்குமேயன்றி அதனால் அக்கல்வியா-

ளர்க்குக் குறைவாகாது. மணிகளின் குணமறியத் திறனற்ற ஒருவன், விலைபெற்ற சாதி மாணிக்கத்தைக் குறைபட மதிப்பனாயின் அஃது அவனது அறியாமையேயன்றி மணிக்குக் குணக்கேடாமோ?

'கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை'

என்றவாறு, கல்விப் பொருளுக்குஞ் செல்வப் பொருளுக்கும் நெடுவாசியுண்டு. எங்ஙனெனின்: செல்வம் அள்ளக்குறைவுறும்; கல்வி அதனைச்சொல்லச் சொல்ல நிறைவுறும். செல்வம் கள்வரால் அபகரிக்கப்படும்; கல்வி அவ்வாறாகாதுகற்றோரால் உபகரிக்கப்படும். செல்வம் துன்பத்தைக் கொடுக்கும்; கல்வி அத்துன்பத்தைக் கெடுத்து, இன்பத்தை மடுக்கும். செல்வம் எரியில் வெந்துபோம்; கல்வி தீ முதலியவற்றால் அழிவுறாது. செல்வம் வெள்ளத்தில் அடிபடும்; கல்வி கற்றோர்தம் உள்ளத்திற்குடிபடும். செல்வம் அபாயத்துள் மடுக்கும்; கல்வி அவ்வபாயத்தைத் தடுக்குமுபாயத்தைக் கொடுக்கும். செல்வம் பகையை உண்டாக்கும்; கல்வி அப்பகையினைப் போக்கும். செல்வம்நிலத்திற்புதைக்கப்படும்; கல்வி மனதிற் பதிக்கப்படும். செல்வம் நாளும் உருமாயும்; கல்வி நாளும் உருவேயும். செல்வம் தாயாதிகளாற் பாகித்துக் கொள்ளப்படும்; கல்வி அங்ஙனம் கொள்ளப்படாது. செல்வம் இவ்வுலகத்தே அழிவுறும்; கல்வி அவ்வாறு அழிவுறாது தன்னை யுடையவர்க்கு இந்நிலத்தில் எல்லா நலனும் அளித்துச் செல்லும் உலகத்தும் உடன் சென்று அவனை நற்கதியி லுய்க்கும். பலவாறுரைத்தலென்? கல்வி அன்னைபோல் ரக்ஷிக்கும்; தந்தைபோற்

சிக்ஷிக்கும்; மனைவிபோல் இன்பஞ் செய்யும்; மைந்தன்போற் பணிசெய்யும்; மற்றும் கற்பதருப்போல எதனைத்தான் பயவாது?

'ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து'

'கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே தீங்கவியாச் — சொல்வள
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்துஞ்
செல்வமு மூண்டு சிலர்க்கு'

எனப்படுவன அதனது சிறப்பு நோக்கியே யாம். இத்திறத்தபெருஞ்சிறப்புவாய்ந்தகல்வியைத்தமக்கு நிலைத்த பொருளாக வுடைய அறிவினரைப் போற்றுதல் அரசர் கடமை. அங்ஙனம் அப்புலவரைப் போற்றாது புறக்கணிப்பரேல் அதனால் அக்கல்வியாளர்க்கு யாது தீதுமின்று. அறிவினரைப் பகைத்தல் அரியபெரிய அல்லல் விளைக்கும். ஆதலின் எவரும் நற்கல்வியுடைய மேலோரைக் கோபப்படுத்தாது ஒழிக. காளமேகப் புலவரைச் சினமூட்டிய திருமலைராயன் புரம் அழிந்ததும், கவிச்சக்கரவர்த்தி யாகிய கம்பநாடரை எளிமைசெய்த சோழனுக்குற்ற சிறுமையும், புகழேந்தியாரைப் பகைத்த ஒட்டக்கூத்தர் பட்டபாடும், காளிதாசரை இழிவுரைத்த போஜராஜன் செய்தியும் உலகறியாதோ?

'பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்'

என்றபடி அறிவுடைய நல்லாரது நட்பை நழுவவிடுதல் பல்லாருடன் பகைத்தலினும் பதின்மடங்கு தீமை செய்யுமாயின் அன்னாரது பகையைத் தேடிக்-

கொள்ளல் எத்துணைப் பெருந் தீங்கிழைக்கும்! குணமென்னுங் குன்றேறி நிற்பவரான அவரது வெகுளி நிற்பது கணமேயாயினும் அதனினின்றும் தப்புதல் அரிதென்றாரே. விற்போரினும் மற்போரினும் சொற்போரே வலியுடையது. காவலரது கைச் சாபத்தினும் நாவலரது வாய்ச்சாபமே கடுமையுடையது. வில்லம்பினும் சொல்லம்பே வெம்மையுடையது. இதனை:

> 'வில்லம்பு சொல்லம்பு மேதினியி லம்பிரண்டாம்
> வில்லம்பிற் சொல்லம்பே வெய்யதாம்—வில்லம்பு
> பட்டதடா என்மார்பிற் பார்த்திபா நின்குலத்தைச்
> சுட்டதடா என் வாயிற் சொல்'

என்பதனாலும் அறியலாமே. இதுபற்றியே யன்றே, 'வைதவைவின் மராமர மேழ்தொளை யெய்த வெய்தவன்', 'சொல்லொக்குங் கடியவேகச் சுடுசரம்', 'வைதாலன்ன வாளிகள்' எனக் கம்பநாட்டாழ்வாரும், 'வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க, சொல்லே ருழவர் பகை' எனத் தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனாரும் கூறிப்போயினர்.

இடையறாதொழுகும் மதப் பெருக்கை யுடைய வாரணத்தை நுண்ணிய நூலிற் பிணித்திடல் எங்ஙனம் கூடும்? அதுபோல, மிகச்சிறப்புற்ற நிலைபெற்ற கல்விச்செல்வப் பெருக்கையுடைய மேலோரை நிலையற்ற பொருட்செல்வச் செருக்கையுடைய அரசர் யாது செய்யவல்லார்? இதனை இனிவருஞ் சரிதையா லறியலாம்.

ஸ்ரீ பக்திசாரர் என்னும் ஒரு மகாயோகி ஒருகால், 'முத்திதரும் நகரேழுள் முக்கியமாங் கச்சி'

எனச் சிறப்பித்துக் கூறப்படும் காஞ்சிமா நகர் அடைந்து, அங்கு வெஃகாவிற் றுயிலமர்ந்த வித்தகனை பரமனைப் பத்திசெய்து, அயற்கணுள்ள பொய்கைக் கரையில் யோகத்து அமர்ந்தனர். அக்காலை, அவரது பேரருளாற் றோன்றிய கணிகண்ணர் என்பவர் அவர்தம் அடியை அடைந்து அவர்க்குத் தொண்டு பூண்டொழுகாநிற்க, ஆங்குப் பருவம் முதிர்ந்த பரத்தை யொருத்தி பக்திஸாரரது பாதமடைந்து, பத்தியோடு பணிவிடை புரிந்து வந்தனள். ஒருநாள் யோகத்தமர்ந்த அப்பெரியார் தமதருட்கண் விழித்து நோக்கி, அவளது பத்திக்குத் திருவுள முவந்து, 'நினக்கு விருப்பம் யாது?' எனக் கேட்டருள, அவள், 'அடிகேள்! அடியேனுக்கு இம்மூப்பு ஒழிந்து, இளமை யெய்துமாறு அருள் புரிக' என்று வேண்டி நிற்க, அவர், 'அங்ஙனமே ஆகுக' என்றருளுதலும், அவள் உருவுந் திருவுமிக்க பதினேழாட்டைப் பருவத்துப் பாவையர்க் கரசியாய் விளங்கினள். அவளது அன்ன நடையும் மின்னினிடையும் மானின் விழியும் தேனின் மொழியும் பூந்தொடை வேய்ந்த கூந்தலும் ஒண்ணுதன் மகளிர்தம் கண்ணையும் கருத்தையும் கவரத்தக்கனவா யிருந்தமையின், அந்நகரை யாண்ட மன்னவனை பல்லவராயன் அவள்மீது விருப்பங்கொண்டு அவளை மணஞ்செய்து கொண்டான். ஒருநாள் பல்லவன் தனக்கு மூப்பு மேலிடுதல் கண்டு தன் காதலியை நோக்கி, 'நினக்கு இம்மாறு இளமை கைவந்த தெங்ஙனம்?' என, அவளும் முனிவரருளாற் பெற்ற பெற்றியை மொழிந்து, 'நீ நிச்சலும் நின்னகத்தி உபதானங்கொள்ள

வரும் கணிகண்ணரை வேண்டினையாயின், அவரது சார்பால் அவர்தம் ஆசிரியரான பத்திஸார முனிவ-ரது அருள்பெற்று இன்னதோரிளமை யெய்தலா-கும்' என்றனள். அரசனும் பொய்யின்பந் துய்த்-தலிற் புத்தி கொண்டவனாதலின் கணிகண்ணரை யழைத்து, 'நும்மாசிரியரை யாம் சேவிக்கலாம்படி அவரை எம்மில்லத்திற்கு எழுந்தருளச் செய்ய வேண்டும்' என்று வேண்டக் கணிகண்ணரும் வேந்தனை நோக்கி, 'எம்மாசிரியர் எவரிடத்தும் எழுந்தருளார்' எனவே, அரையன், 'ஆயின், நீரேனும் எம்மேற் கவிபாடுக' என, அவர்,

'வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவியேனல்லேன்
ஆய்கொண்ட சீர் வள்ளலாழிப் பிரானெனக்கே யுளன்
சாய்கொண்ட விம்மையுஞ்சாதித்து வானவர் நாட்டையும்
நீ கண்டுகொள்ளென்று வீடுந்தரு நின்று நின்றே.'

என்றமையால், யாம் நரஸ்துதி செய்ய கில்லோம். யாம் செய்ய உடன்படினும் எமது நா உடன்-படாது கண்டாய்' எனலும், பல்லவன், 'நீர் நரஸ்துதி செய்யீராயினும் எம்மைமட்டுமேனும் பாட வேண்டும்' என்று நெருங்கிவேண்டவே, அவர், 'ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும், பாடகமு மூரகமும் பஞ்சரமா - நீடியால், நின்று னிருந்தான் கிடந்தா னிதுவன்றோ, மன்றூர் மதிட் கச்சி மாண்பு' என்று பாடினார். அது கேட்டு அரசன், 'நீர் எம்மைப்பாடாது இங்ஙனம் பாடிய தென்னை?' என்று சினந்து அவரைத் தனது நாட்டைவிட் டேகுமாறு ஏவினன். அவரும் அச்-செய்தியைத் தம் ஆசிரியரான பக்திஸாரர்க்கு விண்-ணப்பஞ் செய்ய, அவ்யோகி கணிகண்ணரை

நோக்கி, 'நீர் செல்வீராயின் யாமிங்கிருப்போமோ? யாம் அகல்வோமாயின் வெஃகாவி னெம்பெருமான் இங்குக் கண்டுயில்வானோ? அவனும் புறப்படவே, மற்றைப் பிரமன் முதலிய தேவர் இங்குளராவரோ? ஆயினமையின், இறைவனையும் எழுப்பி உடன்கொண்டு வருவேன்' என்று ஆண்டுச் சென்று, வெள்ளிமலைமேலே யொரு நீலமலை போலே அநந்தன் மிசை அறிதுயி லமர்ந்தருளும் ஆதியம் பரமனடியைக் கிட்டி, 'கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி, மணிவண்ணா நீ கிடக்க வேண்டா — துணிவுடைய, செந்நாப் புலவனியான் செல்கின்றே னீயுமுன், பைந்நாகப் பாய் சுருட்டிக்கொள்' என்று விண்ணப்பஞ் செய்தலும், அப்பெருமானும் அங்ஙனமே அவரைப் பின்றொடர அந்நகரத்து ஆலயங்களிலுள்ள கடவுளரும் உடன் செல்ல, முன்னும் ஐயன் வனஞ்செல்ல, அயோத்தி பொலி வழிந்தமையே போல அந்நகரும், கயங்கள் நீர் சுவறி, காவிற்றருக்களும் வாட்டமுற்று, உதபாஸ்தமனமின்றி, இருள் மூடிப் பொலிவழிந்தமையை அரசனும் கண்டு, அமைச்சர் முதலோரோடு சென்று, இறைவன் ஓரிரவு தங்கிய காரணம் பற்றி ஓரிரவிருக்கையென வழங்கும் இடத்திற் கணிகண்ணரைப் பணிந்து குறையிரந்து வேண்ட, அவரும் தம் ஆசிரியர்பால் அதனை விண்ணப்பஞ்செய்ய, அம்முனிவர் அவரது விண்ணப்பத்திற்கு அருள் கூர்ந்து, அடியருக்கெளியனென சொன்ன வண்ணஞ் செய்த தேவனை அடிதொழுது, 'கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி, மணிவண்ணா நீ கிடக்கவேண்டும் - துணிவுடைய, செந்நாப் புல

வனியான் செல்லகில்லே னீயுமுன், பைந்நாகப் பாய்விரித்துக் கொள்' எனவேண்ட, அப்பிரானும் அவர் சொன்னவண்ணமே செய்து அக்காஞ்சிமாநக ரில் அமர்ந்தருளினன். ஆதலின் நல்லறிவாளரைப் பகைத்து உய்ந்தபோனா ரொருவருமிலர். பிரம-னுக்குத் தன் வாகனமான அன்னத்தின்மேற் கோ-பம் பிறந்தால் அது களித்து விளையாடும் தாமரை யோடையை நீர் சுவறச்செய்தலன்றி அதனுக்கியற்-கையான க்ஷீர நீரங்களைப் பிரிக்கும் சக்தி சாதுரியங்-களைப் போக்குதல் இயலாதன்றே. அன்னணமே புரவலர்க்குப் புலவர்மேல் சினமுண்டாயின் அவ-ரைத் தந்நாட்டினின்று நீக்கலன்றி அன்னார்க்குரிய கல்வியறிவைப் போக்கலியையுமோ?

வானவில்லை மானும் தோள் வளையங்களும், சந்திரன்போல விளங்கும் முத்துமாலைகளும், பனி நீரின் நானமும், கலவைப் பூச்சும், முடியிலணியும் மலர்களும் ஒருவனுக்கு அழகு செய்வனவாமோ! இலக்கண முதலிய நூல்களால் தூயதாகவும் தன் வயத்ததாகவுஞ் செய்யப்பட்ட நற் கல்வி யொன்-றுமே பேரழகு செய்வதாம்.

> 'கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லான்
> மற்றோ ரணிகலன் வேண்டாவாம்'

முழுமணிப் பூணுக்குப் பூண் வேண்டுமோ? பொன்னின் குடத்துக்குப் பொட்டிட்டுப் பார்ப்பா-ருண்டோ? 'யாரே யழகுக்கழகு செய்வார்?' பொன்னையும் மணியையும் பூணும் மன்னவர் அவற்றை யணியாத மன்னிய புலமையோரை மானுவரோ? பொன்னணியும் பிறவுறுப்புக் கண்-மணியை நிகர்க்குமோ? ஆரகேயூராதியணிகள்

சின்னாளிருந்து பின்னாலழிவுறும். வித்யாபூஷணமோ எந்நாளும் நிலைபெறும். புருடனுக்கு நீதி முதலிய வித்தையே அழகிய ரூபமாம். அதுவே உலகினரை இன்புறுத்துவது. கல்வியே புதைத்த பொருள்-போலக் காலாந்தரத்தி லுதவுவது. கல்வியே பல-வகை இன்பங்களையும் அவற்றிற்குச் சாதனங்களையுங் கொடுப்பது. கல்வியே அழியாப்புகழை யளிப்பது. கல்வியே பரமானந்தத்தைப் பயப்பது. கல்வியே வேற்றுநாடுகளில் உறவினர்போலப் பல்லுபசாரமும் புரிவது. கல்வியே உற்றுழி உதவுவது. மற்றுங் கல்வியே வேந்தரவைக்கண் வீறடைவது. செல்வம் இவ்விதமேன்மையினை யெய்துவதொன்றன்று. ஆத-லின், கல்வியே விழுமிய பொருளாம். இத்தகைய நற்கல்வி யில்லாதான் பசுவெனப் படுவான்.

பகைவர் எறியும் ஆயுதங்கள் உடலிற் பாய்ந்து ஊறுசெய்யாதொழிய அவற்றைத் தடுக்குங் கவசம் போல ஒருவனுக்குப் பொறுமையுளதேல் அது, பிறர் சொல்லுங் கடுஞ்சொற்கள் நெஞ்சிற்றைத்து வருத்தாவண்ணம் அவனைக் காக்குமாதலின், அப் பொறையினும் கவசம் யாது செய்யவல்லது? பகைஞர்போல மனத்திற்குப் பெருந் துன்பம் விளைக்கும் கோபமுளதாயின், அதனினும் அவ் வொன்னல ரிழைக்கும் இன்னலியாது? நெருப்புப் போல எல்லாப் பொருளையும் நாசப்படுத்தும் தாயத்தாருளராயின், அவரினும் தீப்புரியத்தக்க தீமை யாது? ஆரோக்கியத்தை யளிக்கும் மருந்து போல ஒரு மித்திரனுளனாயின், அந்த ஔடதத்தா லாகும் பயனியாது? தனது விடத்தாற் பிராணிக-ளைக் கொடிய அரவம்போலத் துர்ச்சன ருளரா-

யின், அவ்வரவினலவருந் தீங்கென்னே? பல இன்பங்கட்குக் கருவியாய பொருள்போலச் சிறந்த கல்வியுளதாயின், அச் செல்வத்தா லாவதென்னே? உயர்ந்த அணிபோல அழகுசெய்யவல்ல நாணமுளதேல், அவ்வணிகலனுளதாம் அழகியாது? யாவரையும் வயங்கொள்ளும் செங்கோன்மை போலக் கவித்திறமை யுண்டாயின், அவ்வரசியலாலாவதென்? அன்றியும், தமர்கள் தாற்றுவண்ணம் அவர்பாற் கண்ணோடி அவரது கருத்தைப் பின் செல்லுகையும், அடிமைகள் தீங்குறுவாறு அவரது வறுமைப்பிணியைப் போக்கவல்லதோர் தயையும், தம்மை மீறிச் செல்லாவகை மூர்க்கரை அடக்கலும், சாதுக்கள் மனம் வருந்தித் தவிக்கா வண்ணம் அவர்பால் ஆதரமும், பண்டிதர் தம்மை யிகழ்ந்து தள்ளாதபடி அவர்முன் மனமொழி மெய்களில் ஒத்து நடத்தலும், பகைவர் தம்மை வெற்றிகொண்டு கீழ்ப்படுத்தாது அவரெதிரில் ஆற்றலும், தம்மை முதலறக்கெடச் சபிக்காதபடி குரவரிடத்துப் பொறுமையும் ஆகிய இப் பெருங் குணங்கள் எவர்பாலுள்ளனவோ, அவரே உலகினர்க்கு இந் நற்குணங்களைப் போதிக்கத் தக்கார். மேலும், பெரியாரது சேர்க்கை புந்தியின் மந்தத்தைப் போக்கும். வாக்கில் சத்தியத்தை நிறுத்தும். யாவரிடத்தும் நன்கு மதிப்பை உண்டாக்கும். அறத்தைப் போதித்து மறத்தைச் சேதித்துவிடும். ஞானத்தைக் கொடுத்து ஈனத்தைக் கெடுக்கும். எல்லாத் திசையிலும் நல்லிசையைப் பரப்பும். இன்னம், அறிவுடையாரோடு பழகுதல் மனிதர்க்கு வேறெந்த நன்மையைத்தான் பயவாது? இத்

தகைய பெருஞ் சிறப்பமைந்தவரும், புண்ணிய-வான்களும், ரவிகருமாகிய புலவர் எஞ்ஞான்றும் எவ்விடத்தும் வெற்றிபெற்று வாழக்கடவர். அன்-ஞரது புகழுடம்பிற்கு நரை திரை மூப்புப் பிணி மரணங்களால் யாதும் அச்சமில்லை.

பாடசாலை வருஷோத்சவ முதலிய காலங்களில்

உபயோகித்தற்கான

# நாடக பாடம்

# குமணன்

(ஒரு நவீன நாடகம்)

இடம் — அரசன் அவைக்களம்

காலம் — முற்பகல்

**குமணன்** — (அமைச்சரை நோக்கி)

கடல்புடை யுடுத்த கண்ணக னுலகில்
மன்னிய மாந்தர்க் கின்னுயி ரெனவும்
மருவிய வுறுப்பின் இருவிழி யெனவும்
சுருங்கலி லொளியார் அருங்கல னெனவும்
நீடிய நல்லோர் நாடிய நிற்பது
அரும்பெறற் கல்வியே அரும்பெறற் கல்வியே
அதுதான் —
இம்மைப் பயனும் அம்மைப் பயனும்
எளிதி னியற்றும் அளியின தாகும்
நொந்த மனத்தின் வந்துறு மூவகையாம்
அகவிருள் நீக்கும் தகவுறு ஞாயிறும்
இறவாப் புகழை எழுமையும் நிறுவும்
பாவம் போக்கும் பண்பினை யாக்கும்
அறிஞர்ச் சேர்க்கும் அல்லவர்த் தீர்க்கும்
மன்னரை வணக்கும் மடமையை யுணக்கும்
அதான்று —
அறப்பெருங் கருணைக் கறிவே யுருவாம்

அதனால் —

கற்றா ருருவம் கடவு ளுருவே
கற்றார்க் காண்டல் கடவுட் காண்டலே
கற்றார்ப் பழிச்சல் கடவுட் பழிச்சலே
கற்றார்க் கடங்கல் கடவுட் கடங்கலே
கற்றார்த் தேடல் கடவுட் டேடலே
கற்றார்க் கீதல் கடவுட் கீதலே
கவிஞரைக் காணான் கடவுளைக் காணான்
கவிஞரைப் பரவான் கடவுளைப் பரவான்
கவிஞரைப் பழிச்சான் கடவுளைப் பழிச்சான்
கவிஞருக் கடங்கான் கடவுளுக் கடங்கான்
கவிஞரைத் தேடான் கடவுளைத் தேடான்
கவிஞருக் கீயான் கடவுளுக் கீயான்

அதனால் —

இருநிதி வழங்கி அருங்கவி வாணர்
குறைநிறை வித்தே இறைவனை வாழ்த்தி
செங்கோ லோச்சும் மங்கல வரசே
அரசெனப் படுமால் அமைச்சன் மீரே

அமைச்சர் — (வேந்தனை வணங்கி)

ஆ அதற் கையம் ஒதவு முளதோ
ரவியறி யாவிடம் கவியறி யும்மே
ஆதலி னன்னரை ஒதுதன் முறையே.

புலவர் — (அரசனை யணுகி)

(முதற் புலவர்)

ஒல்காச் சீர்த்தி மல்கிய குமண
மன்னிய நின்மேல் நன்னயம் பெருக
வந்தா தரிக்கும் வரகுண வள்ளலென்
றந்தாதி யொன்றிங் கறைந்தன னரசே

(இரண்டாம் புலவர்)

கிஞ்சுக மொழிக்குக் கஞ்சுகம் வேண்டிப்
பஞ்சகம் பாடிப் பரிந்தனன் பண்ப!

(மூன்றாம் புலவர்)

பாவையென் சிறுமி பருமண முடிக்கக்
கோவையா வொருநூல் கோத்தனன் கோவே!

(நான்காம் புலவர்)

ஊச லாட்டும் உறுங்கவ லொழிக்கவென
றாசனால் யாத்திங் குற்றன னிறைவ!

(ஐந்தாம் புலவர்)

மாலை மாற்றும் மாலையொப் பாய்சொல்
மாலைமாற் றீது மகிழ்ந்தணி வள்ளால்!

(ஆறாம் புலவர்)

நிலம்பகு திக்கு நேரடை வதனால்
கலம்பகம் பாடிக் கண்டனன் காவல!'

**குமணன்** — (புலவரை நோக்கி)

சின்னாள் வாழ்வும் பல்பெரும் பிணியும்
கொண்ட மாந்தரை அண்டிப் புகழ்தல்
என்னே என்னே என்னே என்னே
செல்வஞ் சிறந்தும் தினையள வீயாப்
புல்லரில் லத்தைப் பலகா லணுகி
நின்று நின்று நெடும்பனை யாகி

அற்றம் பார்த்தே ஆவயி னடைந்தே
இச்சகம் பலவும் இசையிற் பேசி

விச்சை யனைத்தும் வீணே யாக்கி
சிச்சி யிஃதோர் தேக மேனெனக்
கருத்து மிளைத்துக் காலு மிளைத்து

இலவு காத்தே எய்த்திடுங் கிள்ளையாய்
வாடி நிற்கும் வண்டமிழ்ப் புலவீர்
நும்மறி வீதோ நுண்ணறி வீதோ
கற்ற கலையின் கருத்து மீதோ
என்னரும் புலவீர் பன்னுவல் கேண்மோ —

அந்தாதி யில்லாற் கந்தாதி யறைமின்
பஞ்சாக் கரற்கே பஞ்சகம் பாடுமின்
பாவைபங் கற்கே கோவை கூறுமின்
ஊசலாட் டயிரவற் கூச லுரைமின்
மாலைமாற் றுவாற்கே மாலைமாற் றிசைமின்

சிலம்பகத் தவற்கே கலம்பகஞ் செப்புமின்
பாடப் பாடப் பயன்தரு வானே
வண்மை தருவான் வாழ்நாள் தருவான்
இல்லந் தருவான் எல்லாந் தருவான்
பெண்மை நிறைந்த பெண்டிரைத் தருவான்

பண்புறு மைந்தரைப் பாங்கிற் றருவான்
பீடு தருவான் பின்னாள் தனனில்
வீடு தருவான் விரைந்து பாடுமின்
புகழி னுடம்பைப் புவியில் நாட்டுமின்.

**புலவர்** — (குமணனை நோக்கி)

உண்மை நெறியே யுரைத்தனை யுரைத்தனை
நான்மறை முடிவில் நாடிய துரைத்தனை
பசியே பரமனைப் பாடா தொழித்தது

வறுமையே வரதனை வாழ்த்தா தொழித்தது
இன்மையே யிறைவனை ஏத்தா தொழித்தது
செல்லலே சிவனைச் சிந்தியா தொழித்தது
அல்லலே யரனை அறியா தொழித்தது
நல்குர வரனை நணுகா தொழித்தது
தரித்திரந் தலைவனைத் தரிசியா தொழித்தது
இன்ப வுருவனைத் துன்பந் தொடருமோ
சாமி யில்லையேல் சாமியு மில்லையால்.

குமணன் — (புலவரை நோக்கி)

அந்தோ அந்தோ அருங்கவிப் புலவீர்!
வறுமையான் வாடி வந்தனிர் நீரே
வெறுக்கையை யின்னே வெறுக்கக் கொண்மின்
செல்ல லொழியச் செல்வங் கொண்மின்
ஆசை தீரவே ஆசை கொண்மின்.

(பின்னர் அமைச்சரை நோக்கி)

முன்னுற வருவ முன்னுற மொழியும்
நன்னய மதியின் மன்னிய வமைச்சர்காள்
இக்கவி வாணர்க் கியன்றன யாவும்
தக்கண மீந்து தகவுற வனுப்புமின்.

அமைச்சர் — (புலவரை நோக்கி)

மன்னிய சீர்சால் இன்னிசைப் புலவீர்
ஈண்டு வருக ஈண்டி வருக
சித்திரப் பட்டின் வத்திரங் கொண்மின்
அரதனப் பைம்பூண் அணியிவை கொண்மின்
பரிக்க லாற்றுப் பறியுங் கொண்மின்
இல்லெனுஞ் சொல்லினி இல்லா தொழிமின்.

புலவர் — (பரிசு பெற்று மன்னனை யணுகி)

மன்னர் மன்ன வளநிதி பெற்றோம்
இன்ன லொழிந்தோம் இன்ப மடைந்தோம்
இறைவ வாழி ஏந்தால் வாழி
மன்ன வாழி வள்ளால் வாழி
வாழி வாழி வாழிநின் வளம்பதி
வாழி மனையும் வாழி மக்களும்
வாழி கிளைஞர் வாழி —
வண்மை யமைச்சரும் வாழி வாழியவே.

177533

The End.

Printed at the 'Caxton Press', Madras, E. — 1915.

## ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

### பாட புத்தகங்கள்

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| முதல் பாட புத்தகம் ... ... | 0 | 1 | 0 |
| இரண்டாம் பாட புத்தகம் ... ... | 0 | 2 | 6 |
| மூன்றும் பாட புத்தகம் ... ... | 0 | 3 | 0 |
| நான்காம் பாட புத்தகம் ... ... | 0 | 4 | 0 |
| ஐந்தாம் பாட புத்தகம் ... ... | 0 | 5 | 0 |
| ஆறும் பாட புத்தகம் ... ... | 0 | 5 | 0 |
| ஏழாம் பாட புத்தகம் ... ... | 0 | 5 | 0 |
| எட்டாம் பாட புத்தகம் ... ... | 0 | 8 | 0 |
| ஒன்பதாம் பாட புத்தகம் ... ... | 0 | 8 | 0 |

### திராவிட வாசகங்கள்

| | | | |
|---|---|---|---|
| திராவிட பால பாடம் ... ... | 0 | 1 | 0 |
| முதல் திராவிட வாசகம் ... ... | 0 | 2 | 0 |
| இரண்டாம் திராவிட வாசகம் ... ... | 0 | 2 | 6 |
| மூன்றும் திராவிட வாசகம் ... ... | 0 | 3 | 0 |
| நான்காம் திராவிட வாசகம் ... ... | 0 | 4 | 0 |

### நூதன வாசக புஸ்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| நூதன முதல் வாசக புஸ்தகம் ... | 0 | 2 | 0 |
| நூதன இரண்டாம் வாசக புஸ்தகம் ... | 0 | 2 | 6 |
| நூதன மூன்றும் வாசக புஸ்தகம் ... | 0 | 3 | 0 |
| நூதன நான்காம் வாசக புஸ்தகம் ... | 0 | 4 | 0 |

### கணித புத்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| புதுச் சட்டக் கணிதம் 4 ஆம் வகுப்பு ... | 0 | 5 | 0 |
| புதுச் சட்டக் கணிதம் 3 ஆம் வகுப்பு ... | 0 | 3 | 0 |
| புதுச் சட்டக் கணிதம் 1-2 ஆம் வகுப்பு ... | 0 | 1 | 6 |

புத்தக வியாபாரிகள், 35, சின்னதம்பித் தெரு, சென்னை.